தமிழ் நாடு
சட்டமன்ற மேலவை விதிகள்

TAMILNADU CATTAMANRA
MELAVAI VITIKAL.

[இந்திய அரசியலமைப்பின் 208 (1) பிரிவின்படி
இயற்றப்பட்டவை]

By

(1973 நவம்பர் வரை திருத்தப்பட்டவை)

Tamilnadu.

©
தமிழ் நாடு அரசு
1973

சட்டமன்ற மேலவைத் துறை
சென்னை-9

PUBLIC LIBRARY
9 - DEC 1973
MADRAS

முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் சட்ட மன்ற மேலவை விதிகளை இயற்றும் பொருட்டு, 1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள், சட்ட மன்ற மேலவையினால் ஒரு குழு அமைக்கப் பட்டது. அக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விதிகள் 1954 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று மேலவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1954 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்தன.

இவ் விதிகளில் 1962, 1966, 1972 ஆம் ஆண்டுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் மேலவையினால் அமைக்கப்பட்ட விதிக் குழு ஆங்கிலத்திலுள்ள விதிகளைத் தமிழாக்கம் செய்வதென முடிவு செய்தது. விதிகளின் தமிழாக்கமும் குழுவின் அறிக்கையும் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று அவை முன் வைக்கப்பட்டன. மேலவை விதிகளுக்கு அதிகாரபூர்வமான தமிழாக்கம் செய்யப்படுவது இதுவே முதன் முறையாகும்.

கி. மு. அழகர்சாமி,
செயலாளர்.

கோட்டை,
சென்னை-9,
3-12-1973.

CONNEMARA PUBLIC LIBRARY
9-DEC 1973
MADRAS

9-DEC 1973
MADRAS

பொருளடக்கம்

விதி எண். பக்கம்.

அத்தியாயம் 1

குறுந்தலைப்பும் சொற்பொருள் விளக்கமும்

1	குறுந் தலைப்பு	1
2	சொற்பொருள் விளக்கம்	1

அத்தியாயம் 2

மேலவையைக் கூட்டுதல், உறுப்பினர் பதிவேடு, உறுதிமொழி மற்றும் உறுப்பினர் இருக்கை

3	மேலவையைக் கூட்டுதல்	5
3அ	உறுதி மொழி	5
3அஅ	உறுப்பினர் பதிவேடு	5
3அஅஅ	உறுப்பினர் இருக்கை	5

அத்தியாயம் 3

தலைவர், துணைத்தலைவர் தேர்தலும் மாற்றுத் தலைவர்களின் நியமனப் பட்டியலும்

4	தலைவர் தேர்தல்	5
5	துணைத் தலைவர் தேர்தல்	7
6	மாற்றுத் தலைவர்கள் பட்டியல் ..	9
7	தலைமை வகிப்பவரின் அதிகாரங்கள்.	9

அத்தியாயம் 4

ஆளுநர் உரை.

விதி எண்.		பக்கம்.
8	ஆளுநர் உரை.	9
9	உரையின்மீது விவாதம்.	10
9 அ	உரை விவாதத்திற்கு முன்பு எடுத்துக் கொள்ளப்படும் மற்ற அலுவல்கள்.	10
10	ஆளுநரின் மறுமொழி	10
11	உரை மீதான விவாத விதிகள் ..	10
12	ஆளுநர் உரையின் போது அவையின் ஒழுங்கைக் காத்தல்.	11
13	மேலவையின் கூட்டத் தொடரை முடித்து வைத்தல்.	11

அத்தியாயம் 5

வருகைப் பதிவேடு, வராமைக்கான அனுமதி வழங்குதல், பதவி காலியாதல்

14	வருகைப் பதிவேடு	11
15	வராமைக்கான அனுமதியும் பதவிகள் காலியாதலும்.	12

அத்தியாயம் 6

மேலவைக் கூட்டங்களும் அதன் அலுவல் அமைப்பு முறையும்

16	கூட்டங்களை ஒத்திவைத்தல் ..	12
17	கூட்ட நாளில் மாற்றம்	12
18	குறைவெண்	12
19	குறைவெண் இன்மையால் ஒத்திப் போடல்.	12

9-DEC 1973
MADRAS

விதி எண்.		பக்கம்
20	மேலவைக் கூட்டங்கள்	13
21	அலுவல் பட்டியல்	13
22	வினா நேரம்	13
23	தனி உறுப்பினர் அலுவலுக்கு நேரம் ஒதுக்குதலும் அதற்கு முதலிடம் அளித்தலும்.	13
24	அரசு அலுவல் வரிசை முறை ..	14
25	தனி உறுப்பினர் அலுவல் வரிசை முறை.	14
26	மேலவைக்கு முன்னறிவிப்பு ..	16
27	உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் அறிக்கைகளும் அறிவிப்புகளும்.	17

அத்தியாயம் 7

வினாக்கள்

28	வினாக்களின் பொருள் ..	17
29	உடுக்குறியிட்ட, உடுக்குறியிடாத வினாக்கள்.	17
30	வினா உடுக்குறியிட்டதா, இடாததா என்பதைத் தலைவர் முடிவு செய்தல்.	17
31	வினாவிற்குரிய பொருள் ..	18
32	வினாக்களின் அமைப்பு முறை, பொருளடக்கம்.	18
33	ஒரே பொருள் பற்றிய வினாக்கள் ..	20
34	வினாக்கள் அனுமதிப்பதைத் தலைவர் முடிவு செய்தல்.	20
35	வினாப் பட்டியல் ..	20
36	உடுக்குறியிட்ட வினாக்களை எடுத்துக் கொள்ளுதல்.	21

விதி எண்.		பக்கம்
37	நீண்ட அறிக்கைகள் அல்லது புள்ளி விவரங்கள் கோரும் வினுக்கள்.	21
38	வினவும் முறை ..	21
39	துணை-வினுக்களும் அவைகளை அனுமதித்தலும்.	21
40	வினு, துணை வினுவிற்கு விடையளிக்க மறுத்தல்	22
40அ	குறுகிய கால வினுக்கள் —	22
41	விவாதக் கட்டுப்பாடு ..	23
41அ	அரை மணி நேர விவாதம் ..	23

அத்தியாயம் 8

42	அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களின் மீது கவன ஈர்ப்பு.	24

அத்தியாயம் 9

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்

43	ஒத்திவைப்புத் தீர்மானம் ...	26
44	அவையின் அனுமதி கேட்க தலைவரின் இசைவு.	26
45	தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி தலைவர் முடிவு செய்தல்.	26
46	தீர்மானத்தைத் தள்ளுபடி செய்தல்	26
47	அவையின் அனுமதி	26
48	அவையின் அனுமதி கேட்பதற்கான முறை	27

விதி எண்.		பக்கம்
49	தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான நேரம்.	27
50	தீர்மானங்களைத் திரும்பக் கொண்டு வருதல்.	27
51	தீர்மானங்கள் கொண்டு வருவதற்கான வரையறைகள்.	27
51 அ	விசாரணைக் குழு, ஆணைக் குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்.	28
52	விவாதத்திற்கான கால வரையறை	28

அத்தியாயம் 10

தலைவர் அல்லது துணைத் தலைவரை நீக்குவதற்கான தீர்மானம்.

53	தலைவர் அல்லது துணைத் தலைவரை நீக்குவதற்கான தீர்மானம்.	29
54	விவாதத்திற்கான காலம்	29
55	அவையின் அனுமதி	29

அத்தியாயம் 11

பதவி விலகிய அமைச்சரது விளக்கம்

56	அமைச்சர் பதவியிலிருந்து விலகிய உறுப்பினரின் விளக்கம்.	29

அத்தியாயம் 12

நிர்வாகம் பற்றிய அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசரப் பொருள்கள் குறித்து குறுகிய கால விவாதம்.

57	விவாதம் எழுப்புவதற்கான முன்னறிவிப்பு.	30
58	அனுமதித்தலை தலைவர் தீர்மானித்தல்.	30
59	அனுமதிக்கான வரையறைகள்.	31

அத்தியாயம் 12-அ

விதி எண்.		பக்கம்
	நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்கள்	
60	பொது நலன் குறித்த பொருள் பற்றிய விவாதம்.	31
60அ	தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு	31
60ஆ	தீர்மானத்தை அனுமதிப்பதற்கான வரையறைகள்.	32
60இ	தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி தலைவர் முடிவு செய்தல்.	32
60ஈ	விசாரணைக் குழு, ஆணைக் குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்.	32
60உ	நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்களை சுற்றனுப்புதல்.	33
60 ஊ	தீர்மானங்களின் மீதான விவாதமும், நேரம் ஒதுக்கலும்.	33
60எ	குறிப்பிட்ட கால முடிவில் தலைவர் வாக்கெடுப்புக்கு விடுதல்.	33

அத்தியாயம் 13

61	மேலவையின் அலுவல் மொழி	33
63	அவையில் இருக்கும்போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.	34
64	உறுப்பினர்கள் எழுந்து நின்று உரையாற்ற வேண்டும்.	34
65	விளக்கங்கள்	35
66	விவாத வரம்புகள்	35
67	உரையாற்றுகையில் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.	35

விதி எண்.		பக்கம்
68	தீர்மானம்	35
69	தீர்மானங்களை வழிமொழிதல் ..	36
70	உரையாற்றும் வரிசை முறை ..	36
71	வாக்கெடுப்பு முறை ..	36
72	தீர்மானங்களின் வரையறைகள்	38
73	தீர்மானங்களைத் திரும்பப்பெறல்	38
74	பதிலுரை ஆற்றும் உரிமையும், இரண்டாம் முறை உரையும்	39
75	பதிலளிக்கும் உரிமை ..	39
76	திருத்தங்கள் பற்றிய விதிகள் ..	40
77	விவாதிப்பதற்கான திருத்தங்களைத் தேர்ந்தெடுத்தல்.	40
78	விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரல்.	40
79	ஒத்திவைப்பு.	41
80	உரையாற்றும் நேரம் ..	41
81	தன்னிலை விளக்கம் .	41
82	அமைச்சரின் அறிக்கை ..	42
83	ஒழுங்குப் பிரச்னைகள் மீதான முடிவு	42
84	ஒழுங்கைப் பேணுதல் ..	42
85	கூறியதையே கூறல் அல்லது பொருத்த மற்றதைக் கூறல்.	42
86	உறுப்பினரை வெளியேற்றும்படிக் கட்டளையிடல்.	43
87	கூட்டத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரம்.	43

அத்தியாயம் 14

சட்டமியற்றல்.

பிரிவு 1—மேலவையில் முதலில் துவக்கப் படும் சட்ட முன் வடிவுகள்

88	அறிமுகப்படுத்துவதற்கான முன் னறிவிப்பு.	43
89	நிதிக் குறிப்பும் செலவினப் பிரிவு களின் விளக்கமும்.	44

விதி எண்.		பக்கம்
90	சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு அடங்கியுள்ள சட்ட முன்வடிவுகளுக்கு விளக்கக்குறிப்பு.	44
91	சட்ட முன்வடிவுகளுக்கு பரிந்துரை அல்லது முன் இசைவு.	44
92	சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானம்.	44
93	வெளியிடுதல்	45
94	சட்ட முன்வடிவுகள் பற்றிய தீர்மானங்கள் கொண்டு வருவோர்.	45
95	அறிமுகத்திற்குப் பின்வரும் தீர்மானம்.	45
96	மக்கள் கருத்தறிந்த பின் வரும் தீர்மானங்கள்.	46
97	ஆய்வுக் குழு அமைத்தல்.	46
98	ஆய்வுக் குழுவின் அமைப்பு	47
99	ஆய்வுக் குழுவின் தலைவர்	47
99அ	ஆய்வுக் குழுவின் குறைவெண்	47
100	ஆய்வுக் குழு கூட வேண்டிய இடம்	47
101	உட் குழுக்கள்	48
102	ஆய்வுக் குழுவின் விசாரணை செய்யும் அதிகாரம்.	48
103	குழுக் கூட்டத்தில் குழுவில் இடம் பெறாத உறுப்பினர்களும், வெளியார்களும்.	48
104	ஆய்வுக் குழுவின் நடைமுறை	48
105	திருத்தங்கள் செய்ய ஆய்வுக் குழுவின் அதிகார வரம்பு.	49
106	ஆய்வுக் குழுவை விடுவித்தல்	49
107	ஆய்வுக் குழுவின் அறிக்கை.	49
108	அறிக்கைகளை அச்சிடுதலும், வெளியிடுதலும்.	49
109	அவை கூடாத நேரத்தில் அறிக்கையை வெளியிடுதல்.	50
110	அறிக்கை அளிக்கப்பட்ட பின் நடைமுறை.	50

விதி எண்		பக்கம்
111	திருத்தங்கள்	51
112	திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு.	51
113	திருத்தங்களின் வரிசை முறை	51
114	சட்ட முன்வடிவை பிரிவு வாரியாக எடுத்துக் கொள்ளுதல்.	51
115	பிரிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய வரிசை முறை:	51
116	சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றல்.	52
116அ	விவாதத்திற்கான வரம்பு	52
116ஆ	வெளிப்படையாகத் தெரிகிற பிழைகளைத் திருத்தல்.	53
117	சட்ட முன்வடிவுகளின் உறுதியாக்கம்.	53
118	சட்ட முன்வடிவுகள் இசைவுக்கு அனுப்பப்படுதல்.	53
119	ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகளை மீண்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுதல்.	53
	பிரிவு—2. மேலவையில் துவக்கப்பட்டு பேரவையின் இசைவுபெறாத சட்ட முன்வடிவுகள்.	
120	திருப்பப்பட்ட சட்ட முன்வடிவை அவை முன் வைத்தல்.	53
121	திருத்தங்களை ஆய்வதற்கான முன்னறிவிப்பு.	54
122	திருத்தங்களை ஆய்வதற்கான நடைமுறை.	54
123	மேலும் தொடர்பான திருத்தங்கள்.	54
124	திருத்தங்களின் ஆய்வுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறை.	54
125	சட்ட முன்வடிவைத் திரும்பப்பெறல்	55
	பிரிவு—3. பேரவையில் துவக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மேலவையில் வரப்பெறும் பணச் சட்ட முன்வடிவுகள் அல்லாத ஏனைய சட்ட முன்வடிவுகள்.	
126	பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள்.	55
127	முன்னறிவிப்பு	55
128	ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற தீர்மானம்.	55
129	விவாதம்.	55

விதி எண்		பக்கம்
130	ஆய்வுக் குழுவிற்கு அனுப்புதல்	55
131	ஆய்வும் நிறைவேற்றலும்	56
132	திருத்தங்களின்றி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படல்.	56
133	திருத்தங்களுடன் நிறைவேற்றப் பட்ட சட்ட முன்வடிவு.	56
134	பேரவையின் ஆய்விற்குப் பிறகான நடைமுறை.	56
135	சட்ட முன்வடிவின் ஆய்விற்கான முன்னறிவிப்பு.	56
136	இரண்டாவது முறையாக சட்ட முன்வடிவு ஆய்வு செய்யப்படும் நடைமுறை.	56
137	இரண்டாவது முறையாக ஒரு சட்ட முன்வடிவு முடிவு செய்யப் படல்.	57
	பிரிவு 3-அ—சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்டு அங்கிருந்து மேலவைக்கு வரப் பெற்ற பணச் சட்ட முன்வடிவுகள்.	
137-அ	பேரவையால் நிறைவேற்றப்பட்ட பணச் சட்ட முன்வடிவுகளை அவை முன் வைத்தல்.	57
137-ஆ	முன்னறிவிப்பு	57
137-இ	ஆய்விற்கான தீர்மானம்	57
137-ஈ	விவாதம்.	57
137-உ	பிரிவுகளுக்கான பரிந்துரைகளை ஆய்தல்.	58
137-ஊ	பரிந்துரை பற்றிய நடைமுறை	58
137-எ	ஆய்விற்கான தீர்மானம் நிராகரிக்கப்பட்டபின் நடைமுறை	59
137-ஏ	சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப் படுதல்.	59
138	முன்னறிவிப்பைத் தவிர்க்க தலைவரின் அதிகாரங்கள்.	59
	பிரிவு—4 கூட்டு ஆய்வுக் குழுக்கள்	
139	கூட்டு ஆய்வுக் குழுவை அமைத்தல்.	59
140	பேரவையில் துவக்கப்படும் சட்ட முன்வடிவு மீதான கூட்டு ஆய்வுக் குழு.	60

விதி எண்		பக்கம்
	பிரிவு—5 அரசியலமைப்புக்கான திருத்தத்திற்கு ஒப்புளித்தல்.	
140-அ	அரசியலமைப்பின் திருத்தத்திற்கு ஏற்பளித்தல்.	60
140-ஆ	அரசியலமைப்புத் திருத்தத்தின் மீதான விவாதம்.	61
140-இ	பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டிய செய்தி.	61

அத்தியாயம் 15

ஆளுநரின் அவசரச் சட்டங்கள்

141	ஆளுநரின் அவசரச் சட்டத்தின் மீதான விவாதம்.	61

அத்தியாயம் 16

தீர்மானங்கள்.

142	தீர்மானத்திற்கான வரையறைகள்	62
143	தீர்மானத்தின் வடிவம்	62
144	தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு	62
145	தீர்மானத்தை அனுமதிப்பதைத் தலைவர் முடிவு செய்தல்.	63
146	தீர்மானத்தைக் கொண்டு வருதலும், திரும்பப் பெறுதலும்.	63
147	திருத்தங்கள்	63
148	திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு	64
149	தீர்மானத்தைப் பிரித்தல்	64
150	பிரதியை அரசுக்கு அனுப்புதல்	64

அத்தியாயம் 17

நிதி பற்றிய அலுவல்.

151	நிதிநிலை அறிக்கையை அளித்தல்	64
152	நிதிநிலை அறிக்கை பற்றிய பொது விவாதம்.	64
153	விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்.	64
153-அ.	கொள்கைக் குறிப்புகளின் மீது விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்	65

விதி எண்		பக்கம்
154	நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு	65
155	துணை அல்லது கூடுதல் அல்லது அதிக நிதி அறிக்கை.	65

அத்தியாயம் 18

அவையின் குழுக்கள்

(1) உரிமைக் குழு.

156	குழு அமைப்பு.	66
157	எழுப்பப்பட இருக்கும் பிரச்சினை பற்றி முன்னறிவிப்பு.	67
158	பிரச்சினையை எழுப்ப தலைவரின் இசைவு.	67
159	பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம்.	67
160	உரிமைப் பிரச்சினை பற்றிய வரையறைகள்.	67
161	பிரச்சினை பற்றி தலைவர் முடிவு	67
162	தீர்மானம்.	67
162-அ	குழு உறுப்பினர்களின் தகுதியின்மை.	68
163	குழுவின் அறிக்கை	68
164	அறிக்கை அளிக்கப்பட்ட பின் நடைமுறை.	68
164-அ	உரிமைப் பிரச்சினையை அவை நேரடியாக ஆய்வு செய்தல்.	69
165	பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு தலைவரே அனுப்புதல்.	69

(2) அலுவல் ஆய்வுக் குழு.

166	குழுவின் அமைப்பு	69
167	குறைவெண்	69
168	குழுவின் அலுவல்கள்	69
169	அவைக்கு அறிவித்தல்.	70
170	பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.	70
171	குறித்த நேரத்தில் அலுவல்களை முடித்தல்.	70
172	அலுவல் வரிசையில் மாற்றம்	70

விதி எண் பக்கம்

(3) அவைக் குழு.

173 குழுவின் அமைப்பும், அலுவலும் 70

(4) அரசு உறுதிமொழிக் குழு

174 குழுவின் அலுவல்கள் 71

175 குழுவின் அமைப்பு 72

176 குழுவின் தலைவர் 71

177 குறைவெண் 71

178 தலைவரின் கூடுதல் வாக்கு 72

179 குழுவின் அறிக்கை 72

180 அறிக்கை அளித்தல் 72

181 பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை. 72

(5) பொதுக் கணக்குக் குழு.

182 பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல். 72

(6) மதிப்பீட்டுக் குழு.

183 பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல். 72

(7) துணைச் சட்ட ஆய்வுக் குழு.

184 பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல். 73

அத்தியாயம் 19

ஆளுநர்-மேலவை இடையே செய்தித் தொடர்பு.

185 ஆளுநரிடமிருந்து மேலவைக்கு வரும் செய்திகள். 73

186 மேலவையிலிருந்து ஆளுநருக்கு அனுப்பப்படும் செய்தி. 73

அத்தியாயம் 20

மேலவைக்குக் கொடுக்கப்படும் மனுக்கள்.

187 வடிவமும், உட்பொருளும் 73

188 மனுக்களை அளிக்கும் முறை 74

விதி எண்		பக்கம்
189	மனு கொடுக்கும் உறுப்பினர்களின் கடமைகள்.	74
190	பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.	74

அத்தியாயம் 21

விதிக் குழு.

191	விதிக் குழுவின் அலுவல்கள்	74
192	குழுவின் அமைப்பு	74
193	குறைவெண்	75
194	விதிகளின் திருத்தத்திற்கான முன்னறிவிப்பு.	75
195	அறிக்கையை அவை முன் வைத்தல்.	75
195-அ	பின்பற்றப்படவேண்டிய நடைமுறை.	76

அத்தியாயம் 22

பல்வகை.

196	அதிகார பூர்வமான வெளியீடு	76
197	நடவடிக்கை குறிப்பிலிருந்து சொற்களை நீக்குதல்.	76
198	நீக்கப்பட்ட பகுதி பற்றி வெளியீடுகளில் குறிப்பிடுதல்.	77
199	மற்ற ஆவணங்கள் அச்சிடுதலும் வெளியிடுதலும்.	77
200	வெளியார்கள்.	77
201	வெளியார்களை வெளியேறச் செய்தல்.	77
202	செயலாளர் எல்லாக் குழுக்களுக்கும் அலுவல் முறைச் செயலாளராதல்.	77
203	எஞ்சிய அதிகாரம்	77
204	தலைவர் தனது அதிகாரத்தை கொடுத்தல்.	78

CONNEMARA PUBLIC LIBRARY
9-DEC 1973
MADRAS

விதி எண்		பக்கம்
205	விதிகளை நிறுத்தி வைப்பதற்கான தீர்மானம்.	78
206	உறுப்பினர்கள் வராதிருத்தல்	78

அத்தியாயம் 23

207, 208, 209	(1) உறுப்பினரைக் கைது செய்தல், காவலில் வைத்தல், விடுதலை செய்தல் ஆகியவற்றைத் தலைவருக்கு அறிவித்தல்.	79
210, 211	(2) அவையின் அமைப்பு எல்லைக்குள் நீதிமன்றக் கட்டளைகளை உறுப்பினர்களுக்குச் சேர்ப்பித்தலும், கைது செய்தலும்.	79

அத்தியாயம் 24

இரு அவைகளுக்கிடையே
செய்தி போக்குவரத்து முறைகள்.

212	செய்தியின் வடிவம்.	79
213	அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அனுப்பப்படும் செய்திகள்.	
214	அவை கூடாத நேரத்தில் உறுப்பினர்களுக்குச் செய்தியை அறிவித்தல்.	

இணைப்புக்கள்.

இணைப்பு–அ : ஒரு உறுப்பினர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதைக் குறித்த செய்தியின் வடிவம்.	81
இணைப்பு–ஆ : ஒரு உறுப்பினர் தண்டிக்கப்பட்டுள்ளதைக் குறித்த செய்தியின் வடிவம்	82
இணைப்பு–இ : ஒரு உறுப்பினர் விடுவிக்கப்பட்டது குறித்த செய்தியின் வடிவம்.	83

-DEC 1973

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகள்

[இந்திய அரசியலமைப்பின் 208 (1) பிரிவின்படி இயற்றப்பட்டவை]

அத்தியாயம் 1.

1. இவ் விதிகள் தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகள் எனப் பெயர் பெறும். குறுந்தலைப்பு.

2. (1) இவ் விதிகளில்—

சொற்பொருள் விளக்கம்.

(அ) 'பேரவை' என்பது தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையைக் குறிக்கும்.

(ஆ) 'தலைவர்' என்பது தமிழ் நாடு சட்ட மன்ற மேலவைத் தலைவரைக் குறிக்கும்.

(இ) 'குழு' என்பது இவ் விதிகளின்படி சட்ட மன்ற மேலவையால் அமைக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் அல்லது தலைவரால் நியமிக்கப்படும் ஒரு குழுவைக் குறிக்கும். மேலும், இவ் விதிகளின்படி அமைக்கப்படும் கூட்டுக் குழுவையும் மேலவைத் தலைவர் பேரவைத் தலைவர் இருவரும் சேர்ந்து நியமிக்கும் கூட்டுக் குழுவையும், ஆய்வுக் குழு அல்லது கூட்டு ஆய்வுக் குழுவையும் நிலைமைக்கேற்ற வாறு இச் சொல் குறிக்கும்.

(ஈ) 'அரசியலமைப்பு' என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் குறிக்கும்.

(உ) 'மேலவை' என்பது தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையைக் குறிக்கும்.

(ஊ) 'நிதியமைச்சர்' என்பது நிதிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சரையோ, இவ் விதிகளின் பொருட்டு அவரது பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள வேறொரு அமைச்சரையோ குறிக்கும்.

(எ) 'அரசிதழ்' என்பது தமிழ் நாடு அரசிதழைக் குறிக்கும்.

(ஏ) 'அரசு' என்பது தமிழ் நாடு அரசைக் குறிக்கும்.

(ஐ) ' ஆளுநர் ' என்பது தமிழ் நாடு ஆளுநரைக் குறிக்கும்.

(ஒ) ' அவை ' என்பது மேலவையையும் ' அவைகள் ' என்பது மேலவை, பேரவை, இரண்டையும் குறிக்கும்.

(ஓ) ' தகவல் ' என்பது—

(1) மேலவைக் கூட்டம் ஒவ்வொன்றின் நடவடிக்கைச் சுருக்கத்தையோ,

(2) மேலவை அல்லது அதனுடைய குழுக்களின் அலுவல்களைக் குறித்துத் தெரிவிக்கும் செய்தியையோ,

(3) தலைவரின் விருப்பத்திற்கிணங்க சேர்க்கப்படும் செய்தியையோ

குறிக்கும்.

(ஔ) ' அவை முன்னவர் ' என்பது அரசினால் மேலவை முன்னவராக நியமிக்கப்படும் அமைச்சரைக் குறிக்கும்.

(க) ' உறுப்பினர் ' என்பது மேலவை உறுப்பினரைக் குறிக்கும். எனினும், மேலவையின் உறுப்பினரல்லாத அமைச்சரும், மாநில அரசுத் தலைமை வழக்கறிஞரும், மேலவையில் பேசுவதற்கோ, தீர்மானங்களை முன்மொழிவதற்கோ, மேலவையின் அலுவல்களில் வேறுவகையில் பங்கு கொள்வதற்கோ, அவ்வாறே மேலவைக் குழுக்களில் பேசுவதற்கோ, வேறுவகையில் அக் குழுக்களில் அங்கம் வகித்துப் பங்கு கொள்வதற்கோ உரிமையுடைய உறுப்பினர்கள் எனக் கருதப்படுவார்கள். ஆனால், இவ் விதியின் காரணமாக எந்தப் பிரச்சினையிலும் வாக்கு அளிப்பதற்கோ, குறைவெண் கணக்கெடுப்பதற்கோ அவர்கள் உறுப்பினர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

(ங) 'சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர்' என்பது—

(1) அரசின் சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில், அமைச்சரையும்;

(2) மற்ற சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில், சட்ட முன்வடிவை மேலவைக்கு அறிமுகப்படுத்திய உறுப்பினரையும்;

(3) பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மேலவையில் வரப்பெற்ற சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மேலவையில் அச் சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என முன்னறிவிப்பு கொடுக்கும் உறுப்பினரையும்

குறிக்கும்.

(ச) 'அமைச்சர்' என்பது அமைச்சரவையின் ஓர் உறுப்பினரையும், மற்றும் துணை அமைச்சரையும், சட்ட மன்ற அலுவல்களைக் கவனிப்பதற்கென அமைச்சருக்குத் துணை புரியும் பாராளுமன்றச் செயலர் மேலவையின் உறுப்பினராக இருந்தால், அவரையும் குறிக்கும்.

(ஞ) 'அவையின் அமைப்பு எல்லை' என்பதில்—

(i) சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ் நாடு அரசு தலைமைச் செயலகக் கட்டிடங்கள் அனைத்தையும், மேலவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அவையைச் சேர்ந்த அலுவலகங்கள், அரசியலமைப்பின் 175 அல்லது 176-வது பிரிவின்படி மேலவையின் உறுப்பினர்கள் கூடும் இடம், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், அமைச்சர்கள், எதிர்க் கட்சித் தலைவர், கொறடாக்கள் ஆகியோரின் அறைகள், நூலகம், சிற்றுண்டி விடுதி, ஓய்வு அறைகள், சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள குழுக்கூட்டம் நடைபெறும் அறை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள நூலகம் ஆகியவையும், தலைவரால் அவ்வப்போது குறிக்கப்படும் பிற இடங்கள் அல்லது கட்டிடங்கள், கட்டிடங்களைச் சேர்ந்த புறக்கூடங்கள், அதனைச் சேர்ந்த படிக்கட்டுகள், மேலவை மண்டபத்திலிருந்து மேலே குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்லுவதற்கான நடைபாதைகள் ஆகியவையும் அடங்கும்.

இப்பொருள் விளக்கம் மேலவை அல்லது மேலவைக் குழுக்கள் அல்லது அவற்றின் உட் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுதும் அவைகள் துவங்குவதற்கு முன்னுள்ள ஒரு மணி நேரத்திற்கும், முடிந்தபின் உள்ள ஒரு மணி நேரத்திற்கும் பொருந்தும்.

(ii) அயலார்களைப் பொறுத்தவரை, முறைப்படி நுழைவுச் சீட்டு பெற்றிருப்பவர்களுக்கு மட்டும், அவையில் உள்ள மாடங்கள், புறக் கூடங்கள், அவற்றின் படிக்கட்டுகள் ஆகியவை அடங்கும்.

(iii) அவைக் குழுவின் ஆணையால் வரவழைக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை, குழுவின் அறைகள், புறக்கூடங்கள், அவற்றின் படிக்கட்டுகள் ஆகியவற்றில் இருக்கும்வரை, அவர்கள் அவையின் அமைப்பு எல்லைக்குள் இருப்பவர்களாகக் கருதப்படுவார்கள்.

(ட) 'தனி உறுப்பினர்' என்பது அமைச்சரல்லாத ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்.

(ண) 'தனி உறுப்பினர் அலுவல்' என்பது தனி உறுப்பினர் ஒருவரால் முறைப்படி முன்னறிவிப்பு கொடுத்து கொண்டுவரப்படும் அலுவல் எனப் பொருள்படும். எனினும், ஏதேனும் ஒரு சட்டத்தின்படி முன் மொழியப் படும் சட்டத் தீர்மானங்கள், அவையின் முன் வைக்கப்பட வேண்டிய அறிக்கைகள், விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென முன் மொழியப்படும் தீர்மானங்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இவ்விதி களைத் திருத்துவதற்கெனக் கொண்டுவரப்படும் தீர்மானங் கள் ஆகியவை இதில் அடங்கா.

(த) 'விதிகள்' என்பது தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகள் எனப் பொருள்படும்.

(ந) 'செயலாளர்' என்பது மேலவைச் செயலாளரை யும், செயலாளரின் பணிகளை ஆற்றுவதற்குத் தலைவரின் இசை வுடன் செயலாளரிடத்தில் அதிகாரம் பெற்ற அரசிதழ் பதிவு பெற்ற மேலவைத் துறை அதிகாரியையும் குறிக்கும்.

(ப) 'கூட்டத் தொடர்' என்பது அரசியலமைப்பின் 174 (1)-வது பிரிவின்படி ஆளுநர் கூட்டுகின்ற மேலவையின் முதல் கூட்டத் தொடக்கத்திலிருந்து, 174 (2)-வது பிரிவின் படி அக் கூட்டத் தொடரை முடித்து வைத்தல் வரையுள்ள காலத்தைக் குறிக்கும்.

(ம) 'கூட்டம்' என்பது அலுவல்களின் பொருட்டு, அவை உறுப்பினர்கள் கூடும் ஒவ்வொரு நாள் கூட்டத்தின் துவக்கத்திலிருந்து இறுதிவரை நடைபெறும் கூட்டம் எனப் பொருள்படும்.

(ய) 'சட்டத் தீர்மானம்' என்பது நடப்பி லுள்ள சட்டத்தின்படி கொண்டுவரப்படும் தீர்மானம் எனப் பொருள்படும்.

(2) இவ் விதிகளில் பொருள் விளக்கம் கூறப்படாத ஆனால் அரசியலமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள் அரசியலமைப்பில் எப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அதே பொருள் உடையன வாகும்.

அத்தியாயம் 2.

மேலவையைக் கூட்டுதல், உறுப்பினர் பதிவேடு, உறுதி மொழி, மற்றும் உறுப்பினர் இருக்கை.

3. (அ) ஆளுநர் மேலவையைக் கூட்டும்போதெல்லாம் மேலவை கூட வேண்டிய நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்று அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். மேலவையைக் கூட்டுதல்.

(ஆ) மேலவைக் கூட்டத்திற்காக அறிவிக்கப்பட்ட நாள், நேரம், இடம் ஆகியவற்றை ஒவ்வொரு உறுப்பினருக்கும் செயலாளர் தெரிவிக்க வேண்டும்.

3-அ. (1) சட்ட மன்ற மேலவை உறுப்பினர் ஒவ்வொருவரும் அவையில் முதன் முதலாகத் தம் இருக்கையில் அமருமுன், அரசியலமைப்பின் 188-வது பிரிவில் விதித்துள்ளபடி உறுதிமொழி கூறி, அதில் கையொப்பமிட வேண்டும். உறுதிமொழி.

(2) மேற்கூறிய 1-வது துணை விதியின்படி உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர் ஒரு கூட்டம் தொடங்கும் முன்னர், அவையிலோ, வேறு இடத்திலோ, வேறு நாளிலோ உறுதிமொழி எடுத்துக் கொள்ள விரும்பின், செயலாளருக்கு முன்னறிவிப்பு கொடுத்த பின்பு தலைவரால் குறிப்பிடப்படும் நாளில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.

3-அஅ. மேலவை உறுப்பினர் பதிவேடு ஒன்று இருத்தல் வேண்டும். உறுப்பினர் ஒவ்வொருவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டு இருக்கையில் அமரும் முன்னர் செயலாளர் முன்னிலையில் அப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும். உறுப்பினர் பதிவேடு.

3-அஅஅ. தலைவர் வகுக்கும் வரிசை முறைப்படி உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டும். உறுப்பினர் இருக்கை

அத்தியாயம் 3.

தலைவர், துணைத் தலைவர் தேர்தலும், மாற்றுத் தலைவர்களின் நியமனப் பட்டியலும்.

4. (1) தலைவர் பதவி காலியாக இருந்து, தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் நேரிடின், கூடிய விரைவில், ஆளுநர் அத் தேர்தல் நடக்க வேண்டிய நாளைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட நாளினை செயலாளர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரிவிக்க வேண்டும். தலைவர் தேர்தல்.

(2) அவ்வாறு குறிப்பிடப்பட்ட நாளுக்கு முதல்நாள் நண்பகலுக்கு முன் எந்நேரத்திலாவது எந்த உறுப்பினரேனும் மற்றொரு உறுப்பினரை வேட்பாளராக முன்மொழியலாம். வேட்புத் தாளில் முன் மொழியப்பட்ட உறுப்பினரின் பெயரும், முன் மொழிபவர், வழிமொழிபவர் ஆகியவர்களின் கையொப்பமும், தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் தலைவராகப் பணியாற்றுவதற்கு வேட்பாளரின் இசைவும் இருக்க வேண்டும். இந்த வேட்புத்தாள் செயலாளரிடத்தில் முன் மொழிபவரராலோ, வழி மொழிபவராலோ, வேட்பாளராலோ நேரில் கொடுக்கப்பட வேண்டும் :

எனினும், ஓர் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை முன்மொழியவோ, வழிமொழியவோ கூடாது.

(3) இத்தேர்தல் மேலவைக் கூட்டம் ஒன்றில் நடக்க வேண்டும்.

(4) தேர்தல் நாளன்று கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களையும், அவர்களை முன் மொழிந்தவர்கள், வழி மொழிந்தவர்கள் ஆகியோரின் பெயர்களையும் மேலவையில் படிக்க வேண்டும். அத் தேர்தலுக்கு ஒரே ஒரு வேட்பாளர் மட்டும் மொழியப்பட்டிருந்தால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப்பட்டிருந்தால், மறைவு வாக்குப் பதிவு முறைப்படி தலைவரை மேலவை தேர்ந்தெடுக்க வேண்டும்.

(5) மேலேயுள்ள 4-வது உட்பிரிவின்படி பெயர்களை தலைமை வகிப்பவர் அவைக்குப் படித்துக் காட்டும் முன்னர், வேட்பாளரோ, அவர் பெயரை முன் மொழிந்தவரோ, வழி மொழிந்தவரோ மேலவை உறுப்பினராக உறுதிமொழி எடுத்துக்கொண்டிராவிடில், அவ் வேட்பாளர் முறைப்படி மொழியப்பட்டவராகக் கருதப்படமாட்டார். மேலும் அவ்வாறு உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர் வாக்களிக்கவும் தகுதியற்றவர் ஆவார்.

(6) இரு வேட்பாளர்கள் மட்டுமே முறைப்படி மொழியப்பட்டிருந்தால், மறைவு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும்.

(7) இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப்பட்டிருந்து, முதல் வாக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் மற்ற அனைத்து வேட்பாளர்களின் மொத்த வாக்குகளை விட அதிகமான வாக்குகள் பெறுவிடில், மிகக் குறைந்த

வாக்குகள் பெற்றவரை நீக்கிவிட்டு, மறு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் ; இவ்வாறே ஒவ்வொரு முறையிலும் எந்த வேட்பாளர் மிகக் குறைந்த வாக்குகளைப் பெறுகிறாரோ அந்த வேட்பாளரை பின்தொடரும் வாக்கெடுப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் ; இறுதியாக ஒரு வேட்பாளர் மற்ற அனைத்து வேட்பாளர்களும் பெற்ற மொத்த வாக்குகளைவிட அதிகமான வாக்குகளைப் பெறும் வரை வாக்கெடுப்பு தொடர வேண்டும்.

(8) மேற்கூறியவாறு நடத்தப்படும் எவ்வாக்கெடுப்பிலாவது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களில் எவராவது சமமான வாக்குகள் பெற்றிருப்பின், அவர்களில் ஒருவர் 6-வது உட்பிரிவின்படி நீக்கப்பட வேண்டும். யார் நீக்கப்பட வேண்டும் என்பதை சீட்டுக் குலுக்கிப் போட்டு தீர்மானிக்க வேண்டும்.

(9) இரு வேட்பாளர்களும் சமமான வாக்குகள் பெற்றிருப்பின், எந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை சீட்டுக் குலுக்கிப் போட்டு தீர்மானிக்க வேண்டும்.

துணைத் தலைவர் தேர்தல்

5. (1) துணைத் தலைவர் பதவி காலியாக இருந்து, துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் நேரிடின், கூடிய விரைவில், தலைவர் அல்லது தலைவர் இல்லாதபோது ஆளுநர், அத் தேர்தல் நடக்க வேண்டிய நாளைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட நாளினை செயலாளர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரிவிக்க வேண்டும்.

(2) அவ்வாறு குறிப்பிடப்பட்ட நாளுக்கு முதல்நாள் நண்பகலுக்கு முன் எந்நேரத்திலாவது எந்த உறுப்பினரேனும் மற்றொரு உறுப்பினரை வேட்பாளராக முன்மொழியலாம். வேட்புத் தாளில் முன்மொழியப்பட்ட உறுப்பினரின் பெயரும், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியவர்களின் கையொப்பமும், தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் துணைத் தலைவராகப் பணியாற்றுவதற்கு வேட்பாளரின் இசைவும் இருக்க வேண்டும். இந்த வேட்புத் தாள் செயலாளரிடத்தில் முன் மொழிபவராலோ, வழிமொழிபவராலோ, வேட்பாளராலோ நேரில் கொடுக்கப்பட வேண்டும் :

எனினும், ஓர் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை முன்மொழியவோ, வழிமொழியவோ கூடாது.

(3) இத் தேர்தல் மேலவைக் கூட்டம் ஒன்றில் நடக்க வேண்டும்.

(4) தேர்தல் நாளன்று கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களையும், அவர்களை முன்மொழிந்தவர்கள், வழிமொழிந்தவர்கள் ஆகியோரின் பெயர்களையும் மேலவையில் படிக்க வேண்டும். அத் தேர்தலுக்கு ஒரே ஒரு வேட்பாளர் மட்டும் மொழியப்பட்டிருந்தால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப்பட்டிருந்தால், மறைவு வாக்குப் பதிவு முறைப்படி துணைத் தலைவரை மேலவை தேர்ந்தெடுக்க வேண்டும்.

(5) மேலேயுள்ள 4-வது உட்பிரிவின்படி பெயர்களை தலைமை வகிப்பவர் அவைக்குப் படித்துக் காட்டும் முன்னர், வேட்பாளரோ, அவர் பெயரை முன்மொழிந்தவரோ, வழிமொழிந்தவரோ மேலவை உறுப்பினராக உறுதிமொழி எடுத்துக்கொண்டிராவிடில், அவ்வேட்பாளர் முறைப்படி மொழியப்பட்டவராகக் கருதப்படமாட்டார். மேலும் அவ்வாறு உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர் வாக்களிக்கவும் தகுதியற்றவர் ஆவார்.

(6) இரு வேட்பாளர்கள் மட்டுமே முறைப்படி மொழியப்பட்டிருந்தால், மறைவு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும்.

(7) இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப்பட்டிருந்து, முதல் வாக்கெடுப்பில், எந்த வேட்பாளரும் மற்ற அனைத்து வேட்பாளர்களின் மொத்த வாக்குகளை விட அதிகமான வாக்குகள் பெறுவிடில், மிகக் குறைந்த வாக்குகள் பெற்றவரை நீக்கிவிட்டு, மறு வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இவ்வாறே ஒவ்வொரு முறையிலும் எந்த வேட்பாளர் மிகக் குறைந்த வாக்குகளைப் பெறுகிறாரோ, அந்த வேட்பாளரைப் பின் தொடரும் வாக்கெடுப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். இறுதியாக ஒரு வேட்பாளர் மற்ற அனைத்து வேட்பாளர்களும் பெற்ற மொத்த வாக்குகளை விட அதிகமான வாக்குகளைப் பெறும் வரை வாக்கெடுப்பு தொடர வேண்டும்.

(8) மேற்கூறியவாறு நடத்தப்படும் எவ்வாக்கெடுப்பிலாவது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களில் எவராவது சமமான வாக்குகள் பெற்றிருப்பின், அவர்களில் ஒருவர் 6-வது உட்பிரிவின்படி நீக்கப்பட வேண்டும். யார் நீக்கப்பட வேண்டும் என்பதை சீட்டுக் குலுக்கிப் போட்டு தீர்மானிக்க வேண்டும்.

(9) இரு வேட்பாளர்களும் சமமான வாக்குகள் பெற்றிருப்பின், எந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை சீட்டுக் குலுக்கிப் போட்டு தீர்மானிக்க வேண்டும்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

6. (1) மேலவையின் கூட்டத் தொடரின் தொடக்கத்திலோ அல்லது தேவைக்கேற்ப அவ்வப்பொழுதோ, நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் தலைவர் நியமிக்கலாம்.

தலைவரும், துணைத் தலைவரும் அவையில் இல்லாத போதும், தலைவர், துணைத் தலைவர் அல்லது மாற்றுத் தலைவர் கேட்டுக்கொள்வதற்கிணங்க பட்டியலில் உள்ள எவரேனும் ஒருவர் மேலவைக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்கலாம். எப்பொழுதாகிலும் மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் உள்ள எவருமே இல்லாதிருக்க நேரிடின், அப்போது கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் அவையிலுள்ள உறுப்பினர் எவரையாவது மேலவைக்குத் தலைமை ஏற்க அழைக்கலாம். கூட்டத் தொடக்கத்தில் தலைவரும் துணைத் தலைவரும் மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் உள்ளவர்களில் எவரும் இல்லாதிருப்பின், மேலவை தீர்மானிக்கும் உறுப்பினர் ஒருவர் அக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்க வேண்டும்.

(2) மேற்கூறிய 1-வது துணை விதியின்படி நியமனம் செய்யப்பட்ட மாற்றுத் தலைவர்கள் புதிய மாற்றுத் தலைவர்கள் நியமிக்கப்படும் வரையில் பதவி வகிப்பார்கள்.

தலைமை வகிப்பவரின் அதிகாரங்கள்.

7. மேலவைக்கு துணைத் தலைவர் அல்லது மாற்றுத் தலைவர் தலைமை வகிக்கும்போது, அவர் தலைவருக்குள்ள எல்லா அதிகாரங்களும் பெற்றவராவார்; மேலும் இவ் விதிகளில் தலைவரைப் பற்றிய குறிப்புகள் எல்லாம் தலைமை வகிப்பவரைக் குறிப்பதாகவே கருதப்படும்.

அத்தியாயம் 4.

ஆளுநர் உரை.

ஆளுநர் உரை

8. அரசியலமைப்பின் 176 அல்லது 175-வது பிரிவின்படி சட்ட மன்றத்தின் இரு அவைகளும் இணைந்த கூட்டத்தில் அல்லது அரசியலமைப்பின் 175-வது பிரிவின்படி ஆளுநர் உரை ஆற்றிய பின்பு நடக்கும் மேலவையின் முதல் கூட்டத்தில் ஆளுநர் உரையின் பிரதி ஒன்று அவை முன் வைக்கப்பட வேண்டும்.

உரையின் மீது விவாதம்

9. (1) அவை முன்னவருடனும், அலுவல் ஆய்வுக் குழுவுடனும் கலந்தாலோசித்து, ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்ட பொருள் பற்றி விவாதிப்பதற்கான போதிய காலத்தை தலைவர் ஒதுக்க வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவரால் முன் மொழியப்பட்டு மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேற்கூறிய விவாதம் நடைபெற வேண்டும்.

(3) அத்தீர்மானத்திற்கு தலைவர் பொருத்தமானது எனக் கருதும் வடிவத்தில் திருத்தங்கள் கொண்டுவரப் படலாம்.

உரை விவாதத்திற்கு முன்பு எடுத்துக் கொள்ளப் படும் மற்ற அலுவல்கள்

9-அ. (1) ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட நாளாக இருப்பினும்—

(அ) அந் நாளில் சட்ட முன்வடிவு அல்லது சட்ட முன் வடிவுகளை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் அல்லது தீர்மானங்களைக் கொண்டு வரலாம்; மேலும் அவற்றை அறிமுகம் செய்யலாம்.

(ஆ) விவாதம் தொடங்குவதற்கு அல்லது தொடருவதற்கு முன், மரபுக்கு ஒத்த பிற சாதாரண அலுவல்களை அந்நாளில் மேற்கொள்ளலாம்.

(2) அரசின் சட்ட முன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிப்பதற்காக நிறைவேறும் தீர்மானத்திற் கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளி வைக்கப் படலாம். அவ்வாறு கொண்டுவரப்படும் தீர்மானம் யாதொரு திருத்தமோ, விவாதமோ இன்றி தலைவரால் உடனே அவையின் முடிவுக்கு வைக்கப்பட வேண்டும்.

(3) உரையின் மீதான விவாதம் 43-வது விதியின்படி அனுமதிக்கப்படும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் ஒரு கூட்டத்தின் இடையில் நிறுத்தி வைக்கப்படலாம்.

ஆளுநரின் மறுமொழி

10. நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆளுநர் ஏதேனும் மறுமொழி அனுப்பி வைத்தால், அதைத் தலைவர் மேலவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

உரைமீதான விவாத விதிகள்

11. அரசுத் தீர்மானங்களுக்குப் பொருந்தும் விவாத விதிகள், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கும் ஏற்ற மாறுதல்களுடன் பொருந்தும்.

12. அரசியலமைப்பின் 175 அல்லது 176-வது பிரிவின்படி சட்ட மன்றத்தின் இரு அவைகளின் ஒருங்கிணைந்த கூட்டத்தின்போது அல்லது அரசியலமைப்பின் 175-வது பிரிவின்படி மேலவை உறுப்பினர்கள் தனியே கூடியிருக்கும்போது (ஆளுநர்) உரை நிகழ்த்துகையிலோ, நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் தனது பேச்சினாலோ, ஒழுங்குப் பிரச்சினையினாலோ, வேறு எவ்வகையிலோ, தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது; அவ்வாறு தடங்கலோ, குறுக்கீடோ செய்வது அவையின் ஒழுங்குக்குப் பெருத்த ஊறு விளைவிப்பதாகக் கருதப்பட்டு, அடுத்து நிகழும் கூட்டத்தில் தலைவரால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். ஆளுநர் உரையின்போது அவையின் ஒழுங்கைக் காத்தல்

மேலவையின் கூட்டத்தொடரை முடித்து வைத்தல்.

13. (அ) மேலவையின் கூட்டத் தொடர் ஒவ்வொன்றும் முடித்து வைத்தல்' மூலம் முடிவு பெறும். மேலவையின் கூட்டத் தொடரை முடித்து வைத்தல்

(ஆ) ஒரு கூட்டத் தொடர் முடிவடைந்தபின், வினாக்கள், சட்டத் தீர்மானங்கள், அவைக்கு அறிமுகப்படுத்தப் பட்ட சட்ட முன்வடிவுகள், அவையின் முன் கொண்டுவரப் பட்ட தீர்மானங்கள் ஆகியவை நீங்கலாக, முடிவுறாத மற்ற எல்லா முன்னறிவிப்புகளும், அலுவல்களும் செயலற்றவையாகும். வினாக்களைத் தவிர, மற்ற அலுவல்கள், உறுப்பினர் புதிதாக முன்னறிவிப்பு கொடுப்பின், முடிவுற்ற கூட்டத் தொடரில் எந்நிலையை அடைந்ததோ, அந்நிலையிலிருந்து அடுத்த கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

(இ) இவ் விதிகளின்படி இயங்கும் குழு அல்லது ஆய்வுக் குழுவின் அலுவல், கூட்டத் தொடர் முடித்து வைக்கப் படுவதால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது.

அத்தியாயம் 5.

வருகைப் பதிவேடு, வராமைக்கான அனுமதி வழங்குதல், பதவி காலியாதல்.

14. உறுப்பினர்கள் வருகையைக் குறிக்கும் பதிவேடு ஒன்றை செயலாளர் வைத்திருக்க வேண்டும். அப்பதிவேடு உறுப்பினர்கள் வேண்டும்போது அவர்களது பார்வைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். வருகைப் பதிவேடு

வராமைக்கான அனுமதியும் பதவிகள் காலியாதலும்

15. (1) அவைக் கூட்டங்களுக்கு வராமலிருப்பதற்கான அனுமதியை உறுப்பினருக்கு அவை அளிக்கலாம்; வராமைக்கான காலவரையைக் குறிப்பிட்டு, அதற்கான தீர்மானத்தை அவ்வுறுப்பினரோ, அவருக்காக வேறோர் உறுப்பினரோ அவை முன் கொண்டு வரலாம்; அவ்வாறு கொண்டுவரப்படும் தீர்மானம், திருத்தமோ, விவாதமோ இன்றி வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும்.

(2) மேற் குறிப்பிட்டபடி அனுமதி பெறாமல், அரசியலமைப்பின் 190 (4)-வது பிரிவின்படி கணக்கிடப்பட்ட 60 நாட்களுக்குத் தொடர்ந்து உறுப்பினர் எவரேனும் எல்லாக் கூட்டங்களுக்கும் வராவிடின், அவ்வுறுப்பினரின்பதவி காலியானதாகக் கருத வேண்டுமென்ற தீர்மானத்தை அவை முன்னவரோ, அவையின் எந்த உறுப்பினரோ கொண்டு வரலாம். அத்தீர்மானம் திருத்தமோ, விவாதமோ இன்றி அவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும்.

அத்தியாயம் 6.

மேலவைக் கூட்டங்களும், அதன் அலுவல் அமைப்பு முறையும்.

கூட்டங்களை ஒத்தி வைத்தல்

16. தலைவருக்கும், அவைக்குத் தலைமை வகிப்பவருக்கும் ஒரு கூட்டத் தொடருக்குள் மேலவையை அவ்வப்போது ஒத்திப்போடும் அதிகாரம் உண்டு.

கூட்ட நாளில் மாற்றம்

17. மேலவை ஒரு குறிப்பிட்ட நாளுக்கோ, குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கோ ஒத்திவைக்கப்பட்டிருப்பின், அவ்வாறு குறிப்பிட்ட நாளுக்கு முன்போ, பிறிதொரு நாளிலோ, அந்நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்போ, பின்போ மேலவையைத் தலைவர் கூட்டலாம்.

குறைவெண்.

18. தலைவர் அல்லது தலைமை வகிப்பவர் உட்பட குறைந்தது பத்து உறுப்பினர்களாவது இருந்தால்தான், மேலவை கூடி தனது அதிகாரங்களைச் செயல்படுத்த முடியும்.

குறைவெண் இன்மையால் ஒத்திப்போடல்.

19. எந்நேரத்திலாவது கூட்டத்திற்கான குறைவெண் இன்மையைத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரின் அழைப்பு மணி ஒலிக்கப்படவேண்டும்; அதற்குப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகும் குறைவெண் இல்லாதிருப்பின், தலைமை வகிப்பவர் அவையை வழக்கமாக மேலவை கூடும் அடுத்த நாளுக்கோ, அதே நாளில் பிந்திய நேரத்திற்கோ ஒத்திவைக்க வேண்டும்.

20. மேலவைக் கூட்டங்கள் தலைவர் குறிக்கும் நேரத்தில் தொடங்கி, முடிவடையும். மேலவைக் கூட்டங்கள்.

21. (1) ஒவ்வொரு நாளுக்கும் உரிய அலுவல் பட்டியல் ஒன்றைச் செயலாளர் தயாரித்து எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்க வேண்டும். அலுவல் பட்டியல்.

(2) இவ்விதிகளில் வகை செய்திருந்தாலன்றி, இயல்பான அல்லது சடங்குமுறை மரபுக்கேற்ற அலுவல்களைத் தவிர, அந்த நாள் அலுவல் பட்டியலில் இடம் பெறாத அலுவல் எதையும் அக்கூட்டத்தில் நடத்தக்கூடாது.

(3) அலுவல் பட்டியலில் உள்ள அலுவல் வரிசையை, மேலவை ஒரு தீர்மானத்தினாலன்றி மாற்றக்கூடாது.

(4) இவ் விதிகளில் வகை செய்திருந்தாலன்றி, முன்னறிவிப்பு கொடுக்கப்பட வேண்டிய அலுவல் எதையும் அந்த அறிவிப்புக் காலம் முடிவதற்குமுன் அலுவல் பட்டியலில் சேர்க்கக்கூடாது.

(5) எந்தநாளின்அலுவல்பட்டியலில் ஓர் ஏடு அவைமுன் வைக்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப்படுகிறதோ, மேலவை நடவடிக்கைகளில் எந்த நாளில் இடம் பெறுகிறதோ, அந்த நாளில் அது மேலவை முன் வைக்கப்பட்டதாகக் கருதப்படும். அவ்வாறு வைக்கப்படும் ஏடுகளின் படிகள் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

22. அவை ஒருமனதாக முடிவு செய்தாலன்றி, ஒரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பட வேண்டும். மேலும், தலைவர், தாம்கருதுகிறபடி, வினா நேரத்தை நீட்டிக்கலாம். வினா நேரம்.

23. (1) மேலவை கூடும் எல்லாச் சனிக்கிழமைகளிலும் கீழே குறித்துள்ள சனிக்கிழமைகள் நீங்கலாக, தனி உறுப்பினர் அலுவல் முதலிடம் பெறும் : தனி உறுப்பினர் அலுவலுக்கு நேரம் ஒதுக்குதலும் அதற்கு முதலிடம் அளித்தலும்.

(i) அரசியலமைப்பின் 202 முதல் 206 வது பிரிவுகளின்படி நிதியைப் பொருத்த விவாதத்திற்கென ஒதுக்கப்படும் நாட்களில் வரும் சனிக்கிழமைகள்,

(ii) ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கென ஒதுக்கப்படும் நாட்களில் வரும் சனிக்கிழமைகள்.

எனினும், இவ்விதியின்படி தனியார் அலுவலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய சனிக்கிழமைகளிலும்கூட, இவ்விதியைத் தளர்த்தி அரசு அலுவலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என அமைச்சர் ஒருவரால் கொண்டுவரப்படும் தீர்மானத்தை மேலவை ஏற்று அவ்வாறு அனுமதிக்கலாம் ;

எனினும், அவ்வாறு அரசு அலுவலுக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட சனிக்கிழமைக்குப் பதிலாக, அந்த வாரத்திலோ, அடுத்த வாரத்திலோ வேறொரு நாளை தனி உறுப்பினர் அலுவலுக்கென தலைவர் ஒதுக்கலாம் :

மேலும், ஒரு கூட்டத்தொடரில் வரும் சனிக்கிழமையன்று அவைக் கூட்டம் இல்லாதிருப்பின், தலைவர் அவ்வாரத்தில் பிறிதொரு நாளை தனி உறுப்பினர் அலுவலுக்கென ஒதுக்கலாம்.

(2) அவை முன்னவரின் இசைவின்றி மற்ற நாட்களில் அரசு அலுவல் அல்லாத வேறு எந்த அலுவலையும் எடுத்துக் கொள்ளலாகாது.

அரசு அலுவல் வரிசை முறை. 24. அவை முன்னவர் முடிவு செய்யும் வரிசையில் அரசு அலுவல்கள் முறைப்படுத்தப்படும்.

தனி உறுப்பினர் அலுவல் வரிசை முறை. 25. (1) தனி உறுப்பினரின் அலுவல்கள் கீழ்க்கண்ட வகையில் வரிசைப்படுத்தப்பட வேண்டும்:—

(அ) சட்ட முன்வடிவுகள், அவை அடைந்துள்ள நிலைக்கேற்ப வரிசையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ; அதாவது,—

(i) அரசியலமைப்பின் 200-வது பிரிவின்படி ஆளுநரால் செய்தியுடன் திருப்பியனுப்பப்பெற்ற சட்ட முன்வடிவுகள் ;

(ii) மேலவையால் நிறைவேற்றப்பட்ட, ஆளுநர் பேரவையினால் திருத்தங்களுடன் திருப்பியனுப்பி வைக்கப் பட்ட சட்ட முன்வடிவுகள் ;

(iii) பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, மேலவைக்கு அனுப்பப் பெற்ற சட்ட முன்வடிவுகள் ;

(iv) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் முன் மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்ட முன்வடிவுகள் ;

(v) கூட்டு ஆய்வுக் குழு அல்லது ஆய்வுக் குழு அறிக்கை கொடுத்துள்ள சட்ட முன்வடிவுகள்;

(vi) கருத்துக்கள் பெற வேண்டி சுற்றுக்கு அனுப்பப்பட்டு வந்துள்ள சட்ட முன்வடிகள் ;

(vii) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு முன் மொழியப்படாமலோ, நிறைவேற்றப்படாமலோ இருக்கும் சட்ட முன்வடிவுகள் ;

(viii) அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் வந்துள்ள சட்ட முன்வடிவுகள்.

(ஆ) தீர்மானங்கள்.

(2) ஒரே நிலையை அடைந்த சட்ட முன்வடிவுகளுக்கு மேலவையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிசைப்படி இடமளிக்கப்படும்.

(3) அவையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய சட்ட முன்வடிவுகளும், தீர்மானங்களும் எந்த வரிசைப்படி இடமளிக்கப்பட வேண்டுமென்பது தனித்தனியே குலுக்குச் சீட்டு முறைப்படி முடிவு செய்யப்பட வேண்டும்.

(4) மேற்கூறிய வரிசையை முடிவு செய்வதற்கென எடுக்கப்படும் குலுக்குச் சீட்டுகள், கூட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்கான தகுதியடைந்துள்ள சட்ட முன்வடிவுகளை அல்லது விவாதத்திற்குத் தகுதிபெற்றுள்ள தீர்மானங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்களது பெயர்கள் அடங்கியவையாக இருக்க வேண்டும்.

(5) ஓர் உறுப்பினரின் பெயரை ஒரு சட்ட முன்வடிவிற்கும் ஒரு தீர்மானத்திற்கும் மட்டுமே குலுக்குச் சீட்டில் சேர்த்துக்கொள்ளலாம். எந்தச் சட்ட முன்வடிவு அல்லது தீர்மானம் அந்த உறுப்பினர் பெயரில் குலுக்குச் சீட்டில் சேர்க்கப்பட வேண்டுமென்பது அந்த உறுப்பினரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அவ்வாறு அவர் விருப்பம் ஏதும் தெரிவிக்காவிடின், முன்னறிவிப்பு கொடுக்கப்பட்ட கால வரிசைப்படி அவற்றுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

(6) மேற்கூறிய குலுக்குச் சீட்டு எவ்வெப்போது நடத்தப்பட வேண்டும் என்பது தலைவரால் முடிவு செய்யப்படும்.

(7) குறிப்பிட்ட நாளன்று சேர்க்கப்பட்ட தனி உறுப்பினர் அலுவல்களில் முடிவுபெறாத யாவும் அக் கூட்டத் தொடரில் அதே வகையான அலுவல்களுக்கென ஒதுக்கப்பட்ட அடுத்த நாளுக்கு ஒத்தி வைக்கப்படும். அடுத்து வரும் கூட்டத்திற்கான குலுக்குச் சீட்டில் அந்த அலுவல்கள்

யாவும் சேர்க்கப்பட வேண்டும். அக் குழுக்குச் சீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு, முடிவு செய்யப்படுகிற வரிசை முறைப்படி அடுத்த நாளுக்கு வரிசைப்படுத்தப்படும் :

எனினும், மேலவை ஒத்திவைக்கப்படும்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவு பெறாமலிருக்கும் தனி உறுப்பினரின் அலுவல், தனி உறுப்பினர் அலுவலுக்கென ஒதுக்கப்படும் அடுத்த நாளில் அதே மாதிரியான அலுவல் பட்டியலில் முதல் இனமாக இவ்விதியின்படி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

(8) இவ்விதியை நடைமுறைப்படுத்தும்போது சிக்கல் ஏதேனும் எழுந்தால், அது தலைவரது முடிவிற்கு விடப்பட வேண்டும்.

மேலவைக்கு முன்னறிவிப்பு

26. (1) வேறுவிதமாக வகை செய்திருந்தாலன்றி, இவ்விதிகளின்படி கொடுக்கப்பட வேண்டிய எல்லா முன்னறிவிப்புகளும் எழுத்து மூலமாக செயலாளருக்கு முகவரியிட்டு மேலவைச் செயலகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கென செயலகம் ஞாயிற்றுக் கிழமை, பொது விடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை திறந்திருக்கும்.

(2) மேற் கூறிய முன்னறிவிப்பு மேலவைக் கூட்டம் நடக்காத நாட்களிலும், உறுதிமொழி எடுக்காத உறுப்பினராலும் செயலகத்தில் கொடுக்கப்படலாம்.

(3) அலுவல் நாளில் பிற்பகல் 3 மணிக்குப் பின்னோ, விடுமுறை நாளிலோ கொடுக்கப்படும் முன்னறிவிப்பு அடுத்த அலுவல் நாளன்று கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(4) உறுப்பினரால் செயலாளருக்கு அனுப்பப்படும் முன்னறிவிப்புகள் நல்ல தாளில் தெளிவாகத் தெரியும்படி எழுதப்பட்டு, உறுப்பினரின் பெயரும் கையொப்பமும் உடையதாக இருத்தல் வேண்டும் ; இல்லையெனில், அது புறக்கணிக்கப்படக் கூடும்.

(5) தலைவரால் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு எந்த முன்னறிவிப்பையும் உறுப்பினரோ வேறு எவருமோ விளம்பரப் படுத்தல் கூடாது.

மேலும், ஒரு வினாவிற்கு அவையில் விடையளிக்கப்படும் வரை அவ்வினாவின் பொருளடக்கத்தை விளம்பரப்படுத்தல் கூடாது.

27. உறுப்பினர் ஒருவர் வேறுவிதமாக எழுதிக் கேட்டுக் கொண்டாலன்றி, மேலவைச் செயலகத்திலிருந்து உறுப்பினருக்கான அறிக்கையும், அறிவிப்பும் கீழ்க்கண்டவாறு அனுப்பப்படும் — உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் அறிக்கைகளும் அறிவிப்புகளும்.

(அ) கூட்ட நாட்களிலும், கூட்டத்திற்கு முந்தைய இரு நாட்களிலும், மேலவை கூடும் ஊரில் அவரது முகவரிக்கும் ;

(ஆ) மற்ற நாட்களில், மேலவைச் செயலகத்தில் பதிவு செய்திருக்கின்ற அவருடைய நிலையான முகவரிக்கும் :

எனினும், கூட்ட நாட்களில் மேற்கூறிய அறிக்கைகளையும் அறிவிப்புகளையும் உறுப்பினர்களுக்கென அவையில் ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளில் வைக்கவோ நேரில் கொடுக்கவோ செய்யலாம்.

அத்தியாயம் 7

வினாக்கள்.

28. அமைச்சர் ஒருவரின் அதிகார வரம்பிலுள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைக் குறித்து தகவல் பெறுவதற்கு அமைச்சரிடம் எந்த உறுப்பினரும் வினா எழுப்பலாம். வினாக்களின் பொருள்.

29. (i) வாய்மொழி விடையை விரும்பும் உறுப்பினர் தமது வினாவினை உடுக்குறியிட்டு தனிப்படுத்தி அனுப்ப வேண்டும். அவ்வினா உடுக்குறியிட்ட வினா எனப்படும். உடுக்குறியிட்ட, உடுக்குறியிடாத வினாக்கள்.

(ii) அனுமதிக்கப்பட்ட மற்ற எல்லா வினாக்களும் உடுக்குறியிடாத வினாக்கள் எனப்படும்; அவை எழுத்து மூலமாக விடையளிக்கப்படும் வினாப் பட்டியலில் சேர்க்கப்படும்.

30. உடுக்குறியிட்டு முன்னறிவிப்பு கொடுக்கப்பட்ட வினாவிற்கோ, வாய்மொழி விடைக்கென அனுமதிக்கப்பட்ட வினாவிற்கோ, எழுத்து மூலமாக விடையளிப்பது பொருத்தமாக இருக்கும் எனத் தலைவர் கருதுவாரேயானால், அவ்வினாவை உடுக்குறியிடாத வினாவாக மாற்றி, எழுத்து மூலமான விடைக்குரிய வினாப்பட்டியலில் சேர்க்கலாம். இதில் தலைவரின் முடிவே இறுதியானதாகும் : வினா உடுக்குறியிட்டதா, இடாததா என்பதைத் தலைவர் முடிவு செய்தல்.

எனினும், தலைவர் விரும்புவாரேயானால், அம் முடிவு எடுப்பதற்கு முன், வாய்மொழி விடையை விரும்பியதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கூறுமாறு அந்த உறுப்

பினரைக் கேட்டறிந்து, அக்காரணங்களை ஆய்ந்த பிறகு, அவ் வினாவை எழுத்து மூல விடைக்கான வினாப் பட்டிய லில் சேர்க்கலாம்.

வினாவிற்குரிய பொருள்.

31. ஓர் அமைச்சரிடம் கேட்கப்படும் வினா அவரது அதிகாரத் தொடர்பு கொண்டுள்ள பொதுக் காரியங்கள் பற்றியதாகவோ, அவரது அதிகாரப் பொறுப்பிலுள்ள நிர் வாகக் காரியங்கள் பற்றியதாகவோ, அவற்றின் தொடர் பாக அவரிடம் உள்ள தகவலைப் பற்றியதாகவோ இருத்தல் வேண்டும்.

வினாக்களின் அமைப்பு முறை, பொருளடக்கம்

32. ஒரு வினா அனுமதிக்கப்பட வேண்டுமாயின், அது அடியிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் —

(1) அரசியலமைப்பின்படியும், இவ்விதிகளின்படியும் அனுமதிக்கப்படக் கூடியதாக அது இருக்க வேண்டும்;

(2) வினாவைத் தெளிவுபடுத்துவதற்காக அன்றி, ஒரு வர் பெயரையோ ஒரு வாக்குமூலத்தையோ அது விளம் பரப் படுத்தக் கூடாது;

(3) வாக்குமூலம் ஒன்றை ஒரு வினா உள்ளடக்கியிருப் பின் அந்த வாக்குமூலம் முற்றிலும் சரியானது என்பதற்கு அவ் வினாவை எழுப்பும் உறுப்பினர் பொறுப்பேற்க வேண் டும் ;

(4) செய்தித் தாள்களிலிருந்து திரட்டப்பட்ட வற்றை அது உள்ளடக்கியிருத்தல் கூடாது ;

(5) வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்கள் அல்லது மானக்கேடான கூற்றுக்கள் அதில் அடங்கியிருத்தல் கூடாது;

(6) எதைப்பற்றியும் கருத்தைத் தெரிவிக்கும் படியோ, சட்ட நுணுக்கப் பிரச்சினைக்கு அல்லது கற்பனைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படியோ அது இருக்கக்கூடாது ;

(7) ஒருவரது பதவி அல்லது பொது வாழ்வைப் பற்றி யல்லாது அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத் தையைப் பற்றியதாக அது இருக்கக்கூடாது ;

(8) முற்றிலும் தனிப்பட்ட அல்லது சொந்தக் குறைகளைப் பற்றியதாக அது இருக்கக்கூடாது ;

(9) அது எந்த ஒரு நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் வழக்கைப் பற்றியதாக இருக்கக்கூடாது; மேலும், அது தலைமை நீதிமன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நீதி வழங்கும் அலுவலைப் பொருத்த நடத்தை பற்றியதாகவும் இருக்கக்கூடாது ;

(10) அது மிகவும் நீண்டதாக இருக்கக்கூடாது ;

(11) மேலவையில் ஏற்கெனவே விடையளிக்கப் பட்ட அல்லது விடையளிக்க மறுக்கப்பட்ட வினாக்களின் பொருள் பற்றியதாக அது இருக்கக்கூடாது ;

(12) ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றிய கேள்வியை எதிர்பார்க்கக்கூடியதாக அது அமையக் கூடாது ;

(13) விடையில் அடக்க முடியாத பரந்த ஒரு கொள்கை விளக்கம் பற்றியதாக அது இருக்கக்கூடாது;

(14) அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய தகவலைக் கேட்பதாக அது இருக்கக் கூடாது ;

(15) அற்பமான அல்லது தெளிவற்ற பொருள் பற்றிய தகவலை அது கேட்கக்கூடாது ;

(16) விவாதத்திற்கெனவே பழைய வரலாறு குறித்த தகவல்களை அது சாதாரணமாகக் கேட்கக்கூடாது ;

(17) எளிதாகக் கிடைக்கக்கூடிய ஆவணங்களிலோ பொருள் விவர நூல்களிலோ இருக்கக்கூடிய தகவலை அது கேட்கக்கூடாது ;

(18) சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக்குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக்குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப் பட்ட குழு ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றிய தகவலைச் சாதாரணமாக அது கேட்கக்கூடாது ; ஆயினும், அவற்றின் ஆய்வுக்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படுத்தாதவாறு இருப்பின், அவைகள் கடைப்பிடிக் கும் முறை பற்றியதாகவோ, எப்பொருளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்டன என்பதைப் பற்றியதாகவோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாகவோ அது அமையலாம் :

(19) ஒரே பொருள் குறித்து சிறிய மாற்றங்களுடன் மீண்டும் மீண்டும் கேட்கக்கூடாது ;

(20) சட்ட மன்றக் குழுவின் அல்லது அரசின் குழுவில் ஆய்விலிருக்கும் பொருள் பற்றிய தகவலை, சாதாரணமாக அக் குழுவின் அறிக்கை வெளியிடப்படும் வரையில், அது கேட்கக்கூடாது ; மேலும்

(21) வெளிப்படுத்தக் கூடாத அந்தரங்கமான அல்லது இரகசியமான எந்த ஒரு பொருளைப் பற்றியும் அது தகவல் கோருவதாக இருக்கக்கூடாது.

ஒரே பொருள் பற்றிய வினாக்கள்.

33. ஒரு வினா அனுமதிக்கப்பட்ட பின், அதே பொருள் பற்றி பிற உறுப்பினர்கள் வினாக்களுக்கு முன்னறிவிப்பு கொடுப்பார்களேயானால், அந்த உறுப்பினர்களது பெயர்கள் ஏற்கெனவே வினா கொடுத்த உறுப்பினரின் பெயருடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

வினாக்கள் அனுமதிப்பதை தலைவர் முடிவு செய்தல்.

34. (1) ஒரு வினா அனுமதிக்கத்தக்கதா என்பதைத் தலைவர் முடிவு செய்யவேண்டும். மேலும் ஒரு வினா விதிகளுக்கு முரணானதென்றோ, அதன் மூலம் வினா எழுப்பும் உறுப்பினர் உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்றோ தலைவர் கருதினால், அந்த வினாவையோ அதன் பகுதியையோ அனுமதிக்க மறுக்கலாம்.

(2) ஒரு வினாவின் அமைப்பு அல்லது பொருள் விதிகளுக்கு முரண்பட்டது என்று தலைவர் கருதினால், விதிகளுக்கேற்ப அவ்வினாவில் மாற்றம் செய்து அதனை உரிய உறுப்பினருக்குத் தெரிவிக்கலாம்.

வினாப்பட்டியல்

35. வினாக்களின் முன்னறிவிப்பு செயலாளருக்குக் கிடைத்த 15 நாட்களுக்குள்ளாக, அவைகள் இயல்பாக அனுமதிக்கப்பட்டு, உரிய துறைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட வினாக்கள் தலைவரால் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள்ளாக வினாப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் ;

எனினும், ஒரு வினா அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் அதற்குரிய விடை செயலாளருக்கு அனுப்பப்பட முடியாவிடில், அதற்குத் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டால், தலைவர் மேலும் இரண்டு வாரங்களுக்கு மேற்படாமல் கால அளவை நீட்டிக்கலாம் ; அப்படி நீட்டிக்கப்பட்ட காலம் முடிந்ததும் வினாப் பட்டியலில் அவ் வினா சேர்க்கப்பட வேண்டும்.

36. (1) வினாக்களுக்கு ஒதுக்கப்பட்ட கால அளவு போதுமானதாக இருப்பின், அந்த நாளின் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் அப் பட்டியலில் கண்டுள்ள வரிசைப்படி எடுத்துக்கொள்ளப் பட வேண்டும். உடுக்குறியிட்ட வினாக்களை எடுத்துக் கொள்ளுதல்.

(2) வினா ஒன்றை எடுத்துக்கொள்ளும்போது, அது கேட்கப்படாவிட்டாலோ, அந்த வினாவிற்கு முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாமற் போனாலோ, மற்றொரு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, தலைவர் அவ் வினாவிற்கான விடையை அளிக்கும்படி செய்யலாம்.

(3) வினாப் பட்டியலிலுள்ள வாய்மொழி விடைக்கான வினாக்கள் அனைத்துக்கும் விடையளித்தான பிறகு, நேரம் இருந்தால், தலைவர், உறுப்பினர் இல்லாத காரணத்தால் விடுபட்டுப்போன வினாவை எழுப்ப அந்த உறுப்பினரை அனுமதிக்கலாம்.

(4) வாய்மொழியாக விடையளிக்கப்படாத எல்லா உடுக்குறியிட்ட வினாக்களும், எல்லா உடுக்குறியிடாத வினாக்களும், அவற்றின் விடைகளுடன், அச்சிட்டு வெளியாகும் மேலவையின் நடவடிக்கைப் பதிவேட்டில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

(5) உரிய அமைச்சரது வேண்டுகோளுக்கிணங்க, ஒரு நாளின் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்ட வினா அல்லது வினாக்களை, தலைவர் வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கலாம்.

37. ஒரு உடுக்குறியிட்ட வினாவிற்கு அளிக்கப்படும் விடை நீண்டதாகவோ, மிகுந்த புள்ளிவிவரங்களைக் கொண்டதாகவோ இருப்பின், வாய்மொழியாக அளிப்பதற்குப் பதிலாக அதை அவை முன் வைக்கவேண்டுமென்றும், மேலவையின் நடவடிக்கைப் பதிவேட்டில் அச்சிட வேண்டுமென்றும் எந்த நிலையிலும் தலைவர் ஆணையிடலாம். நீண்ட அறிகைகள் அல்லது புள்ளி விவரங்கள் கோரும் வினாக்கள்

38. விதிகளுக்குட்பட்டு, தலைவர் விருப்பத்திற்கும் முடிவிற்கும் இணங்க, வினாக்கள் வினவப்பட்டு விடைகள் அளிக்கப்பட வேண்டும். வினவும்முறை

39. (1) உடுக்குறியிட்ட வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையின் மீது மேற்கொண்டு விளக்கம் பெறும் வகையில் உறுப்பினர் எவரும் துணை வினா கேட்கலாம். துணை வினாக்களும் அவைகளை அனுமதித்தலும்.

(2) எந்த ஒரு துணை வினாவையும் விதிகளுக்கு முரணானது என தலைவர் கருதினால், அதற்கு அனுமதி மறுக்கலாம்; மேலும், ஒரு வினாவைப் பொறுத்து போதிய துணை வினாக்கள் கேட்கப்பட்டு விட்டதாகத் தலைவர் கருதினாலும், மேற்கொண்டு துணை வினாக்களை அனுமதிக்க மறுக்கலாம்.

வினா, துணை வினாவிற்கு விடையளிக்க மறுத்தல்

40. பொது நலனுக்கு ஒவ்வாது என்ற காரணத்தினால், ஒரு வினாவிற்கோ, துணை வினாவிற்கோ அமைச்சர் விடையளிக்க மறுக்கலாம்; மேலும், முன்னறிவிப்பு வேண்டுமென்ற காரணத்தினாலும், துணை வினா ஒன்றுக்கு விடையளிக்க மறுக்கலாம்.

குறுகிய கால வினாக்கள்.

40. அ. (1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி உரிய அமைச்சரது இசைவுடன் 7 நாட்களுக்கும் குறைவான முன்னறிவிப்போடு வினா ஒன்றை எழுப்பலாம்.

(2) அந்த 7 நாட்களுக்குள், உரிய அமைச்சரால் குறிப்பிடப்படும் நாளில், அத்தகைய வினாக்களுக்கான விடைகள் அளிக்கப்பட வேண்டும்; அன்றைய வினாப் பட்டியலில் கண்டுள்ள வாய்மொழி விடைக்கான வினாக்கள் முடிந்தவுடன், அவ் வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.

(3) மேலவைக் கூட்டத்திற்கான நாள் குறிப்பிடப் படாத காலத்திலும், நாள் குறிப்பிட்டிருந்தால், அந் நாளுக்கு 10 நாட்களுக்கு முன்னரும், குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்பு அனுமதிக்கப்படலாகாது; மேலும், அத்தகைய முன்னறிவிப்புகள் நாள் ஒன்றுக்கு ஓர் உறுப்பினரிடமிருந்து ஒன்றுக்கு மேல் ஏற்றுக் கொள்ளப்படலாகாது.

(4) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே பொருள் பற்றிய குறுகிய கால வினாக்கள் கொடுத்து, அவற்றுள் ஒன்று குறுகிய காலத்தில் விடையளிக்கப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்குமாயின் அவ் வினா கொடுத்தவரின் பெயரோடு, மேற் கொண்டு நான்குக்கு மேற்படாத உறுப்பினர்களின் பெயர்களும் அவர்கள் கொடுத்த முன்னறிவிப்புகளின் கால வரிசைப் படி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

(5) குறுகிய கால வினா ஒன்றுக்கு உரிய அமைச்சர் குறுகிய காலத்தில் விடையளிக்க இயலாதவராக இருந்து, அவ் வினா வாய்மொழி விடையளிக்கப்பட வேண்டிய அளவிற்கு போதிய பொது முக்கியத்துவம் வாய்ந்தது

எனத் தலைவர் கருதினால், அவ் வினாவை 35-வது விதிக்கிணங்க விடையளிக்கப்பட வேண்டிய நாளுக்குரிய வினாப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள தலைவர் ஆணையிடலாம்.

(6) குறுகிய கால வினா ஒன்றுக்கு முன்னறிவிப்பு கொடுக்கும் உறுப்பினர் அவ்வினாவை குறுகிய கால முன்னறிவிப்புடன் கேட்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்; அவ்வாறு காரணங்கள் எதுவும் கூறவிட்டால், அவ்வினா அவ்வுறுப்பினருக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும்.

41. வினா நேரத்தில் ஒரு வினா அல்லது ஒரு வினாவிற்கு அளித்த விடையைப் பற்றிய எவ்வித விவாதமும் அனுமதிக்கப்படலாகாது விவாதக்கட்டுப்பாடு.

எனினும், வினாவில் எழுப்பப்பட்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதம் ஒன்று வேண்டுமென வினா நேரத்தில் கோரியதன் மீது, தலைவர், தாம்கருதுகிறபடி, அதற்கென அரை மணி நேரத்தை அன்றைக்கு அலுவல் முடிந்த பிறகோ, தலைவர் தீர்மானிக்கிற வேறொரு நாளிலோ ஒதுக்கலாம். அவ்விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் வேறு எந்த அலுவலும் நடைபெறலாகாது; அவ்விவாதத்தின் மீது வாக்கெடுப்பும் கூடாது.

41-அ. (1) முன்னறிவிப்பு கொடுக்கப்படும் நாளுக்கு முன் ஐந்து நாட்களுக்குள்ளாக வாய்மொழியாக அல்லது எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்ட விடையின் பொருள் போதிய முக்கியத்துவம் உள்ளதாக இருந்து, மேலும் அப்பொருள் பற்றிய விளக்கம் தேவைப்பட்டால், அது பற்றிய விவாதத்திற்கென வாரத்தில் மூன்று நாள் கூட்டங்களில் அரை மணி நேரத்தை தலைவர் ஒதுக்கலாம். அரைமணி நேர விவாதம்

(2) அம்மாதிரி விவாதத்தை எழுப்ப விரும்பும் உறுப்பினர் ஒருவர், எந்த நாளில் அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்; அதில் எந்தெந்த முக்கிய கூறுகள் பற்றி விவாதம் எழுப்ப விரும்புகிறார் என்பதைப் பற்றியும் விவாதம் கோருவதற்கான காரணங்கள் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்:

எனினும், அம்மாதிரிக் கொடுக்கப்படும் முன்னறிவிப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருப்பின், அந்த முன்னறிவிப்பு முதலில் கையொப்பமிட்ட உறுப்பினரால் மட்டுமே கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும்:

எனினும், உரிய அமைச்சரது இசைவு பெற்று தலைவர் இவ்விதியின்படி வேண்டிய முன்னறிவிப்புக் காலத்தைத் தளர்த்தலாம்.

(3) அப்பொருள் விவாதம் எழுப்பப்படும் அளவிற்குப் போதிய பொது முக்கியத்துவம் வாய்ந்ததா என்பது குறித்து தலைவர் தீர்மானிக்க வேண்டும். இதில் அவரது முடிவே இறுதியானதாகும்.

(4) ஒன்றுக்கு மேற்பட்ட முன்னறிவிப்புகள் பெறப்பட்டு அவைகள் தலைவரால் ஓரே நாளுக்கு அனுமதிக்கப்படுமேயாயின், அவற்றில் ஒரு முன்னறிவிப்பைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு செயலாளர் குலுக்குச் சீட்டு முறையை மேற்கொள்ள வேண்டும்; அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னறிவிப்பு அந்நாளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(5) விவாதத்தை அவை முன் கொண்டுவருவதற்கு மரபு முறைத் தீர்மானமோ, வாக்கெடுப்போ தேவையில்லை. அரை மணி நேரமானவுடன் விவாதம் முடிவுறும்.

அத்தியாயம் 8.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவன ஈர்ப்பு

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவன ஈர்ப்பு.

42. (1) ஓர் உறுப்பினர், எழுத்து மூலமாக முன்னறிவிப்பு கொடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் பற்றி அமைச்சரது கவனத்தை ஈர்க்கலாம்:

எனினும், அவ்வாறு முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர் தவிர்க்க முடியாத நிலையில் அவையில் இல்லாதிருக்க நேரிடின், அவர் சார்பில் வேறோர் உறுப்பினர் தலைவரது அனுமதியுடன் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கலாம்.

(2) அம்மாதிரியான முன்னறிவிப்பு அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(3) அம்முன்னறிவிப்புகள், வினாக்களுக்குப் பின்னரும் அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பிற அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னரும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதன்மீது அமைச்சர் சுருக்கமான விளக்கத்தை அளிக்கலாம்.

(4) அளிக்கப்பட்ட விளக்கத்தின்மீது எவ்வித விவாதமும் கூடாது; அதைத் தெளிவாக்கும் வகையில், அமைச்சரின் கவனத்தை ஈர்த்த உறுப்பினர் இரண்டுக்கு மேற்படாத வினாக்களைக் கேட்பதற்கு தலைவர் தாம், கருதுகிறபடி அனுமதிக்கலாம்.

(5) இவ்விதியின்படி ஒரே நாளில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக் கூடாது; அதிலும் முதல் பொருளைக் கொண்டு வந்த அதே உறுப்பினரால் இரண்டாவது பொருள் கொண்டுவரப்படலாகாது.

(6) எந்த நாளைய கூட்டத்தில் இப்பொருள் எழுப்பப்பட இருக்கிறதோ அதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகக் கொடுக்கப்படும் முன்னறிவிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(7) இரண்டிற்கு மேற்பட்ட பொருள்கள் ஒரே நாளில் கவன ஈர்ப்பிற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டால், அவற்றில் எவ்விரண்டு பொருள்கள் அதிக அவசர முக்கியத்துவம் உடையனவென்று தலைவரால் கருதப்படுகின்றனவோ, அவ்விரண்டு பொருள்களுக்கு முன்னிடம் அளிக்கப்பட வேண்டும். தலைவரால் குறிக்கப்படும் ஏதாவது ஒரு பிந்தைய நாளில் மற்ற முன்னறிவிப்புகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்; அல்லது, அம்மாதிரியான முன்னறிவிப்புகள் அக்கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட முடியாவிட்டால், அம்முன்னறிவிப்புகளுக்கு வந்துள்ள விளக்கங்கள் உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பப்படலாம்.

(8) இவ்விதியின்படி அனுமதிக்கப்பட்ட முன்னறிவிப்புகள் கூட்டத் தொடரின் கடைசி நாளில் முடிவுறுது இருக்குமேயானால், அந்நாளில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இவ்விதியின்படி கொண்டுவருவதற்கு தலைவர், தாம் கருதுகிறபடி அனுமதிக்கலாம்.

(9) கூட்டத் தொடரின் கடைசி நாளில் முடிவுறுது இருக்கும் மற்ற அறிவிப்புகளெல்லாம் செயலற்றுப் போனவையாகக் கருதப்படும்:

எனினும், ஏற்கெனவே வந்துள்ள அமைச்சர்களுடைய விளக்கங்கள் உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட வேண்டும்.

அத்தியாயம் 9.

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

ஒத்திவைப்புத் தீர்மானம்.

43. ஒரு குறிப்பிட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து விவாதிப்பதற்காக மேலவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த அத்தியாயத்தின் விதிகளுக்கிணங்க கொண்டு வரலாம்.

அவையின் அனுமதி கேட்க தலைவரின் இசைவு.

44. (1) விவாதிக்கப்பட இருக்கும் நிகழ்ச்சிபற்றி ஒரு சுருக்கமான விளக்கத்துடன் கூடிய ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பை, தீர்மானம் கொண்டு வர முயலும் நாளில், அவைக் கூட்டம் தொடங்குவதற்குக் குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்பாக (1) தலைவர், (2) அவை முன்னவர், (3) செயலாளர் ஆகியவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். அத்தீர்மானத்தை முன்மொழிய அவையின் அனுமதி கோருவதற்கு தலைவரின் முன் இசைவைப் பெற வேண்டும்.

(2) அப்பொருளை அவையில் எழுப்புவதற்கு தலைவர், தமது இசைவைத் தர மறுக்கலாம். அப்படி மறுக்கப்படின் அந்த மறுப்பும் அதற்கான காரணங்களும் உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். தெரிவித்தபின், அப்பொருளை உறுப்பினர் அவையில் எவ்வகையிலும் எழுப்பலாகாது.

தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி தலைவர் முடிவு செய்தல்.

45. 44-வது விதியின்படி தலைவர் இசைவு அளித்தால், வினாக்கள் முடிவுற்ற பின்னரும், அலுவல் பட்டியலில் உள்ள பிற அலுவல்கள் தொடங்குவதற்கு முன்னரும், 44-வது விதியில் குறிப்பிடப்பட்ட முன்னறிவிப்பை தலைவர் அவைக்குப் படித்துக் காட்டி, விவாதிக்க இருக்கும் பொருள் முறைப்படி அமைந்துள்ளதா, இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு முடிவெடுக்கு முன்னர், தலைவர் அவசியம் என்று கருதினால், எழுப்பப்படும் பொருள் எவ்வாறு முறையானது என்பதை விளக்கும்படி உறுப்பினரைக் கேட்கலாம்; அரசின் கருத்தைக் கூறும்படி அவை முன்னவரையும் கேட்கலாம்.

தீர்மானத்தை தள்ளுபடி செய்ய தலைவர் காரணம் கூறல்.

46. தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வதெனத் தலைவர் முடிவெடுத்தால், அம் முடிவிற்கான காரணங்களைக் கூறலாம்.

அவையின் அனுமதி.

47. விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் பொருள் முறையானது என்று தலைவர் முடிவு செய்யின்,

''இந்நிகழ்ச்சி குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிவதற்கு அவையின் அனுமதியை உறுப்பினர் கோர வேண்டும்.

48. அவையின் அனுமதியை அந்த உறுப்பினர் கேட்டவுடன், உறுப்பினர் கோரும் அனுமதியை அவை அளிக்கின்றதா என்று தலைவர் கேட்கவேண்டும். எந்த உறுப்பினரேனும் எதிர்ப்பு தெரிவித்தால், தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களில் எழுந்து நிற்கும்படி தலைவர் கேட்டுக்கொள்ள வேண்டும். பத்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எழுந்து நிற்பின், அவ்வுறுப்பினருக்கு அவையின் அனுமதி கிடைத்துள்ளதென்று தலைவர் அறிவிக்க வேண்டும். பத்துக்குக் குறைவான உறுப்பினர்கள் எழுந்து நின்றால், அவையின் அனுமதி கிடைக்கவில்லையென்று அந்த உறுப்பினருக்குத் தலைவர் அறிவிக்க வேண்டும். அவையின் அனுமதி கேட்பதற்கான முறை.

49. தீர்மானத்திற்கு அவை அனுமதி கொடுத்தால், அதே நாளிலோ, அடுத்த நாளிலோ அந்நாளில் அவை அலுவல்கள் முடிவடைவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரோ, மற்ற அலுவல்கள் எல்லாம் முடிவுற்றவுடனே, தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தலைவர் நிர்ணயித்து, அதனை அவைக்கு அறிவிக்க வேண்டும். தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான நேரம்

50. அவையின் அனுமதியைப் பெறத் தவறும் தீர்மானம் ஒன்று அதே கூட்டத் தொடரில் மீண்டும் 43-வது விதியின்படி கொண்டுவரப்படக்கூடாது. தீர்மானங்களைத் திரும்பக் கொண்டு வருதல்.

51. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப்பற்றி விவாதிக்கும் பொருட்டு அவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் தீர்மானம் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன :— தீர்மானங்கள் கொண்டு வருவதற்கான வரையறைகள்.

(i) ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானம் விவாதிக்கப்படலாகாது.

(ii) ஒரே தீர்மானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் விவாதிக்கப்படலாகா.

(iii) அண்மையில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றியதாக மட்டுமே தீர்மானம் இருக்க வேண்டும்.

(iv) அதே கூட்டத் தொடரின் நடப்புக் காலத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ, வேறு வகையிலோ விவாதிக்கப்பட்ட ஒரு பொருள்பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாக தீர்மானம் இருக்கலாகாது.

(v) ஆய்விற்கென்று முன்னரே ஒதுக்கப்பட்டிருக்கிற ஒரு பொருளைப் பற்றியோ, முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டு கூடிய விரைவில் அவை முன் வரவிருக்கும் நிலையிலுள்ள தீர்மானத்தின் பொருள் பற்றி முன்கூட்டி விவாதத்தை எழுப்பும்படியானதாகத் தீர்மானம் அமையக் கூடாது.

(vi) அவையின் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாகத் தீர்மானம் இருக்கலாகாது.

(vii) அரசியலமைப்பு அல்லது இவ் விதிகளின்படி தீர்மானமாக போதிய முன்னறிவிப்போடு கொடுக்கப்பட வேண்டிய பொருளைப் பற்றி விவாதத்தை முன்கூட்டியே எழுப்புவதாகத் தீர்மானம் இருக்கலாகாது.

(viii) விவாதிக்கப்பட வேண்டிய பொருள் சாதாரண சட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

(ix) சட்டமியற்றி தீர்க்கப்பட வேண்டிய குறைபாடுகளைப் பற்றியதாகத் தீர்மானம் இருக்கலாகாது.

(x) தெளிவாக அரசின் பொறுப்புக்கு உட்பட்ட பொருள் ஒன்றைப் பற்றியதாகத் தீர்மானம் இருக்க வேண்டும்.

(xi) நீதி மன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் தீர்மானம் இருக்கலாகாது.

விசாரணைக் குழு, ஆணைக்குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்.

51-அ. சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, நீதி மன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக்குழு அல்லது ஆய்வதற்காகவோ, துப்பு துலக்குவதற்காகவோ அமைக்கப்பட்ட குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப்படலாகாது:

எனினும், அவற்றின் ஆய்விற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று தலைவர் கருதினால், அவை கடைப்பிடிக்கும் முறை பற்றியதாகவோ, எப்பொருளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்டன என்பதைப் பற்றியதாகவோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாகவோ உள்ள பொருளை அவையில் எழுப்ப, தலைவர், தாம் கருதுகிறபடி, அனுமதிக்கலாம்.

விவாதத்திற்கான கால வரையறை.

52. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட பொருள் மீதான விவாதம் முன்னரே முடிவடையாதிருப்பின், விவாதம் தொடங்கி இரண்டு மணி நேர இறுதியில் தானாகவே முடிவடையும்; அதன் பிறகு எப் பிரச்சினையும் அவையின் வாக்கெடுப்பிற்கு விடப்படக் கூடாது.

அத்தியாயம் 10.

தலைவர் அல்லது துணைத் தலைவரை நீக்குவதற்கான தீர்மானம்.

53. அவையின் அனுமதியுடன், தலைவர் அல்லது துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் கொண்டுவரப்படலாம். தலைவர் அல்லது துணைத் தலைவரை நீக்குவதற்கான தீர்மானம்.

ஆனால், செயலாளருக்கு எழுத்து மூலமாக பதினான்கு நாட்களுக்குக் குறையாத முன்னறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னரே, அத்தகைய தீர்மானம் அவையின் முன் கொண்டு வரப்படலாம்.

54. அத்தகைய தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கிடைத்ததும், தலைவர், அவை முன்னவருடன் கலந்தாலோசித்து அது விவாதிக்கப்பட வேண்டிய நாளை நிர்ணயிக்க வேண்டும். அத் தீர்மானத்தையும் அதன்மேல் விவாதத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட நாளையும் அனைத்து உறுப்பினர்களுக்கும் செயலாளர் தெரிவிக்க வேண்டும். விவாதத்திற்கான காலம்

55. 54-வது விதியின்படி நிர்ணயிக்கப்பட்ட நாளன்று மேலவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர், மேலவைக்கு அத் தீர்மானத்தைப் படித்துக் காட்டி, அதைக் கொண்டுவர அனுமதி அளிப்பதற்கு இசைவளிக்கும் உறுப்பினர்களை அவரவர்கள் இருக்கைகளில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். பத்துக்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நிற்பின், அத் தீர்மானம் முன்மொழியப் படுவதற்கு மேலவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் அனுமதிக்கவேண்டும். பத்துக்கும் குறைவான உறுப்பினர்கள் எழுந்து நிற்பின், அத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்த உறுப்பினருக்கு, அதை முன்மொழிய மேலவை அனுமதி மறுத்துவிட்டது எனத் தெரிவிக்க வேண்டும். அவையின் அனுமதி.

அத்தியாயம் 11.

பதவி விலகிய அமைச்சரது விளக்கம்.

56. (1) அமைச்சர் பதவியை விட்டு விலகிய உறுப்பினர் ஒருவர் தாம் பதவியை விட்டு விலகியதற்கான விளக்கத்தை தலைவரின் இசைவைப் பெற்றுக் கூறலாம். அமைச்சர் பதவியிலிருந்து விலகிய உறுப்பினரின் விளக்கம்.

(2) அவ்வாறு கொடுக்கப்படும் விளக்கத்தின் பிரதி ஒன்று தலைவருக்கும், அவை முன்னவருக்கும், விளக்கம் கொடுக்கப்பட இருக்கிற நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்:

ஆயினும், எழுத்து மூலமாக விளக்கமாக இல்லாவிடினும் அவ்விளக்கத்தின் சுருக்கத்தை அல்லது அதன் முக்கிய கூறுகளை தலைவருக்கும், அவை முன்னவருக்கும் விளக்கம் கொடுக்கப்பட இருக்கிற நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே தெரியப்படுத்த வேண்டும்.

(3) வினாக்கள் முடிவுற்ற பின், அந் நாளுக்குரிய அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அலுவல்கள் தொடங்கப்படுவதற்கு முன், அவ் விளக்கம் கூறப்பட வேண்டும்.

(4) அவ் விளக்கத்தின்மீது எவ்வித விவாதமும் இருக்கலாகாது; ஆனால், அவ் விளக்கத்திற்குப்பின் அதை அதனோடு தொடர்புடைய பொருத்தமான விளக்கம் ஒன்றினை அமைச்சர் ஒருவர் கூறலாம்.

அத்தியாயம் 12.

நிர்வாகம் பற்றிய அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசரப் பொருள்கள் குறித்து குறுகிய கால விவாதம்.

விவாதம் எழுப்புவதற்கான முன்னறிவிப்பு.

57. *(1)* அவசர நிர்வாக அலுவல் அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் ஒன்றைக் குறித்து விவாதம் எழுப்ப விரும்பும் உறுப்பினர் எவரும், அதைப் பற்றித் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிட்டு செயலாளருக்கு எழுத்து மூலமாக முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

(2) அப் பொருள் குறித்து விவாதம் எழுப்ப வேண்டியதற்கான காரணங்களை எடுத்துக் காட்டும் விளக்கக் குறிப்பு ஒன்று அந்த முன்னறிவிப்போடு இணைக்கப்பட வேண்டும்.

அனுமதித்தலை தலைவர் தீர்மானித்தல்.

58. அப் பொருள் அவையில் எழுப்பப்படத்தக்க அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்று தலைவர் கருதினால், அந்த முன்னறிவிப்பை அனுமதித்து, அவை முன்னவருடன் கலந்தாலோசித்து, அதன் மீது விவாதத்திற்கான நாளை அவர் நிர்ணயிக்கலாம்; அதை விவாதிப்பதற்கென ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத காலத்தை ஒதுக்கலாம்.

59. இவ்வத்தியாயத்தின்படி விவாதம் அனுமதிக்கப் படுவதற்கான ஒரு பொருள் கீழ்க்காணும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அனுமதிக்கான வரையறைகள்.

அவையாவன—

(i) அது திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட பொருளை எழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

(ii) அது அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றினைக் குறிப்பதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(iii) அது உரிமைப் பிரச்சினையை எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(iv) அதே கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்ட பொருள் ஒன்றினை மீண்டும் எழுப்புவதாக அது இருத்தல் கூடாது.

(v) அதே கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட வேண்டுமென்று முன்னரே முடிவு செய்யப்பட்ட பொருள் ஒன்றினை முன் கூட்டியே விவாதிப்பதாக அது இருத்தல் கூடாது.

(vi) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதி மன்றத்தின் விசாரணையிலுள்ள எப்பொருள் பற்றியதாகவும் அது இருத்தல் கூடாது.

(vii) சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, நீதி மன்றமாக அல்லது பகுதி நீதி மன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப்பட்ட குழு—இவற்றின் ஆய்வில் இருக்கும் எப்பொருள் பற்றியதாகவும் அது இருத்தல் கூடாது.

அத்தியாயம் 12—அ.

நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்கள்.

60. அரசியலமைப்பிலோ, இவ்விதிகளிலோ வேறு விதமாகக் கண்டிருந்தாலன்றி, பொது நலனைக் குறித்த பொருள் பற்றிய விவாதம் தலைவரது இசைவு பெற்ற ஒரு தீர்மானத்தின் வாயிலாகவே நடைபெற வேண்டும். பொது நலன் குறித்த பொருள் பற்றிய விவாதம்.

60-அ. தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு எழுத்து மூலமாக செயலாளருக்கு, அவரது முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு.

தீர்மானத்தை அனுமதிப்பதற்கான வரையறைகள்

60-ஆ. தீர்மானம் ஒன்று அனுமதிக்கப்பட வேண்டுமாயின், அது கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன—

(i) அது திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட பொருளை எழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

(ii) அதில் வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்கள், மறை முகமான குற்றச் சாட்டுகள் அல்லது மானக் கேடான கூற்றுகள் அடங்கியிருத்தல் கூடாது.

(iii) அது ஒருவரது பொது வாழ்க்கையைப் பற்றியதாகவன்றி அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத்தை பற்றியதாக இருத்தல் கூடாது.

(iv) அது அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றினைக் குறிப்பதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(v) அது உரிமைப் பிரச்சினையை எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(vi) அதே கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்ட பொருள் ஒன்றினைப் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாக அது இருத்தல் கூடாது.

(vii) அதே கூட்டத் தொடரில் விவாதிக்கப்படக்கூடியதாக இருக்கிற பொருள் ஒன்றினை முன் கூட்டியே எழுப்புவதாக அது இருத்தல் கூடாது.

(viii) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதி மன்றத்தின் விசாரணையிலுள்ள எப்பொருள் பற்றியதாகவும் அது இருத்தல் கூடாது.

தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி தலைவர் முடிவு செய்தல்.

60-இ. ஒரு தீர்மானம் அல்லது அதன் பகுதி, இவ் விதிகளின்படி அனுமதிக்கப்படத்தக்கதா இல்லையா என்பதைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். தீர்மானம் கொண்டு வரும் உரிமையைத் தவறுகப் பயன்படுத்துவதாகவோ, அவையின் நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டு தடங்கல் விளைவிப்பதாகவோ, பாதகம் விளைவிக்கக்கூடியதாகவோ, இவ் விதிகளுக்கு முரணானதாகவோ ஒரு தீர்மானம் அல்லது அதன் ஒரு பகுதி இருக்கின்றதெனத் தலைவர் கருதுவாரேயானல், அதற்கான அனுமதியை மறுக்கலாம்.

விசாரணைக்குழு ஆணைக்குழு போன்றவைகளின் முன்னுள்ள.

60-ஈ. சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, நீதி மன்றமாக அல்லது பகுதி நீதி மன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ, அமைக்கப்பட்ட

குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப்படலாகாது: பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்.

எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று தலைவர் கருதினுல், அவை கடைப்பிடிக்கும் முறை பற்றியதாகவோ, எப்பொருளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்டன என்பதைப் பற்றியதாகவோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாகவோ உள்ள பொருளை அவையில் எழுப்ப, தலைவர், தாம் கருதுகிறபடி, அனுமதிக்கலாம்.

60-உ. தலைவர் ஒரு தீர்மானத்திற்கான முன்னறிவிப்பை அனுமதித்து, அது விவாதிக்கப்பட வேண்டிய நாள் குறிப்பிடப்படாவிடில், உறுப்பினர்களுக்கான " தகவல் " இதழில் " நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்கள் " என்ற தலைப்பின் கீழ் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்களை சுற்றறுப்புதல்.

60-ஊ. அவையின் அலுவல் நிலையை ஆராய்ந்தும், அவை முன்னவருடன் கலந்தாலோசித்தும், தீர்மானத்தின் மீது விவாதத்திற்கான நாள் அல்லது நாட்கள் அல்லது ஒரு நாளின் பகுதியை தலைவர் ஒதுக்க வேண்டும். தீர்மானங்களின் மீதான விவாதமும் நேரம் ஒதுக்கலும்.

60-எ. விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட நாளில் அல்லது நாட்களின் கடைசி நாளில் குறிப்பிட்ட காலம் முடிவடையும் போது, மூலப் பொருள் மீதான அவையின் முடிவை அறிவதற்குத் தேவைப்படும் எல்லாப் பிரச்சினைகளையும் அவையின் முடிவிற்கு தலைவர் வைக்க வேண்டும். குறிப்பிட்ட கால முடிவில் தலைவர் வாக்கெடுப்புக்கு விடுதல்.

அத்தியாயம் 13.

பொது நடைமுறை விதிகள்.

61. மேலவையின் அலுவல் தமிழிலோ, ஆங்கிலத்திலோ, இரு மொழிகளிலுமோ நடைபெற வேண்டும்; மேலும் ஓர் உறுப்பினர் ஏற்பளிக்கப்பட்ட எம் மொழியிலாவது அல்லது இந்தியிலாவது உரையாற்றலாம். மேலும் மேற்கூறிய மொழிகள் எதிலும் தமது கருத்தைத் தெளிவுற எடுத்துரைக்க முடியாத உறுப்பினர் தமது தாய்மொழியில் அவையில் உரையாற்றலாம். மேலவையின் அலுவல் மொழி.

விளக்கம்.—இவ்விதியில் ஏற்பளிக்கப்பட்ட மொழி எனப்படுவது, கீழ்க்காணும் மொழிகளில் ஒன்றைக் குறிக்கும் : அவையாவன :—தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.

62. நீக்கப்பட்டது.

அவையில் இருக்கும் போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.

63. அவையில் உரையாற்றுமல் இருக்கும் ஓர் உறுப்பினர்—

(i) அவையின் அலுவல் பற்றியன்றி, செய்தித்தாள் எதையும் படிக்கலாகாது.

(ii) அமைதியாக இருத்தல் வேண்டும்.

(iii) உரையாற்றும் உறுப்பினர் ஒருவருடைய உரையை ஒழுங்கற்ற சொற்களாலோ, முறையற்ற வேறு வகையிலோ இடைமறித்தல் கூடாது.

(iv) தமது இருக்கையில் அமருகையிலும் இருக்கையை விட்டு வெளியே செல்லுகையிலும் தலைவரை நோக்கி மரியாதை செலுத்த வேண்டும்.

(v) தலைவர் இருக்கைக்கும் உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினருக்கும் குறுக்கே செல்லக்கூடாது.

(vi) தலைவர் அவைக்கு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, எழுந்து நிற்கவோ, அவையை விட்டு வெளியேறவோ கூடாது.

(vii) உறுப்பினர் தனக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும்.

(viii) அவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ இடை மறிக்கவோ கூடாது. மேலும், அவையில் உரைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, நேர்முக வர்ணனைகள் செய்தல் கூடாது.

உறுப்பினர்கள் எழுந்து நின்று உரையாற்ற வேண்டும்.

64. அவை முன்னுள்ள பொருள் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பும் எந்த உறுப்பினரும் தமது இருக்கையில் எழுந்து நின்று தலைவர் பேசுமாறு அழைத்த பின்னர், தமது இடத்திலிருந்தே தலைவரை நோக்கி உரையாற்ற வேண்டும். எந்நேரத்திலாவது தலைவர் எழுந்து நின்றுல். அவர் கூறுவதை அமைதியாகக் கேட்க வேண்டும் ; அவ்வேளையில் உறுப்பினர் எவரும் பேசக் கூடாது ; உரையாற்றிக் கொண்டிருந்தால், உரையை மேற் கொண்டு தொடராது, உடனடியாகத் தமது இருக்கையில் அமர்ந்துவிடவேண்டும் :

எனினும், உடல் நலிவாலோ, வேறு வகையிலோ இயலாதிருப்பின், ஓர் உறுப்பினர் தமது இருக்கையில் அமர்ந்தவாறே உரையாற்ற அனுமதிக்கப்படலாம்.

65. விவாதத்தின்போது விளக்கம் கோரும் வகையிலோ, போதிய வேறெந்தக் காரணத்திற்காகவோ, ஓர் உறுப்பினர் மற்ருெரு உறுப்பினரை அவையில் விவாதிக்கப்படும் பொருள் பற்றி வினவ வேண்டுமெனின், அவ்விஞவை அவர் தலைவர் மூலமாகக் கேட்க வேண்டும். விளக்கங்கள்.

66. ஆற்றப்படும் உரை ஒவ்வொன்றும் மேலவையின் ஆய்விலுள்ள பொருளைப் பற்றியதாக மட்டுமே இருத்தல் வேண்டும். விவாத வரம்பகள்.

67. உரையாற்றுகையில் உறுப்பினர்— உரையாற்றுகையில் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.

(i) நீதி விசாரணையில் இருக்கும் எந்தப் பொருளின் மீதும் தமது கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிப் பேசவோ கூடாது.

(ii) உறுப்பினர் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசக் கூடாது.

(iii) நாடாளுமன்றம், மற்ற மாநில சட்ட மன்றங்கள் அல்லது இம்மாநிலப் பேரவை ஆகியவைகளின் செயல் அல்லது நடவடிக்கைகளைப் பற்றிக் கடுமையான சொற்களால் தகாத முறையில் பேசக் கூடாது.

(iv) அவையின் முடிவை மாற்றுவதற்கெனக் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மேலன்றி, அவை எடுத்த முடிவிற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் பேசக்கூடாது.

(v) குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் ஒருவரைப் பற்றியோ, எந்த ஒரு நீதிமன்றத்தின் நடத்தைக்கும் களங்கம் கற்பிக்கும் வகையிலோ பேசக்கூடாது; மேலும் விவாதத்தின் போக்கைப் பாதிக்கும். வகையில் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் பெயரைத் தவருன முறையில் பயன்படுத்தக்கூடாது.

(vi) நாட்டிற்குக் கேடு பயப்பதான, ஆரசு/நாட்டுத் துரோகம் விளைவிப்பதான, மானக்கேடான அல்லது அவைக்கு ஒவ்வாத சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

(vii) மேலவை அலுவலைத் தடுக்கும் வகையில் தமது பேச்சுரிமையைப் பயன்படுத்தக் கூடாது.

68. மேலவையினுல் முடிவு செய்யப்பட வேண்டிய ஒவ்வொரு பொருளும் தீர்மான வடிவில் உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்டு, அதில் எழும் பிரச்சினை என்னவென்று குறிப்பிட்டு தலைவர் படிப்பதன் அல்லது சொல்லுவதன் மூலம் மேலவையின் முன் கொண்டுவரப்படும். தீர்மானம்.

தீர்மானங்களை வழிமொழிதல்.

69. ஒவ்வொரு தீர்மானமும் உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்டு, மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பட வேண்டும் ; தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தீர்மானத்தை வழிமொழியும் உறுப்பினர் தமது உரையை விவாதத்தின் பிந்திய கட்டத்தில் ஆற்றலாம். வழிமொழியப்படாத தீர்மானம் உடனே கைவிடப்படும் :

எனினும், அமைச்சர் ஒருவரால் மொழியப்படும் தீர்மானம் வழிமொழியப்பட வேண்டியதில்லை.

உரையாற்றும் வரிசை முறை.

70. தீர்மானம் ஒன்றைத் தலைவர் அவைக்குப் படித்துக் காட்டிய பின்னர், அவர் அழைக்கிற வரிசையில் உறுப்பினர்கள் அதன்மீது உரையாற்றலாம்.

வாக்கெடுப்பு முறை.

71. (1) அரசியலமைப்பிலோ, பிற சட்டங்களிலோ, இவ்விதிகளிலோ வேறு விதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி ஒரு தீர்மானத்தின் மீதான விவாதம் முடிவுற்றதும், தலைவர் பிரச்சினையை அவையின் வாக்கெடுப்பிற்கு வைத்து/குரல் வாக்கெடுப்பு மூலம் முடிவு சொல்ல வேண்டும். அப்போது தீர்மானத்தை ஏற்போர் " ஆம் " என்றும் எதிர்ப்போர் " இல்லை " என்றும் சொல்லுமாறு தலைவர் கேட்டுக்கொள்ளவேண்டும்.

(2) அதன்பின், ' "ஆம்" என்போரே அதிகம் ' அல்லது, ' "இல்லை" என்போரே அதிகம் ' என்று தலைவர் சொல்லவேண்டும். அவையின் முடிவைக் குறித்து தலைவரின் கருத்தை யாரும் மறுக்காவிடின், அவர் இருமுறை " 'ஆம்' என்போரே அதிகம் " அல்லது " 'இல்லை' என்போரே அதிகம் " என்று சொல்லி, அவையின் முன் உள்ள பிரச்சினையை முடிவு செய்யவேண்டும்.

(3) அவையின் முடிவைக் குறித்து தலைவரின் கருத்து மறுக்கப்படின், அவர் பொருத்தமெனக் கருதினால், அவையின் வாக்குகளை எண்ணிக்கணிக்கும் முறையில் எடுக்கலாம்.

(4) எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு எம்முறையில் அமைய வேண்டும் என்பதைத் தலைவர் நிர்ணயிக்க வேண்டும்.

(5) அவையின் வாக்குகளை எண்ணிக்கணிக்கும் முறையில் எடுக்க தலைவர் முடிவு செய்தால், அழைப்பு மணியை அடிக்கும்படி அவர் ஆணையிட்டு, இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, நுழை வாயில்களை மூடும்படியாக ஆணையிட வேண்டும் ; பிறகு துணை விதி (2)-ல் கூறியபடி இரண்டாவது முறையாக பிரச்சினையை அவைமுன் வைக்க வேண்டும். அவரது கருத்து மறுமுறையும் மறுக்கப்பட்டால்,

'ஆம்' என்போரையும் 'இல்லை' என்போரையும் அவரவர்கள் இடத்தில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டு வாக்களிப் போருடைய பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(6) எண்ணிக் கணித்த வாக்கெடுப்பு முடிவு தலைவ ரால் அறிவிக்கப்பட வேண்டும் ; அம் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாகாது.

(7) எண்ணிக் கணித்த வாக்கெடுப்பின் முடிவைத் தலைவர் அறிவிப்பதற்கு முன்னர், வாக்குகள் பதிவு செய்த தில் ஏதேனும் தவறு ஏற்பட்டுள்ளது என ஐயமின்றி அறிந்தால், அதைத் திருத்திக் கொள்ளுவதற்கு தலைவர் அனுமதிக்கலாம். அழைப்புமணிகேட்கவில்லை என்ற காரணத் தால் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பின் முடிவு எந்த உறுப்பினராலும் மறுக்கப்படக் கூடாது.

(8) எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவசியமின்றிக் கேட்கப்படுகிறதென்று தலைவர் கருதினால், அவர் முறையே 'ஆம்' என்று ஏற்பவர்களையும், 'இல்லை' என்று எதிர்ப்பவர் களையும் தனித்தனியே அவரவர்கள் இடத்தில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களது எண்ணிக்கையைக் கணித்து, அவையின் முடிவு என்ன என்பதை வெளியிடலாம். அவ்வாறு கணிக்கப்படும்போது, வாக்களிப்பவர்களின் பெயர்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட மாட்டாது.

(9) அவையால் முடிவு செய்யப்பட இருக்கும் பொரு ளில், வாக்களிக்கும் உறுப்பினர் எவருக்கேனும் நேர்முக மாகவோ, தனித்தோ, ஆதாயமளிக்கக்கூடிய வகை யிலோ தொடர்பு உள்ளது என்ற காரணத்தால் அவர் அளிக்கும் வாக்கைச் சேர்க்கக்கூடாது என எதிர்ப்பு எழுப்பப்படின், எதிர்ப்பை எழுப்பும் உறுப்பினரை, அவ்வாறு எதிர்ப்பதற்கான காரணங்களைக் குறிப் பாக அவைக்குக் கூறுமாறு, தேவை எனின் தலைவர் கேட்டு, எந்த உறுப்பினரின் வாக்குக்கு எதிர்ப்பு எழுப்பப் படுகிறதோ, அவரது விளக்கத்தையும் கேட்டு, அந்த உறுப்பினரின் வாக்கு எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப் படவேண்டுமா இல்லையா என்பதைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும் ; அவரது முடிவு இறுதியானதாகும்.

அவ்வாறு உறுப்பினர் அல்லது உறுப்பினர்களது வாக்கு களுக்கு எழுப்பப்படும் எதிர்ப்பு, எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு முடிந்தவுடன், வாக்கெடுப்பின் முடிவைத் தலைவர் அறிவிப்பதற்கு முன்னதாக எழுப்பப்படவேண்டும்.

விளக்கம்.— இவ்விதியைப் பொறுத்தவரை, வாக்களிக்கும் எந்த உறுப்பினரது வாக்கு ஏற்கப்படக் கூடாது என்று எதிர்ப்பு எழுப்பப்படுகிறதோ, அது அந்த

உறுப்பினரைத் தனிப்பட்ட முறையில் சார்ந்ததாக இருக்க வேண்டுமேயன்றி, பொதுவாக மற்றவர்களோடு இணைந்ததாகவோ, ஒரு வகுப்பு அல்லது பிரிவினது நலத்துடன் ஒன்றியதாகவோ, அரசினது கொள்கையைப் பற்றியதாகவோ இருத்தல் கூடாது.

தீர்மானங்களின் வரையறைகள்.

72. ஒரே கூட்டத் தொடரில் மேலவை முடிவு செய்துள்ள பொருளுக்குப் பெரும்பாலும் அதே கருத்துள்ள மற்றொரு தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடாது.

விளக்கம் (1).—அரசியலமைப்பு 197, 198-வது பிரிவுகளுக்கு உட்பட்டு, சட்ட முன்வடிவு ஒன்றினை மேலவை நிறைவேற்றியிருந்தாலோ, நிராகரித்திருந்தாலோ அன்றி, அதைப்பற்றி மேலவை முடிவு செய்ததாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

விளக்கம் (2).—சட்ட முன்வடிவின்மீது கீழ்க்கண்ட தீர்மானங்களில் ஏதேனும் ஒன்று அவையால் நிராகரிக்கப்படின், இவ்விதியைப் பொறுத்தவரை அச் சட்ட முன்வடிவு, நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்—

(i) சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம்,

(ii) சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரால் ''இச் சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என முன்மொழியப்பட்ட தீர்மானத்திற்குத் திருத்தமாக அமைந்தாலன்றி, ஒரு சட்ட முன்வடிவு மேலவையின் ஆய்வுக் குழுவிற்கு, அல்லது இரு அவைகளின் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு, அனுப்பப்பட வேண்டும் என்ற தீர்மானம்,

(iii) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம்,

(iv) சட்ட முன்வடிவு, ஆய்வுக் குழுவினால் ஆய்ந்து அறிக்கையளிக்கப்பட்டவாறு, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம், அல்லது

(v) சட்ட முன்வடிவு, அல்லது திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு, நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானம்.

தீர்மானங்களைத் திரும்பப் பெறல்.

73. (1) ஓர் உறுப்பினர் தம்மால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தையோ, தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்ட திருத்தத்தையோ, உறுப்பினர் ஒருவர்கூட மறுக்காத நிலையில், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறலாம் :

எனினும், ஒரு தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் முன் மொழியப்பட்டிருந்தால், திருத்தத்தின் மீது முடிவெடுக்கப் படும்வரை மூலத் தீர்மானம் திரும்பப் பெறப்படலாகாது.

(2) தீர்மானம் அல்லது தீர்மானத்தின் மீது திருத்தம்— இவற்றின்மேல் உள்ள பிரச்சினை அவை முன் வாக்கெடுப் பிற்கு வைக்கப்படும் நேரத்தில், தீர்மானத்தையோ, திருத்தத்தையோ கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லா திருப்பின், அவ்வாறு தீர்மானத்தின் அல்லது திருத்தத்தின் மீது எழும் பிரச்சினையை அவை முன் வைக்க வேண்டு மென்று வேறு உறுப்பினர் எவரேனும் கேட்டுக்கொண்டா லொழிய, அது திரும்பப் பெறப்பட்டு விட்டதாகக் கருதப் படும்.

74. பதிலுரை ஆற்றும் உரிமையினாலோ, வேறுவிதமாகக் கண்டிருந்தாலோ அன்றி, எந்த உறுப்பினரும் ஒரு தீர் மானத்தின் மீது ஒரு முறைக்கு மேல் பேசக்கூடாது. ஆனால், விவாதத்தின்போது குறிப்பிடப்பட்ட அல்லது குறைகூறப் பட்ட உறுப்பினர் ஒருவர், தலைவரின் அனுமதி பெற்று, தன்னிலை விளக்கம் கூறும் வகையில் பேசலாம். அப்படிப் பட்ட விளக்கம் அவர் மீது கூறப்பட்ட குறையைப் பற்றிய தாக இருக்கலாமேயன்றி, புதிய அல்லது சர்ச்சைக்குரிய வேறு எப்பொருளையும் பற்றியதாக இருக்கக்கூடாது. பதிலுரை ஆற்றும் உரிமையும் இரண்டாம் முறை உரையும்.

75. (1) தனிச்சிறப்பு வாய்ந்த தீர்மானத்தை முன் மொழிந்த உறுப்பினர் ஒருவர் விவாதத்திற்குப் பதில் கூறும் வகையில் திரும்பவும் பேசலாம்; 43-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழிந்தவருக்கு பதி லளிக்கும் உரிமை உண்டு; தீர்மானம் தனி உறுப்பினர் ஒரு வரால் கொண்டுவரப்பட்டிருந்தால் அவ்வுறுப்பினர் பதி லுரைத்தபின், அப்பொருள் சம்பந்தப்பட்ட அமைச்சர், முன்னரே விவாதத்தில் கலந்து கொண்டிருந்தாலும் இல்லா விட்டாலும். அதற்குப் பதில் கூறுவதற்கு உரிமை உள்ளவர் ஆவார். பதிலளிக்கும் உரிமை.

விளக்கம்.—கீழ்க்கண்டவை தனிச் சிறப்பு வாய்ந்த தீர் மானங்களாகக் கருதப்பட மாட்டா :—

(i) தீர்மானத்திற்குத் திருத்தம், அல்லது

(ii) ஆளுநரின் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர் மானத்தின் மீதான திருத்தம்.

(2) மூலத் தீர்மானத்தின் மீதோ, வேறு ஒரு தீர் மானத்தின்மீதோ பேசியிருப்பினும், மற்றொரு திருத்தத் தின் மீது ஓர் உறுப்பினர் பேசலாம்.

(3) பதிலுரையாற்றும்போது ஓர் உறுப்பினர், விவாதத்தில் எழுப்பப்பட்ட பொருள்களைப் பற்றி மட்டும் உரையாற்ற வேண்டுமேயன்றி, புதிதாக சர்ச்சைக்குரிய வேறு பொருள் எதையும் கூறலாகாது.

திருத்தங்கள் பற்றிய விதிகள்.

76. (1) சட்ட முன்வடிவு அல்லது தீர்மானத்திற்குக் கொண்டுவரப்படும் திருத்தம், அதற்குத் தொடர்புடையதாகவும், அதன் பொருள் வரம்பிற்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) எதிர்த்து வாக்களிக்கும் விளைவை உண்டாக்கும் எந்தத் திருத்தமும் கொண்டுவரப்படலாகாது.

(3) ஒரு சட்ட முன்வடிவு அல்லது அதன் பிரிவு அல்லது தீர்மானம் இவற்றின் எந்த ஒரு பகுதியின் மீதான திருத்தத்தின் மீதும் முடிவெடுக்கப்பட்ட பின், அதற்கு முன் இருக்கும் பகுதியைப்பற்றிய திருத்தம் எதுவும், அவையின் அனுமதியின்றி, கொண்டுவரப்படலாகாது.

விவாதிப்பதற்கான திருத்தங்களைத் தேர்ந்தெடுத்தல்.

77. ஆய்விலுள்ள எந்த ஒரு தீர்மானத்தையோ, சட்ட முன்வடிவையோ பொறுத்தவரை—

(1) ஒரே மாதிரியாகவோ, கருத்தளவில் ஒருமித்தோ உள்ள திருத்தங்களில் ஏதாவது ஒன்றை மட்டும் முன்மொழியப்படுவதற்கு தலைவர் தேர்ந்தெடுக்கலாம்; அல்லது

(2) அவ்வாறு தேர்ந்தெடுப்பதில் முடிவெடுப்பதற்காக, தேவையென்று கருதினால் ஒரு திருத்தத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்துள்ள உறுப்பினரை, அத்திருத்தத்தின் நோக்கத்தைப் பற்றிய விளக்கத்தைக் கூறுமாறு, தலைவர் கேட்கலாம்.

விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரல்.

78. (1) ஒரு தீர்மானம் அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின் எந்த நேரத்திலும் அதில் எழும் 'பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும்' என எந்த உறுப்பினரும் கோரலாம்; அவ்வாறு கோருவது இவ்விதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்றோ, நியாயமான விவாத உரிமையைப் பாதிப்பதாகும் என்றோ தலைவர் கருதினாலன்றி, 'பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும்' என்ற தீர்மானத்தினை அவையின் வாக்கெடுப்பிற்கு தலைவர் விடவேண்டும்.

(2) 'பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், மூலத் தீர்மானமும், அதன் மீதான திருத்தங்களும் மேற்கொண்டு எவ்வித விவாதமுமின்றி அவையின் உடனடி முடிவிற்கு வைக்கப்பட வேண்டும்:

எனினும், அதற்கு முன்னர் இவ் விதிகளின்படி பதிலளிக்கும் உரிமை பெற்ற உறுப்பினர் எவரையும் பதில் கூற தலைவர் அனுமதிக்கலாம்.

79. ஒரு கூட்டத்தையோ, அலுவலையோ ஒத்திவைக்க வேண்டுமென்றோ, தள்ளிப்போட வேண்டுமென்றோ, அலுவல் பட்டியலிலுள்ள வரிசையில் அடுத்துள்ள அலுவலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றோ ஒரு தீர்மானம், தனிப் பிரச்சினையாக முன்னறிவிப்பு ஏதுமின்றி, எந் நேரத்திலும், அது ஓர் உறுப்பினரின் உரையை இடைமறிக்காதவாறு இருந்தால், கொண்டுவரப்படலாம். அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதன்படி 21 (3) விதியில் வகை செய்யப்பட்டிருப்பதற்கு உட்பட்டு, கூட்டம் அல்லது அலுவல் ஒத்திவைக்கப்பட அல்லது தள்ளிப்போடப்பட வேண்டும்; அல்லது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அலுவல் பட்டியலிலுள்ள வரிசையில் அடுத்துள்ள அலுவல் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இருந்தால், அச் சமயத்தில் அவையின் ஆய்விலுள்ள அலுவல் முடிவுற்றதாகக் கருதப்படும்: ஒத்திவைப்பு.

எனினும், அரசியலமைப்பு அல்லது இவ் விதிகளின்படி அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி ஆளுநர் அல்லது தலைவர் இட்ட சிறப்பு ஆணைப்படி ஓர் அலுவலுக்கென குறிக்கப்பட்ட நாளில் நடைபெறும் கூட்டத்தை அல்லது ஓர் அலுவலை ஒத்திவைக்கும்படி அல்லது தள்ளிப்போடும்படி உறுப்பினர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர இவ்விதி அனுமதிக்காது;

மேலும், அத்தகைய தீர்மானம், அவையின் விதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்று தலைவர் கருதினால், அதனை உடனடியாக அவையின் முன் வைக்கவோ, நிராகரிக்கவோ செய்யலாம்;

மேலும், ஒரு பொருள் குறித்து நடக்கும் விவாதத்தின்போது இவ்விதியின்படியுள்ள தீர்மானம் ஒன்றை ஒரு முறைக்கு மேல் கொண்டுவரலாகாது.

80. அவையில் விவாதத்திற்கு வரும் எப் பொருளின் மீதும் ஆற்றப்படும் உரைகளுக்கு, தேவையென்று கருதினால், தலைவர் காலவரம்பினைக் குறிக்கலாம். உரையாற்றும் நேரம்.

81. அவையின் ஆய்வில் இல்லாத பொருள் பற்றியும் கூட உறுப்பினர் ஒருவர், தலைவரின் அனுமதியின் பேரில், தன்னிலை விளக்கம் ஒன்றை அவைக்குக் கூறலாம். ஆயின் அவ்விளக்கத்தில் சர்ச்சைக்குரிய பொருள் எதுவும் புகுத்தப்படக்கூடாது; மேலும், அவ்விளக்கத்தின் மீது எவ்வித விவாதமும் அனுமதிக்கப்படலாகாது. தன்னிலை விளக்கம்.

அமைச்சரின் அறிக்கை.

82. பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி, தலைவரின் இசைவினைப் பெற்று, அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம் ; ஆனால், அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித வினாவும் எழுப்பப்படலாகாது.

ஒழுங்குப் பிரச்சினைகள் மீதான முடிவு.

83. (1) அவையில் எழுப்பப்படும் எல்லா ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும் தலைவர் முடிவு செய்ய வேண்டும்; அவரது முடிவே இறுதியானதாகும்.

(2) எச் சமயத்திலும் உறுப்பினர் ஒருவர் தலைவரின் முடிவிற்காக ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பலாம். அவ்வாறு எழுப்பும் போது, உறுப்பினர் தாம் எழுப்பும் பிரச்சினையை மட்டுமே கூறவேண்டும்.

(2-அ) அவையின் நடைமுறையை முறைப்படுத்துகிற அரசியலமைப்பின் பிரிவுகள் அல்லது இவ்விதிகளைச் செயல்படுத்துவது பற்றியோ, அவற்றின் பொருள் விளக்கத்தைப் பற்றியோ, அவையின் ஒழுங்கைப் பேணுவது பற்றியோ, அவையின் ஆய்விலேயுள்ள அலுவல் பற்றியோ மட்டுமே ஒழுங்குப் பிரச்சினை அமைய வேண்டும்.

(3) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின் மீது எவ்வித விவாதமும் அனுமதிக்கப்பட மாட்டாது ; ஆயின், தலைவர் தமது முடிவைக் கூறுமுன், வேண்டுமெனக் கருதினால் அது பற்றிக் உறுப்பினர்களின் கருத்தைக் கேட்கலாம்.

(4) ஓர் உறுப்பினர்—

(அ) தகவல் கேட்பதற்காகவோ ;

(ஆ) தமது நிலையை விளக்குவதற்காகவோ ;

(இ) ஒரு தீர்மானத்தின் மீதான பிரச்சினை அவையின் வாக்கெடுப்பிற்கு விடப்படும்போதோ ;

(ஈ) அனுமானமாக ஒரு பொருள் பற்றியோ ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பக்கூடாது.

ஒழுங்கைப் பேணுதல்.

84. அவையில் ஒழுங்கைப் பேணுவதற்கும் இவ்விதிகளையும் தமது முடிவுகளையும் செயல் படுத்துவதற்கும் தேவையான அதிகாரம் அனைத்தும் தலைவருக்கு உண்டு.

கூறியதையே கூறல் அல்லது பொருத்த மற்றவை கூறல்.

85. உறுப்பினர் எவரேனும் அவையின் ஆய்விலுள்ள பொருளுக்குத் தொடர்பற்றவைகளை விடாது பேசிக் கொண்டிருந்தாலோ, தம்முடைய அல்லது பிற உறுப்பினர்களுடைய வாதங்களையே சலிப்புத் தட்டுமாறு திரும்பத்

திரும்பக் கூறிக்கொண்டிருந்தாலோ, அவையின் அலுவலை வேண்டுமென்றே தடை செய்யும் நோக்கத்தோடு பேசிக் கொண்டிருந்தாலோ, அவ்வுறுப்பினரின் அந்நடத்தையை அவையின் கவனத்திற்குக் கொணர்ந்தபின் பேச்சை நிறுத்திக் கொள்ளுமாறு தலைவர் அவ்வுறுப்பினருக்குக் கட்டளையிடலாம்.

86. உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது எனத் தலைவர் கருதினால், அவரை அவையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு கட்டளையிடலாம். அவ்வாறு கட்டளையிடப்பட்ட உறுப்பினர் உடனடியாக அவையிலிருந்து வெளியேறிவிடுவதோடு அன்றி, அன்றைய கூட்டத்திற்கு மீண்டும் வராதிருத்தல் வேண்டும். ஓர் உறுப்பினர் அதே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக இவ்வாறு வெளியேறுமாறு கட்டளையிடப்பட்டால், அக் கூட்டத் தொடர் காலத்திற்கு மேற்படாதவாறு நடக்கவிருக்கும் கூட்டங்களுக்கு வராமலிருக்கும்படி தலைவர் கட்டளையிடலாம். அப்படிக் கட்டளையிடப்பட்ட ஓர் உறுப்பினர் கூட்டங்களுக்கு வராதிருத்தல் வேண்டும். அந்த உறுப்பினர் வெளியேற மறுப்பின், அவரை வலுக்கட்டாயமாக அகற்றும்படி தலைவர் ஆணையிடலாம். அப்படிக் கட்டளையிடப்பட்ட உறுப்பினரின் வராமை, அரசியலமைப்பு 190-வது பிரிவு, 4-வது பகுதியின் படி வராமையைக் குறித்து கணக்கிடுவதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

உறுப்பினரை வெளியேறும்படிக் கட்டளையிடல்

87. அவையில் ஒழுங்கும் அமைதியும் மிகப் பெருமளவிற்கு சீர்குலையுமாயின், தலைவர் அவைக் கூட்டத்தை ஒத்தி வைக்கவோ, ஒரு குறிப்பிட்ட நேரம்வரை. கூட்டத்தை நிறுத்தி வைக்கவோ செய்யலாம்.

கூட்டத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரம்.

அத்தியாயம் 14

சட்டமியற்றல்.

பிரிவு 1.

மேலவையில் முதலில் துவக்கப்படும் சட்ட முன்வடிவுகள்.

88. சட்ட முன்வடிவு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பும் உறுப்பினர் அச் சட்ட முன்வடிவின் பிரதி ஒன்றை அதற்கான காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்க உரையுடன், 5 நாள் முன்னறிவிப்போடு, செயலாளருக்குச் சேர்ப்பிக்க வேண்டும்.

அறிமுகப்படுத்துவதற்கான முன்னறிவிப்பு.

நிதிக்குறிப்பும் செலவினப் பிரிவுகளின் விளக்கமும்.

89. பணச் செலவினை ஏற்படுத்தும் ஒரு சட்ட முன் வடிவோடு நிதிக் குறிப்பு ஒன்று சேர்த்து அனுப்பப்பட வேண்டும்; அது செலவு ஏற்படுத்தும் பிரிவுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்; மேலும் அச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டால், அதனால் ஏற்படக்கூடிய தொடர் செலவு, தொடராச் செலவு—ஆகியவைகளின் மதிப்பீடும் அக்குறிப்பில் காணப்பட வேண்டும்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு அடங்கியுள்ள சட்ட முன் வடிவுகளுக்கு விளக்கக் குறிப்பு.

90. ஒரு சட்ட முன்வடிவில், சட்டமியற்றும் அதிகாரத்தை வேறொருவருக்கு ஒப்படைப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்குமாயின், அச் செயற்குறிப்புகளின் வரையறைகளை விளக்கியும், ஒப்படைப்பு சாதாரணமானதா அல்லது தனித் தன்மை வாய்ந்ததா என்பதைச் சுட்டிக் காட்டியும் ஒரு குறிப்பு சட்ட முன்வடிவுடன் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சட்ட முன் வடிவுகளுக்கு பரிந்துரை அல்லது முன் இசைவு.

91 (1) சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் ஒன்று ஆளுநர் பரிந்துரை அல்லது குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் இன்றி, கொண்டுவரப்பட முடியாது எனத் தலைவர் கருதுவாரேயாயின், அத்தகைய சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் பற்றிய முன்னறிவிப்பு வந்தவுடன், அந்தச் சட்ட முன்வடிவு அல்லது திருத்தத்தை பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்க அதிகாரம் பெற்றவருக்கு தலைவர் அனுப்ப வேண்டும்; அவ்வாறு பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்கப்பட்டாலன்றி, அத்தீர்மானம் அலுவல் பட்டியலில் சேர்க்கப்படக்கூடாது.

(2) ஒரு சட்ட முன்வடிவு அல்லது திருத்தத்திற்கான தீர்மானம் அவ்வாறு ஆளுநர் பரிந்துரை அல்லது குடியரசுத் தலைவர் முன் இசைவு பெறவேண்டிய தீர்மானமா, இல்லையா என்ற ஐயப்பாடு எழின், பரிந்துரை அல்லது முன் இசைவு கொடுக்க வேண்டிய அதிகாரம் பெற்றவரின் முடிவுக்கு தலைவர் அதை அனுப்பவேண்டும்; அவ்வாறு அதிகாரம் பெற்றவர் செய்யும் முடிவே இதில் இறுதியானதாகும்.

சட்ட முன் வடிவை அறிமுகப் படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானம்.

92 (1) ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப்பட்டால், தலைவர், தாம் தகுதியெனக் கருதின், அத்தீர்மானத்தை முன் மொழிபவரையும், எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்களது கருத்தைச் சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு மேற்கொண்டு எவ்வித விவாதமுமின்றி, அவையின் முடிவிற்கு அதை விடவேண்டும்.

(2) அத்தகைய தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டால், சட்ட முன்வடிவு அவைக்கு அறிமுகப்படுத்தப்படலாம்.

93. சட்ட முன்வடிவு அறிமுகமாகியவுடன் கூடிய விரைவில் அது, அதன் காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்க உரையுடன் அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்: வெளியீடு.

எனினும், அவையில் எந்தச் சட்ட முன் வடிவையும் அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானம் இல்லாமலேயே, அச் சட்ட முன்வடிவை அதன் காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்கக் குறிப்போடு அரசிதழில் வெளியிடுமாறு தலைவர் கட்டளையிடலாம். அவ்வாறு வெளியிடப்பட்டால், சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கான அனுமதி கோரும் தீர்மானம் தேவையில்லை. மேலும் அவ்வாறு வெளியிடப்பட்ட சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டால், அது மறுமுறையும் அரசிதழில் வெளியிடப்பட வேண்டியதில்லை.

94. ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் அல்லது அது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானம், அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரைத் தவிர வேறு எந்த உறுப்பினராலும் கொண்டுவரப்படக் கூடாது. மேலும், ஒரு சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக சுற்றனுப்பப்பட வேண்டும் என்ற தீர்மானம், மூலத் தீர்மானத்திற்குத் திருத்தமாகக் கொண்டு வரப்பட்டாலன்றி, அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரைத் தவிர வேறு எந்த உறுப்பினராலும் கொண்டு வரப்படக்கூடாது: சட்ட முன்வடிவுகள் பற்றிய தீர்மானங்கள் கொண்டு வருவோர்.

எனினும், ஒரு சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் அவைக் கூட்டத்திற்கு வர இயலாதிருந்து, மற்றொரு உறுப்பினர் அவரிடம் எழுத்து மூலமாக அதிகாரம் பெற்றிருப்பின், சட்ட முன்வடிவினை ஏனைய கட்டங்களுக்கு நடத்திச் செல்ல அவருக்கு அவை அனுமதி தரலாம்.

95 (1) ஒரு சட்ட முன்வடிவு அரசிதழில் வெளிவந்த பிறகு, எந்நேரத்திலும், சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் 5 நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்து, அச் சட்ட முன்வடிவு பற்றிய கீழ்க்கண்ட தீர்மானங்களில் எவையேனும் ஒன்றைக் கொண்டு வரலாம். அவையாவன — அறிமுகத்திற்குப் பின் வரும் தீர்மானம்.

(அ) அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ; அல்லது

(ஆ) அது அவையின் ஆய்வுக் குழுவிற்கோ, இரு அவைகளின் கூட்டு ஆய்வுக் குழுவிற்கோ பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும்; அல்லது

(இ) அதுபற்றி மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக அது சுற்றனுப்பப்பட வேண்டும்:

எனினும், மேற்கூறிய தீர்மானம் கொண்டு வரப்படும் நாளுக்குக் குறைந்தது இரண்டு நாட்கள் முன்னதாக உறுப்பினர்கள் அனைவருக்கும் அச் சட்ட முன்வடிவின் படிகள் கிடைக்கச் செய்யாவிடின், எந்த உறுப்பினரேனும் அத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். அத் தீர்மானம் கொண்டுவர தலைவர் அனுமதித்தாலன்றி, அவ்வித எதிர்ப்பு ஒப்புக்கொள்ளப் பட்டதாகக் கருதப்படும்.

(2) அவ்விதத் தீர்மானத்தின் மீது, சட்ட முன் வடிவின் மூலக் கருத்தையும், அதன் பிரிவுகள் பற்றியும், பொதுப்படையாக விவாதிக்கலாம்; ஆனால், மூலக் கருத்துக்களை விளக்குவதற்காகவன்றி, அச் சட்ட முன்வடிவின் முழு விவரங்களும் விவாதிக்கப்படலாகாது.

மக்கள் கருத்தறிந்த பின் வரும் தீர்மானங்கள்.

96. ஒரு சட்ட முன்வடிவின் மீது மக்கள் கருத்து அறிவதற்கென அது சுற்றனுப்பப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கிணங்க அது சுற்றனுப்பப்பட்டு, அதன் மீது பொது மக்கள் கருத்து வரப் பெற்றிருந்தால், அதற்குப் பொறுப்புடைய உறுப்பினர் மேற்கொண்டு, அச் சட்ட முன்வடிவை நடத்திச் செல்ல விரும்பினால், அச் சட்ட முன்வடிவு உடனே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை தலைவர் அனுமதித்தாலன்றி, அது ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும்.

ஆய்வுக்குழு அமைத்தல்.

97 (1) சட்ட முன்வடிவிற்குத் தொடர்பான துறைக்குப் பொறுப்புடைய அமைச்சரும், அச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்திய உறுப்பினரும் ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(2) சட்ட முன்வடிவின் மீதான எந்த ஒரு ஆய்வுக் குழுவிலும், அவையின் அனுமதியின்றி, 15 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக் கூடாது. எக்காரணம் கொண்டும் எந்த ஆய்வுக் குழுவிலும் 25 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக் கூடாது. ஆய்வுக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து, அவ்வெண்ணிக்கையைக் குறிப்பிடும் தீர்மானம் மூலம், அவையின் அனுமதி கேட்கப்பட வேண்டும்.

ஆய்வுக் குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கணக்கிடும்போது, அரசியலமைப்பின் 177-வது பிரிவின்படி நியமிக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை.

ஆய்வுக் குழுவின் அமைப்பு

98 (1) ஒரு சட்ட முன்வடிவின் மீதான் ஆய்வுக் குழுவில் இடம் பெற வேண்டிய உறுப்பினர்கள் "இச் சட்ட முன் வடிவு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும்" என்ற தீர்மானம் கொண்டு வரப்படும்போது, மேலவையினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) ஆய்வுக் குழுவில் பணியாற்ற விருப்பமில்லாத எந்த உறுப்பினரையும் அக்குழுவில் நியமிக்கக் கூடாது. ஓர் உறுப்பினர் ஆய்வுக் குழுவில் இடம் பெறவேண்டும் என்று முன்மொழிபவர், அவர் பணியாற்ற விருப்பமுடையவரா என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள வேண்டும்.

(3) ஆய்வுக் குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள், மேலவையில் கொண்டுவரப்படும் தீர்மானத்தின் மீது நியமனம் செய்யப்படுவதின் மூலமாக நிரப்பப்பட வேண்டும்.

ஆய்வுக் குழுவின் தலைவர்.

99 (1) ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை அதன் தலைவராக மேலவைத் தலைவர் நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் அக் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராவிட்டால், குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் குழு உறுப்பினர் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

(2) ஆய்வுக் குழுவின் எந்த உறுப்பினரேனும் வராவிட்டாலும், குழு அமைக்கப்பட்ட பின், அதில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டிருந்தாலும், ஆய்வுக் குழு தன் பணியைத் தொடர்ந்து ஆற்றலாம்.

ஆய்வுக் குழுவின் குறைவெண்.

99-அ. ஆய்வுக் குழுவின் கூட்டம் ஒன்று முறைப்படி அமையவேண்டின், அக் கூட்டத்திற்கு குழுவின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி குறைவெண் ஆகும்.

ஆய்வுக் குழு கூட வேண்டிய இடம்.

100. சட்ட மன்ற மேலவை அமைப்பு எல்லைக்குள் குழுக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். ஆனால் குழு சட்ட மன்ற மேலவை அமைப்பு எல்லைக்கு வெளியே கூடுவதாயின் அது மேலவைத் தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்பட வேண்டும். அவரது முடிவே இறுதியானதாகும்.

உட் குழுக்கள்.

101. ஒரு சட்ட முன்வடிவில் எழும் சிறப்புக்கூறு அல்லது கூறுகளை ஆய்தற்பொருட்டு ஆய்வுக் குழு, உட்குழு ஒன்றினை நியமிக்கலாம். அந்த உட்குழுவிற்கு அனுப்பப்படும் ஆணைக் குறிப்பு, என்னென்ன கூறு அல்லது கூறுகளை அது பரிசீலிக்க வேண்டும் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உட்குழுவின் அறிக்கை ஆய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட வேண்டும்.

ஆய்வுக் குழுவின் விசாரணை செய்யும் அதிகாரம்.

102 (1) ஒரு ஆய்வுக் குழு அதன் ஆய்விலுள்ள பொருளினால் பாதிக்கப்படக் கூடியவர்களின் பிரதிநிதிகள், மற்றும் அப் பொருள் பற்றிய வல்லுநர்கள் ஆகியோருடைய சாட்சியங்களைக் கேட்கலாம்.

(2) இம் மாநிலத்தின் எல்லைக்குள் வாழும் எவரையும் சாட்சியாக வரவழைக்கவும், தேவையெனக் கருதப்படுகிற ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியவைகளைக் கொண்டுவரச் செய்யவும் ஆய்வுக் குழு விரும்பின், அதற்கான எழுத்து மூலமான ஆணையை செயலாளர் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்டவருக்கு அனுப்ப வேண்டும்;

(3) விசாரணைக்கு வரும் சாட்சியை ஆய்வுக் குழு உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி செய்யலாம்.

குழுக் கூட்டத்தில் குழுவில் இடம்பெறாத உறுப்பினர்களும் வெளியார்களும்.

103. (1) ஆய்வுக் குழுவில் உறுப்பினராக இல்லாத ஏனைய உறுப்பினர்கள் ஆய்வின்போது வந்து இருக்கலாம்; ஆனால் அக் குழுவின் விவாதங்களில் பங்கு கொண்டு உரையாற்றவோ, அக்குழுவில் உட்காரவோ கூடாது:

எனினும், அக்குழுவில் உறுப்பினராக இல்லாத ஓர் அமைச்சர், குழுத் தலைவரது அனுமதியின் பேரில், அக் குழுவில் உரையாற்றலாம்.

(2) ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போது வெளியார்கள் அனுமதிக்கப்படக் கூடாது; சாட்சிகளை விசாரணை செய்யும் போது மட்டும் ஆய்வுக் குழுவில் பெரும்பாலானவர்கள் விரும்பினால், வெளியாரை அனுமதிக்கலாம்.

ஆய்வுக் குழுவின் நடைமுறை.

104. மேலவை நடைமுறை விதிகள் ஆய்வுக் குழுவின் நடைமுறைக்கும் பொருந்தும்; ஆனால்

(i) திருத்தத்திற்கான முன்னறிவிப்பு தேவையில்லை,

(ii) தீர்மானமோ திருத்தமோ வழிமொழியப்பட வேண்டியதில்லை,

(ii) குழுத்தலைவரின் இசைவுடன் உறுப்பினர் ஒரு பொருளின் மீது ஒரு தடவைக்கு மேலும் பேசலாம்.

105. ஒரு சட்ட முன்வடிவின் மீதான ஆய்வுக் குழு, அது பொருத்தமானது எனக் கருதும் திருத்தங்களை அச் சட்ட முன்வடிவில் இணைக்கலாம் ; எனினும், அத் திருத்தங்கள் அச் சட்ட முன்வடிவின் பொருளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும் ; ஏதேனும் திருத்தங்கள் அச் சட்ட முன்வடிவின் தலைப்பிற்கு உட்படாதிருப்பின், அத் திருத்தங்களுக்கு ஏற்ப தலைப்பை மாற்றி, அதைத் தனது ஆய்வறிக்கையுடன் அவைக்கு அனுப்ப வேண்டும். திருத்தங்கள் செய்ய ஆய்வுக்குழுவின அதிகார வரம்பு.

106. அவையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும் தீர்மானத்தின்படி அமைக்கப்படும் ஆய்வுக் குழுவிற்கு ஒரு சட்ட முன்வடிவை ஆய்விற்காக அனுப்பிவைத்த பின்பு— அவ்வாய்வுக்குழு தனது அறிக்கையை அளிப்பதற்கு முன்பு —இடையில் எந்த நேரத்திலும், அவ் வாய்வுக் குழுவை நியமித்த ஆணையைப் படித்து, அக் குழுவை விடுவித்து, அச் சட்ட முன்வடிவை வேறொரு ஆய்வுக் குழுவிற்கோ கூட்டு ஆய்வுக் குழுவிற்கோ அனுப்பவேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்படலாம். ஆய்வுக் குழுவை விடுவித்தல்.

107. (1) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட ஒரு சட்ட முன்வடிவின் மீது அக் குழு தனது ஆய்வறிக்கையை அவைக்கு அளிக்க வேண்டும் : ஆய்வுக் குழுவின் அறிக்கை.

எனினும், ஆய்வுக் குழு அச் சட்ட முன்வடிவை மேற் கொண்டு தொடருவது தேவையற்றதெனக் கருதினாலோ, அச் சட்ட முன்வடிவை வேறொரு குழுவிற்கோ, கூட்டு ஆய்வுக் குழுவிற்கோ அனுப்ப வேண்டும் எனக் கருதினாலோ, அதைக் குறித்து ஒரு தனி அறிக்கையை அளிக்கலாம்.

(2) அறிக்கை தொடக்கநிலையிலானதாகவோ, இறுதியானதாகவோ இருக்கலாம் ; தலைமை வகிப்பவர் அதில் கையொப்பமிடவேண்டும்.

(3) மாற்றுக் கருத்துக் குறிப்புகள் இருந்து அவை அக் குழு குறிக்கும் காலத்திற்குள் கிடைக்கப்பெறின், அவை குழுவின் அறிக்கைக்குப் பின் தனியே இணைக்கப்பட வேண்டும்.

108. குழுவின் அறிக்கை, மாற்றுக் கருத்துக் குறிப்பு அல்லது குறிப்புகள் இருப்பின், அவை, குழுத் தலைவரால் ஏற்கப்பட்ட குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள், குழுவினால் சட்ட முன்வடிவு திருத்தப்பட்டிருப்பின் திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு—ஆகியவை அச்சிடப்பட்டு, அவற்றின் படிகள் மேலவையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆய்வுக் குழு வேறுவிதமாக ஆணையிட்டிருந்தாலன்றி, அறிக்கையும், மாற்றுக் கருத்துக் குறிப்பு அல்லது குறிப்புகளும், திருத்தப்பட்ட சட்ட முன் அறிக்கைகளை அச்சிடுதலும் வெளியிடுதலும்.

வடிவும், அரசிதழில் முதலில் சட்ட முன்வடிவு எந்தெந்த மொழிகளில் வெளியிடப்பட்டதோ அம் மொழிகளில் வெளியிடப்பட வேண்டும்.

அவை கூடாத நேரத்தில் அறிக்கையை வெளியிடுதல்.

109. அவை கூடாதிருந்து, குழுவின் அறிக்கை அவையின் முன் வைக்கப்படாமலிருந்தால், மேலவைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுப்பதன் மூலம் அதை அச்சிட்டு வெளியிடுவதற்கான ஆணையை அவர் பிறப்பிக்கலாம். அவ்வாறு வெளியிடப்படின், அவ்வறிக்கை அவையின் அடுத்த கூட்டத் தொடரில் அளிக்கப்பட வேண்டும்.

அறிக்கை அளிக்கப்பட்ட பின் நடைமுறை.

110 (1) ஆய்வுக் குழு தனது அறிக்கையை அளித்தபின்பு அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர்—

(i) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட சட்ட முன் வடிவில் ஆய்வுக்குழு ஏதேனும் திருத்தங்கள் செய்திருந்தால், அத் திருத்தங்களுடன் கூடிய அச் சட்ட முன்வடிவு ;

(ii) சட்ட முன்வடிவில் ஆய்வுக் குழு யாதொரு திருத்தமும் செய்யாதிருப்பின், அறிமுகப்படுத்தப்பட்ட வடிவில் உள்ள அச் சட்ட முன்வடிவு;

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழியலாம்:

எனினும், ஆய்வுக் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றும் சட்ட முன்வடிவு திருத்தப்பட்டிருந்தால் அத் திருத்தங்களோடு கூடிய சட்ட முன்வடிவின் பிரதி ஒன்றும் உறுப்பினர்களுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே கிடைக்கபெறுவிடின், சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்பை எந்த உறுப்பினரும் தெரிவிக்கலாம். அவ்வெதிர்ப்பை நிராகரித்து சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள மேலவைத் தலைவர் அனுமதித்தாலன்றி, அவ்வெதிர்ப்பு ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

(iii) ஆய்வுக் குழுவினால் அறிவிக்கப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு—

(அ) முழுமையாகவோ ;

(ஆ) குறிப்பிட்ட பிரிவுகள் அல்லது திருத்தங்களைப் பொறுத்த மட்டிலோ ;

(இ) வேறு குறிப்பிட்ட வகையில் மாற்றங்கள் செய்வதற்காகவோ;

அந்த ஆய்வுக் குழுவிற்கே மீண்டும் திருப்பியனுப்பப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

(2) ஆய்வுக் குழுவினால் அறிவிக்கப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் கொண்டு வந்தால், அச் சட்ட முன்வடிவு மறு ஆய்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்ற திருத்தத்தை எந்த உறுப்பினரும் கொண்டுவரலாம்.

திருத்தங்கள்.

111. ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அச் சட்ட முன்வடிவிற்கு எந்த உறுப்பினரும் திருத்தம் கொண்டுவரலாம்.

திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு.

112. (1) கொண்டுவரப்படும் திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு சாதாரணமாக சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் அவைக்கூட்டத்திற்குக் குறைந்தது மூன்று முழு நாட்களுக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(2) போதிய நேரம் இருந்தால், கொடுக்கப்பட்ட ஒவ்வொரு திருத்தத்தின் முன்னறிவிப்பையும் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செயலாளர் செய்ய வேண்டும்.

திருத்தங்களின் வரிசை முறை.

113. தலைவர் வேறுவிதமாகப் பணித்தாலன்றி, திருத்தங்கள் சட்ட முன்வடிவின் எந்தெந்தப் பிரிவுகளைச் சார்ந்தவையோ, அந்தந்தப் பிரிவுகளின் வரிசை முறைப்படி ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

சட்ட முன்வடிவை பிரிவு வாரியாக எடுத்துக் கொள்ளுதல்

114. ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறிய பிறகு, தலைவர் பொருத்தமெனக் கருதும் வகையில், அச் சட்ட முன்வடிவை முழுமையாகவோ, பாகங்களாகவோ, அதன் பிரிவு வாரியாக மேலவையின் ஆய்விற்கு வைக்கலாம். சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படின், தலைவர் ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, அப்பிரிவிற்குரிய திருத்தங்கள் விவாதிக்கப்பட்டு முடிவான பின், அப் பிரிவு அல்லது திருத்தப்பட்ட அப் பிரிவு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆகும் என்பதை அவையின் முடிவிற்கு விட வேண்டும்.

பிரிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வரிசை முறை.

115. ஒரு சட்ட முன்வடிவின் பிரிவுகள் கீழ்க்காணும் வரிசை முறையில் ஆய்விற்கு, எடுத்துக்கொள்ளப்படவேண்டும், அதாவது :—

(i) குறுந்தலைப்பைப் பற்றிய பிரிவு நீங்கலாக மற்றப் பிரிவுகள் அவற்றின் வரிசை முறைப்படி,

(ii) இணைப்புகள் அவற்றின் வரிசை முறைப்படி,

(iii) குறுந்தலைப்பைப் பற்றிய பிரிவு,

(iv) முகப்புரை இருப்பின், அதுவும், சட்டமியற்றும் முறையும்,

(v) நெடுந்தலைப்பு.

எனினும், தலைவர் முறையென்று கருதினால், பின்வரும் சில பிரிவுகளின் அல்லது எல்லாப் பிரிவுகளின் ஆய்வும் முடிகிற வரையில், முன்னாலே வருகிற எந்த ஒரு பிரிவின் ஆய்வையும் தள்ளிவைக்கலாம்.

சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றல்.

116 (1) மேலவையில் ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் திருத்தம் ஏதும் செய்யப் படாவிடில், ஆய்வு முடிவுற்றபின் அச்சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழியலாம்.

(2) மேலவையில் சட்ட முன்வடிவு ஒன்று ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கு திருத்தம் ஏதேனும் நிறைவேறினால், அச் சட்ட முன்வடிவின் ஆய்வு முடிவுற்றவுடன் அச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை அக்கூட்டத்திலேயே கொண்டு வருவதற்கு எந்த உறுப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்கலாம். அவ்வித வேண்டுகோள் முறையற்றதென்று தலைவர் கருதினாலன்றி, அச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை அக் கூட்டத்திலேயே கொண்டுவர அனுமதிக்கக்கூடாது. அச் சட்ட முன்வடிவை மேற்கொண்டு ஆய்வதற்கு அடுத்த கூட்டத்தில் கொண்டுவரச் செய்யலாம்.

(3) மேற்கூறியவாறு அச் சட்ட முன்வடிவு மேற்கொண்டு ஆய்விற்காக அடுத்த கூட்டத்தில் கொண்டுவரப் படுகையில், ஏதாவது சொற்பிழைகள் இருப்பின் அவைகளையும், நிறைவேற்றப்பட்ட திருத்தங்களுக்கு முறைப்படி தேவைப்படும் பின் தொடர்பான திருத்தங்களையும் தவிர, வேறு திருத்தங்கள் எதையும் மேலவை செய்யலாகாது.

(4) அவ்வாறு சட்ட முன்வடிவு மேற்கொண்டு விவாதிக்கப்பட்டு ஆய்வு முடிவுறின், அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று முன் மொழியலாம்.

விவாதத்துக்கான வரம்பு

116-அ. சட்ட முன்வடிவு அல்லது திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானத்தின் மீதான விவாதம், அச் சட்ட முன்வடிவு ஏற்கப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான வாதங்கள் அடங்கியதாக மட்டுமே இருக்கவேண்டும். அத்தகைய விவாதத்தின்போது, உறுப்பினர் ஒருவர் அச் சட்ட முன்வடிவின் நுணுக்கமான விவரங்களைத் தமது விவாதத்திற்குத் தேவைப்

படும் அளவிற்கு மேல் விரிவாகக் குறிப்பிடக் கூடாது. அவரது வாதங்கள் பொதுத்தன்மை உடையனவாக இருத்தல் வேண்டும்.

வெளிப்படையாகத் தெரிகிற பிழைகளைத் திருத்தல்.

116-ஆ. ஒரு சட்டமுன்வடிவு மேலவையில் நிறைவேற்றப்பட்ட பிறகு, அச் சட்ட முன்வடிவில் வெளிப்படையாகத் தெரிகிற பிழைகளைத் திருத்தவும், மேலவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருத்தங்களின் பின் தொடர்பான திருத்தங்களைச் செய்யவும் தலைவருக்கு உரிமை உண்டு. அவ்வாறு செய்யப்பட்ட திருத்தங்கள் ''தகவல்'' இதழின் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

சட்ட முன் வடிவுகளின் உறுதியாக்கம்.

117. ஒரு சட்ட முடிவு மேலவையினால் நிறைவேற்றப்பட்டபின் அதன் பிரதி ஒன்று தலைவரால் கையெழுத்திடப்பட்டு, பேரவையின் இசைவு பெறுவதற்காக அந்த அவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

சட்ட முன் வடிவுகள் இசைவுக்கு அனுப்பப்படுதல்.

118. மேலவையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு சட்ட மன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்படின், அது மேலவைத் தலைவராலும், பேரவைத் தலைவராலும் கையெழுத்திடப்பட்டு ஆளுநரது இசைவுக்கு அனுப்பப்படவேண்டும்.

ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன் வடிவுகளை மீண்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுதல்.

119. இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு ஆளுநரால் மேலவைக்கு மறு ஆய்வு செய்யப்படுவதற்காகத் திருப்பி அனுப்பப்படின், எந்தக் கருத்து அல்லது கருத்துக்கள் அல்லது திருத்தங்கள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று ஆளுநர் பரிவுரை செய்துள்ளாரோ அவை மேலவையின்முன் தலைவரால் வைக்கப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு, ஒரு சட்ட முன் வடிவின் திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பு முறைப்படியோ, ஆய்வு செய்வதற்கு வசதியாக இருக்குமென்று தலைவர் கருதும் வேறு வகையிலோ, ஆய்விற்கு மேலவையின் முன் வைக்கப்பட வேண்டும்.

பிரிவு 2.

மேலவையில் துவக்கப்பட்டு பேரவையின் இசைவு பெறாத சட்ட முன்வடிவுகள்.

திருப்பப்பட்ட சட்ட முன் வடிவை துவக்கிய அவை முன் வைத்தல்.

120. மேலவையினால் ஒரு முறை நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு பேரவையின் திருத்தங்களுடன் திரும்பப் பெறப்படுமாயின், திருத்தங்களுடன் கூடிய சட்ட முன்வடிவின் படிகள் மேலவைக் கூட்டம் ஒன்றில் வைக்கப்பட வேண்டும்.

திருத்தங்களை ஆய்வதற்கான முன்னறிவிப்பு.

121. திருத்தங்களுடன் கூடிய சட்ட முன்வடிவு ஒன்று அவைமுன் வைக்கப்பட்ட பிறகு, அரசின் சட்ட முன்வடிவாயின் அமைச்சர் ஒருவரும் வேறு சட்ட முன் வடிவுகளாயின் எந்த உறுப்பினரும் மூன்று நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்த பின்பு, அத் திருத்தங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன் மொழியலாம்.

திருத்தங்களை ஆய்வதற்கான நடைமுறை.

122. திருத்தங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அவற்றை ஆய்வதற்குப் பொருத்தமாக இருக்குமெனக் கருதும் வகையில் தலைவர் அத் திருத்தங்களை அவையின் முன் வைக்க வேண்டும்.

மேலும் தொடர்பான திருத்தங்கள்.

123. பேரவையினால் செய்யப்பட்ட திருத்தங்களின் பொருள் தொடர்பான திருத்தங்களை மேற்கொண்டும் கொண்டு வரலாம்; ஆனால், திருத்தத்தின் விளைவாக மூலச் சட்ட முன்வடிவில் செய்ய வேண்டியிருக்கும் திருத்தமோ, பேரவையினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு பதிலாக அமையும் திருத்தமோ, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படுவதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் அவசியமாகின்ற திருத்தமோ தவிர வேறெந்தத் திருத்தமும் கொண்டுவரப்படலாகாது.

திருத்தங்களின் ஆய்வுக்குப்பிறகு மேற்கொளள்ளப்படவேண்டிய நடைமுறை.

124. (1) பேரவையினால் செய்யப்பட்ட திருத்தங்களை மேலவை ஏற்குமானால், அது குறித்த செய்தி ஒன்று அந்த அவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(2) பேரவையினால் செய்யப்பட்ட திருத்தங்களையோ, அவற்றில் ஏதேனும் ஒன்றையோ மேலவை ஏற்காவிட்டால், அச் செய்தியுடன் சட்ட முன்வடிவு அந்த அவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) பேரவையினால் செய்யப்பட்ட எல்லாத் திருத்தங்களையுமோ, அவற்றில் சில திருத்தங்களையோ மேற்கொண்டு திருத்தங்களுடன் மேலவை ஏற்றுக்கொண்டால், அல்லது பேரவையினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்குப் பதிலாக மேற்கொண்டு திருத்தங்களைத் தெரிவித்தால், திருத்தப்பட்ட வடிவிலுள்ள சட்ட முன்வடிவு அது பற்றிய செய்தியுடன், அந்த அவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(4) பேரவை தனது திருத்தங்களை வலியுறுத்துகிறது என்ற செய்தியுடன் மறுபடியும் சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்பட்டால், மேலவை—

(i) பேரவையால் நிறைவேற்றப்பட்டபடி சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்கலாம், அல்லது

(ii) அச் சட்ட முன்வடிவு காலாவதியாகும்படி விட்டுவிடலாம்.

125. ஒரு சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச் சட்ட முன்வடிவு எந்தக் கால கட்டத்தை அடைந்திருப்பினும், அச் சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறுவதற்கு அவையின் அனுமதியைக் கோரலாம்; அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டால், அச் சட்ட முன்வடிவு சம்பந்தமாக மேற்கொண்டு எந்தத் தீர்மானமும் கொண்டு வரப்படலாகாது.

சட்ட முன் வடிவைத் திரும்பப் பெறல்.

பிரிவு 3.

பேரவையில் துவக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு மேலவையில் வரப் பெறும் பணச் சட்ட முன்வடிவுகள் அல்லாத ஏனைய சட்ட முன் வடிவுகள்.

126. பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு மேலவைக்கு வந்த பிறகு கூடிய விரைவில், அச் சட்ட முன்வடிவின் படிகள் மேலவைக் கூட்டம் ஒன்றில் வைக்கப்பட வேண்டும்.

பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள்.

127. படிகள் அவைமுன் வைக்கப்பட்ட பின்பு, எந்த நேரத்திலும், அரசின் சட்ட முன்வடிவாயின் அமைச்சர் ஒருவரும், வேறு சட்ட முன்வடிவுகளாயின், எந்த உறுப்பினரும் அச்சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என முன்னறிவிப்பைக் கொடுக்கலாம்.

முன்னறிவிப்பு

128. தலைவர் வேறு விதமாகப் பணித்தாலன்றி, அம்மாதிரியான முன்னறிவிப்பு கிடைக்கப்பெற்ற மூன்று நாட்களுக்குள் எந் நாளின் அலுவல் பட்டியலிலும் அத் தீர்மானம் சேர்க்கப்படலாகாது.

ஆய்விற்குஎடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற தீர்மானம்.

129. அலுவல் பட்டியலில் அத் தீர்மானம் சேர்க்கப்பட்ட நாளன்று, அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர், அச் சட்டமுன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழியலாம். அந் நாளிலோ, அத்தீர்மானத்தின் மீதான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ள பிறிதொரு நாளிலோ, சட்ட முன்வடிவின் மூலக் கருத்தையும், அதன் பிரிவுகளையும் பற்றி பொதுப்படையாக விவாதிக்கலாம். ஆனால் மூலக் கருத்துக்களை விளக்குவதற்காகவன்றி, அச் சட்ட முன்வடிவின் முழு விவரங்களும் விவாதிக்கப்படலாகாது.

விவாதம்.

130. அச் சட்ட முன்வடிவு ஏற்கெனவே இரு அவைகளின் உறுப்பினர்கள் கொண்ட கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தாலொழிய, எந்த உறுப்பினரும் அச் சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்

ஆய்வுக் குழுவிற்கு அனுப்புதல்.

என்ற தீர்மானத்தை முன்மொழியலாம்; அத் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின், ஆய்வுக் குழுவிற்கு சட்ட முன் வடிவு அனுப்பப்பட வேண்டும்; மேலவையில் துவக்கப் படும் சட்ட முன்வடிவுகளின் ஆய்விற்காக அமைக்கப்படும் ஆய்வுக் குழுக்களுக்கான விதிகள் இந்த ஆய்வுக் குழுவிற்கும் பொருந்தும்.

ஆய்வும் நிறைவேற்றலும்.

131. சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும் என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்; இதற்கு சட்ட முன்வடிவின் பிரிவுகள், திருத்தங்கள் பற்றிய விதிகளும், சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பட வேண்டிய நடைமுறை விதிகளும் பொருந்தும்.

திருத்தங்களின்றி சட்ட முன் வடிவு நிறைவேற்றப்படல்.

132. திருத்தமின்றி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படு மானால், சட்ட முன்வடிவு எந்தத் திருத்தமுமின்றி மேல வையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற செய்தி சட்ட முன்வடிவின் பிரதி ஒன்றுடன் பேரவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவு.

133. சட்ட முன்வடிவு திருத்தங்களுடன் நிறைவேற்றப் படுமாயின், அத் திருத்தங்களுக்கு பேரவையின் இசைவு வேண்டுகிற செய்தியுடன் அச் சட்ட முன்வடிவு பேரவைக் குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

பேரவையின் ஆய்விற்குப் பிறகான நடைமுறை.

134. மேலவையினால் செய்யப்படும் எல்லாத் திருத்தங் களையும் ஏற்காமலோ, சிலவற்றை மட்டும் ஏற்றோ, சட்ட முன்வடிவை பேரவை நிறைவேற்றுமாயின், அரசிய லமைப்பின் 197-வது பிரிவு 1-வது உட்பிரிவின்படி பேரவையினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப் படும் சட்ட முன்வடிவு மேலவைக்குக் கிடைத்தவுடன், அது அவை முன் வைக்கப்படவேண்டும்.

சட்ட முன்வடிவின் ஆய்விற்கான முன்னறிவிப்பு.

135. அவ்வாறு சட்ட முன்வடிவு அவை முன் வைக்கப் பட்ட பின்பு, அரசின் சட்ட முன்வடிவானால், அமைச்சர் ஒருவரும், வேறு சட்ட முன்வடிவுகளானால் எந்த உறுப்பி னரும், இரண்டு நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்து பேரவை யினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழியலாம்.

இரண்டாவது முறையாக சட்ட முன் வடிவுஆய்வு செய்யப்படும் நடைமுறை.

136. (1) ''பேரவையினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்ற தீர்மானம் நிராகரிக்கப் பட்டால், பேரவையினால் இரண்டாவது முறையாக நிறை

வேற்றப்பட்ட சட்ட முன் வடிவு மேலவையினால் நிராகரிக்கப்பட்டு விட்டது என்ற செய்தி ஒன்றினைப் பேரவைக்கு அனுப்ப வேண்டும்.

(2) ''பேரவையினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், உறுப்பினர் எவரேனும் அச் சட்ட முன்வடிவிற்குத் திருத்தங்கள் கொண்டுவரலாம். அவற்றை ஆய்வதற்குப் பொருத்தமாக இருக்குமெனக் கருதும் வகையில் தலைவர் அத் திருத்தங்களை அவை முன் வைக்க வேண்டும்.

137. அச் சட்ட முன்வடிவு திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டால், பேரவையினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு திருத்தங்களின்றி மேலவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற செய்தியைப் பேரவைக்கு அனுப்ப வேண்டும். சட்ட முன்வடிவு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டால், அத் திருத்தங்களுக்கு பேரவையின் இசைவை வேண்டுகிற செய்தியுடன் சட்ட முன்வடிவு பேரவைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

இரண்டாவது முறையாக ஒரு சட்ட முன்வடிவு முடிவு செய்யப்படல்.

பிரிவு 3-அ.

சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு அங்கிருந்து மேலவைக்கு வரப்பெற்ற பணச் சட்ட முன்வடிவுகள்.

137-அ. பேரவையால் நிறைவேற்றப்பட்ட பணச் சட்ட முன்வடிவு ஒன்று மேலவைக்கு வரப் பெற்ற பின்பு, அச் சட்ட முன்வடிவின் படிகள் அவைமுன் வைக்கப் படவேண்டும்.

பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளை அவை முன் வைத்தல்.

137-ஆ. அவ்வாறு படிகள் அவைமுன் வைக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், அரசின் சட்ட முன்வடிவாயின் அமைச்சர் ஒருவரும், வேறு சட்ட முன்வடிவுகளாயின் எந்த உறுப்பினரும், அச்சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிவதற்கான முன்னறிவிப்பைக் கொடுக்கலாம்.

முன்னறிவிப்பு.

137-இ. தலைவர் வேறு விதமாகப் பணித்தாலன்றி, முன்னறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளாக அலுவல் பட்டியலில் அத்தகைய தீர்மானம் சேர்க்கப்படலாகாது.

ஆய்விற்கான தீர்மானம்

137-ஈ. அம்மாதிரியான தீர்மானம் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பட்ட நாளில் பணச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்

விவாதம்.

புடைய உறுப்பினர், அச் சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழியலாம்.

அந் நாளிலோ, அத் தீர்மானத்தின் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ள பிறிதொரு நாளிலோ, சட்ட முன்வடிவின் மூலக் கருத்தையும், அதன் பிரிவுகளையும்பற்றி பொதுப்படையாக விவாதிக்கலாம் ; ஆனால், மூலக் கருத்துக்களை விளக்குவதற்காகவன்றி, அச் சட்ட முன்வடிவின் முழு விவரங்களும் விவாதிக்கப்படலாகாது.

பிரிவுகளுக்கான பரிந்துரைகளை ஆய்தல்.

137-உ. (1) பணச் சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், சட்ட முன்வடிவின் பிரிவுகள் மீதான விவாதம் அந் நாளிலோ, தலைவர் தீர்மானிக்கும் வேறொரு நாளிலோ எடுத்துக் கொள்ளப்பட்டு, பிரிவுகள் ஒவ்வொன்றும் விவாதிக்கப்படலாம். இந் நிலையில் பேரவைக்குப் பரிந்துரை செய்யும் திருத்தங்கள் சட்ட முன்வடிவின் பிரிவுகளுக்குக் கொண்டுவரப்படலாம். அவை எந்தெந்தப் பிரிவைப் பற்றியவையோ அந்தந்தப் பிரிவு வரிசை முறையில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்:

எனினும், பரிந்துரைகளை வேறு எந்த வரிசை முறையிலும் தலைவர் எடுத்துக்கொள்ளலாம்.

(2) பணச் சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பிரிவுகளின் மீதான விவாதம் இரண்டு நாட்களுக்கு மேற்படாத வகையில் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் எவரேனும் முன்மொழியலாம்.

(3) சட்ட முன்வடிவின் பிரிவுகள் அவையின் வாக்கெடுப்பிற்கு வைக்கப்படலாகா.

பரிந்துரை பற்றிய நடைமுறை.

137-ஊ. தீர்மானங்கள், திருத்தங்கள் ஆகியவற்றிற்கான நடைமுறை விதிகள் அனைத்தும் தேவையான மாற்றங்களுடன், பணச் சட்ட முன்வடிவு தொடர்பான பரிந்துரைகளுக்கும் பொருந்தும் :

எனினும், ஒரு பிரிவு அல்லது அதன் ஒரு பகுதி நீக்கப்படவேண்டும் என்ற பரிந்துரையை ஓர் உறுப்பினர் முன்மொழியலாம்.

137-எ. பணச் சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிராகரிக்கப்படுமாயின், அப் பணச் சட்ட முன்வடிவின் மீதான ஆய்வு மேற்கொண்டு தொடரக் கூடாது. பணச் சட்ட முன்வடிவை பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ள மேலவை மறுத்து விட்டது என்ற செய்தியுடன், அச்சட்ட முன்வடிவு பேரவைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும். ஆய்விற்கான தீர்மானம். நிராகரிக்கப் பட்ட பின் நடைமுறை.

137-ஏ. (1) சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதன் மீதான பரிந்துரை ஏதாயினும் இருந்தால், அது முடிவு செய்யப் பட்ட பின்னர், அச் சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர், "சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழியலாம். சட்டமுன் வடிவு திருப்பி அனுப்பப் படுதல்.

(2) சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின், சட்ட முன் வடிவிற்கு மேலவையில் பரிந்துரை ஏதும் இல்லாவிடில், அச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை பேரவைக்கு மேலவையின் பரிந்துரை ஏதும் இல்லை என்ற செய்தியுடனும், அச் சட்ட முன்வடிவிற்குத் திருத்தங்கள் எவையேனும் மேலவையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தால், அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களைப் பேரவைக்குத் தெரிவிக்கும் செய்தியுடனும், சட்ட முன்வடிவு பேரவைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

138. இந்த அத்தியாயத்தில் கண்டுள்ள முன்னறிவிப்பு கொடுக்க வேண்டிய காலம் அல்லது சட்டமியற்றுதலில் இரு நிலைகளுக்கிடையே உள்ள இடைவெளிக்காலம் இவற்றிற்கான விதிகளை, தளர்த்தி சட்ட முன்வடிவு அல்லது அதன் மீதான ஒரு திருத்தத்தை முன்னறிவிப்பின்றியோ, குறுகிய கால அளவிலோ முன்மொழிய தலைவர், தாம் கருதுகிறபடி அனுமதிக்கலாம். முன்னறிவிப்பைத் தவிர்க்க தலைவரின் அதிகாரங்கள்.

பிரிவு 4.

கூட்டு ஆய்வுக் குழுக்கள்.

139. (1) சட்ட முன்வடிவு ஒன்றினை ஆய்வதற்கு இரு அவைகளின் கூட்டு ஆய்வுக் குழு ஒன்றினை அமைப்பதற்கு பேரவையின் இசைவை தீர்மானம் மூலமாக மேலவை கோரலாம். குழுவின் இரு அவைகளிலிருந்தும் அங்கம் பெற வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையையும், இவ்விதியின் 3-வது உட்பிரிவில் கூறிய விகிதப்படி மேலவையிலிருந்து அங்கம் பெற வேண்டிய உறுப்பினர்களின் பெயர்களையும் அத் தீர்மானத்தில் குறிப்பிட வேண்டும். சட்ட கூட்டு ஆய்வுக் குழுவை அமைத்தல்.

முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரும், அச் சட்ட முன்வடிவிற்குத் தொடர்பான துறைக்குப் பொறுப்புடைய அமைச்சரும் அக்கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

(2) அத்தகைய தீர்மானம் ஒன்று ஏற்கப்படின், கூட்டு ஆய்வுக் குழு அமைப்பதற்கும், அதில் இடம் பெற இருக்கிறவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும், 3-வது உட்பிரிவின் படி தேவைப்படுகிற உறுப்பினர்களை நியமிப்பதற்கும் இசைவு கேட்டு பேரவைக்கு ஒரு செய்தி அனுப்ப வேண்டும்.

(3) கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 45-க்கு மேற்படக்கூடாது ; ஒவ்வொரு கூட்டு ஆய்வுக் குழுவிலும் பேரவை, மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருக்க வேண்டும்.

(4) குழுவின் முதல் கூட்டத்திற்கான காலத்தையும், இடத்தையும் மேலவைத் தலைவர் நிர்ணயிப்பார்.

(5) கூட்டு ஆய்வுக் குழு தானே தனது தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தலைவருக்கு கூடுதல் வாக்கு அளிக்கும் உரிமை கிடையாது. கூட்டு ஆய்வுக் குழுவின் ஆய்விலுள்ள எப்பிரச்சினை குறித்தேனும் வாக்கெடுப்பில் ஏற்போர் எதிர்ப்போர் சமமாக இருப்பின், அப் பிரச்சினை அக் குழுவினால் எதிராக முடிவு செய்யப்பட்டதென கருதப்படும்.

(6) மேற்கூறியவை தவிர, மற்றப்படி, கூட்டு ஆய்வுக் குழு, மேலவை ஆய்வுக் குழுவிற்குப் பொருத்தமான நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

(7) மேலவைச் செயலாளர் அலுவல் முறையில் கூட்டு ஆய்வுக் குழுவின் செயலாளராக இயங்குவார்.

பேரவையில் துவக்கப்படும் சட்ட முன்வடிவு மீதான கூட்டு ஆய்வுக் குழு.

140.- பேரவையில் துவக்கப்படும் சட்ட முன்வடிவு ஒன்றைப் பொறுத்தவரை, அது அரசின் சட்ட முன்வடிவாயின் அமைச்சர் ஒருவரும், வேறு சட்ட முன்வடிவுகளாயின் எந்த உறுப்பினரும், அவ்வாறு கூட்டு ஆய்வுக் குழு அமைப்பதற்கு மேலவையின் இசைவு கேட்கும் செய்தி பேரவையிலிருந்து வந்த பின்னர், கூட்டு ஆய்வுக் குழு அமைப்பதற்கு மேலவை தனது இசைவை பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அக் குழுவில் மேலவையிலிருந்து இடம் பெற வேண்டிய உறுப்பினர்களது பெயர்களைக் கொண்ட ஒரு தீர்மானத்தை முன்மொழியலாம்.

பிரிவு 5.

அரசியலமைப்புக்கான திருத்தத்திற்கு ஏற்பளித்தல்.

அரசியலமைப்பின திருத்தத்திற்கு ஏற்பளித்தல.

140-அ. (1) அரசியலமைப்புக்கான திருத்தத்தை ஏற்று உறுதி செய்ய வேண்டும் என்ற செய்தி பாராளுமன்ற அவை

ஒன்றிலிருந்து வருமாயின், கூடிய விரைவில் அச் சட்ட முன்வடிவுடன் அச் செய்தியின் பிரதி ஒன்றும் அவை முன் வைக்கப்பட வேண்டும்.

(2) சட்ட முன்வடிவுடன் அச் செய்தியின் ஒரு பிரதியை கூடிய விரைவில் மாநில அரசுக்குச் செயலாளர் அனுப்ப வேண்டும்.

அரசியலமைப்புத் திருத்தத்தின் மீதான விவாதம்.

140-ஆ. (1) 140-அ விதியின்படி அச் செய்தி அவைமுன் வைக்கப்பட்ட பின்னர், உறுப்பினர் எவரேனும் 3 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்து அச் சட்ட முன்வடிவால் அரசியலமைப்பில் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தத்திற்கு ஏற்பளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

(2) அவை முன்னவருடன் கலந்தாலோசித்து, அத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நாள் ஒன்றினைத் தலைவர் குறிக்க வேண்டும்.

(3) அத்தகைய தீர்மானத்திற்கு திருத்தம் எதுவும் கொண்டுவரப்படலாகாது.

பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டிய செய்தி.

140-இ. (1) அத் தீர்மானம் அவையினால் நிறைவேற்றப்பட்டால், 140-அ விதியில் குறிப்பிட்ட செய்தியை அனுப்பிய பாராளுமன்றத்தின் அவைக்கு, மேலவை திருத்தத்தை உறுதி செய்வதற்கு ஏற்பளிக்கிறது என்ற செய்தியை அனுப்ப வேண்டும்.

(2) அத் தீர்மானம் அவையினால் நிராகரிக்கப்பட்டால், திருத்தத்திற்கு மேலவை ஏற்பளிக்கவில்லை என்ற செய்தியை மேற் கூறியவாறே அனுப்ப வேண்டும்.

(3) பாராளுமன்றத்தின் ஓர் அவையிலிருந்து வந்த செய்தி அவை முன் வைக்கப்பட்ட கூட்டத் தொடரில், மேற்கூறியபடி தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படாவிட்டால், அச் செய்தியை, தகவல் அனுப்பிய பாராளுமன்ற அவைக்குச் செயலாளர் தெரிவிக்க வேண்டும்.

அத்தியாயம் 15.

ஆளுநரின் அவசரச் சட்டங்கள்.

ஆளுநரின் அவசரச் சட்டத்தின் மீதான விவாதம்

141. (1) அரசியலமைப்பின் 231-வது பிரிவு, (1)-வது உட்பிரிவின்படி ஆளுநர் அவர்களால் ஓர் அவசரச் சட்டம் வெளியிடப்பட்ட பின்னர் கூடியவிரைவில் அது மேலவையின் முன் வைக்கப்பட வேண்டும்.

(2) பேரவையிலிருந்து செய்தி கிடைத்தவுடன், மேலவை உறுப்பினர் எவரேனும், மேலவை மீண்டும் கூடிய ஆறு வாரங்களுக்குள், செயலாளருக்கு ஒருநாள் முன்னறிவிப்புடன் " பேரவையின் தீர்மானத்திற்கு இம் மேலவை இசைவளிக்கிறது " என்று முன்மொழியலாம். அத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுமேயானால், பின்னர் அது ஆளுநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

அத்தியாயம் 16.

தீர்மானங்கள்

தீர்மானத்திற்கான வரையறைகள்.

142. அரசியலமைப்பிலும், இவ்விதிகளிலும் குறிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, இம் மாநில அரசின் அதிகார வரம்பிலுள்ள பொது நலனைக் குறித்த ஒரு பொருள் பற்றி உறுப்பினர் எவரேனும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரலாம்:

எனினும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்படாத எத்தீர்மானமும் அனுமதிக்கப்படலாகாது; அவையாவன :—

(அ) அது தெளிவான, திட்டவட்டமான ஒரே ஒரு பொருளை அல்லது பிரச்சினையைப் பற்றியதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்;

(ஆ) அதில் வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்கள் அல்லது மானக்கேடான கூற்றுக்கள் அடங்கியிருத்தல்கூடாது; ஒருவரது பதவி அல்லது பொது வாழ்வைப் பற்றியல்லாது அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத்தையைப்பற்றியதாக இருத்தல் கூடாது ;

(இ) நீதி மன்றத்தின் விசாரணையில் இருக்கும் ஒரு வழக்கைப் பற்றியதாக அது இருத்தல் கூடாது; மேலும்

(ஈ) அது அவையின் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக இருத்தல் கூடாது.

தீர்மானத்தின் வடிவம்.

143. தீர்மானம் ஒன்று, அரசுக்குச் செய்யப்படும் பரிந்துரையாகவோ, அவையின் கருத்தைத் தெரிவிப்பதாகவோ, ஒரு பொருள் பற்றி அவையின் குழு ஒன்றினை அமைப்பதாகவோ, அதன் பொருளுக்கு ஏற்ற வடிவிலோ அமையலாம்.

தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு.

144. தீர்மானம் கொண்டு வர விரும்பும் ஓர் உறுப்பினர் அவ்வாறு தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான தமது விருப்பத்தைக் குறித்து 15 முழு நாட்களுக்கு முன்னதாகவே முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். அம்

முன்னறிவிப்புடன் தாம் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தின் பிரதி ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்:

எனினும், தொடர்புடைய துறை அமைச்சரின் இசைவைப் பெற்று, 15 நாட்களுக்குக் குறைந்த முன்னறிவிப்புடனும், 25-வது விதியின்படியான குலுக்குச் சீட்டு முறையின்றியும், தலைவர் ஒரு தீர்மானத்தை அலுவல் பட்டியலில் சேர்க்க அனுமதிக்கலாம் ; அப் பட்டியலில் அதன் வரிசை முறையையும் நிர்ணயிக்கலாம்.

தீர்மானங்களை அனுமதிப்பதைத் தலைவர் முடிவு செய்தல்.

145. ஒரு தீர்மானம் அனுமதிக்கத்தக்கதா என்பதைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். ஒரு தீர்மானம் அல்லது அதன் ஒரு பகுதி இவ்விதிகளுக்கு முரணானதென்று தலைவர் கருதினால், அதைத் திருத்த சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு, தலைவர், தாம் கருதுகிறபடி, வாய்ப்பு அளிக்கலாம் அல்லது அத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கலாம்.

146. (1) ஒரு தீர்மானம் எவ்வுறுப்பினர் பெயரில் அலுவல் பட்டியலில் இடம் பெறுகிறதோ, அவ்வுறுப்பினர் அழைக்கப்படும்போது—

தீர்மானத்தைக் கொண்டு வருதலும் திரும்பப் பெறுதலும்.

(அ) அவர் அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் ; அவ்வாறு திரும்பப் பெறும்போது, அதைத் திரும்பப் பெறுவதாக மட்டுமே கூறலாம் ; அல்லது

(ஆ) அத் தீர்மானத்தை முன்மொழியலாம்.

(2) அழைக்கப்படும்போது, அவ்வுறுப்பினர் அவையில் இல்லாதிருப்பின், அவர் பெயரிலுள்ள அத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டுவிட்டதாகக் கருதப்படும்:

எனினும், உறுப்பினர் ஒருவர் அழைக்கப்படுகையில் அவர் இல்லாதிருப்பின், மற்றொரு உறுப்பினர் அவரிடம் எழுத்து மூலமாக அதிகாரம் பெற்றிருப்பின் தலைவரின் முன் அனுமதியுடன், அவரது பெயரிலுள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.

(3) மேற்கூறிய உட்பிரிவு (1) (அ)-வின்படி திரும்பப் பெறப்பட்ட அல்லது உட்பிரிவு (2)-இன்படி திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்ட தீர்மானம் ஒன்றைப் பிறிதோர் உறுப்பினர் முன்மொழிய மேலவை அனுமதிக்கலாம்.

திருத்தங்கள்.

147. தீர்மானம் ஒன்று முன்மொழியப்பட்ட பிறகு அதற்கான திருத்தம் ஒன்றை, தீர்மானங்களை அனுமதிப்பதற்கான வரையறைகள் அனைத்திற்கும் உட்பட்டு, எந்த உறுப்பினரும் கொண்டுவரலாம்.

திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு 148. (1) தீர்மானத்தின் விவாதத்திற்கென குறிப்பிடப்பட்ட நாளுக்கு இரண்டு முழு நாட்களுக்கு முன்னரே திருத்தத்தின் முன்னறிவிப்பு செயலாளருக்கு அனுப்பப்படாதிருந்தால், அத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு எந்த உறுப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்கலாம். மேலவைத் தலைவர் தனது அதிகாரத்தை உபயோகித்து, இத் துணை விதியைத் தளர்த்தி, திருத்தத்தைக் கொண்டுவர அனுமதித்தாலன்றி, உறுப்பினர் தெரிவிக்கும் எதிர்ப்பு ஒப்புக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

(2) போதிய நேரம் இருப்பின், ஒவ்வொரு திருத்தத்தையும், அச்சிட்டோ, வேறுவகையில் படிகள் எடுத்தோ உறுப்பினர்களுக்குக் கிடைக்க செயலாளர் வகை செய்ய வேண்டும்.

தீர்மானத்தைப் பிரித்தல். 149. விவாதிக்கப்பட்ட தீர்மானம் பல பகுதிகள் அடங்கியதாக இருப்பின், அதைத் தனித்தனிப் பகுதியாகப் பிரித்து, ஒவ்வொன்றையுமோ, ஒன்றை மட்டுமோ தனியாக தலைவர் தமது கருத்துப்படி வாக்கெடுப்பிற்கு விடலாம்.

பிரதியை அரசுக்கு அனுப்புதல். 150. மேலவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதி ஒன்று அரசுக்குச் செயலாளரால் அனுப்பப்பட வேண்டும்.

அத்தியாயம் 17

நிதி பற்றிய அலுவல்

நிதிநிலை அறிக்கையை அளித்தல். 151. (1) ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசு மதிப்பிடுகிற அல்லது எதிர்பார்க்கின்ற வரவு - செலவு களைக் கொண்ட நிதி நிலை அறிக்கை ('' நிதிநிலை அறிக்கை '' என்று பின் விதிகளில் குறிக்கப்படும்) ஆளுநரால் குறிப்பிடப்பட்ட நாளன்று மேலவையில் அளிக்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறு அளிக்கப்படும் நாளன்று மேலவையில் அதைப்பற்றிய விவாதம் எதுவும் இருத்தலாகாது.

நிதிநிலை அறிக்கை பற்றிய பொது விவாதம். 152. அவை முன்னவருடனும் அலுவல் ஆய்வுக் குழுவுடனும் கலந்தாலோசித்து, நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கெனப் போதிய நாட்களை வரையறுத்து, தலைவர் ஒதுக்க வேண்டும்.

விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல். 153. (1) நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்கு 152-வது விதியின்படி ஒதுக்கப்பட்ட நாட்களில், நிதிநிலை அறிக்கைபற்றி மொத்தமாகவோ, அதில் உள்ளடங்கிய ஏதேனும் ஒரு கொள்கை பற்றியோ மேலவை விவா

திக்கலாம்: ஆனால், அவ்வறிக்கையின் மீது தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படவோ, நிதிநிலை அறிக்கை மேலவையின் வாக்கெடுப்பிற்கு வைக்கப்படவோ கூடாது.

(2) விவாதத்தின் இறுதியில் பொதுவாக பதிலளிக்கும் உரிமை நிதியமைச்சருக்கு உண்டு.

153-அ. (1) மேற்கூறிய 152-வது விதியின்படி ஒதுக்கப்பட்ட நேரம் அன்றி, மேலவைத் தலைவர், அவை முன்னவருடனும், அலுவல் ஆய்வுக் குழுவுடனும் கலந்தபின்னர், அலுவல் ஆய்வுக் குழுவினால் விவாதத்திற்கெனத் தீர்மானிக்கப்பட்ட அரசுத் துறைகளின் கொள்கைக் குறிப்புகளின் மீது விவாதம் நடத்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களை ஒதுக்கலாம். கொள்கைக் குறிப்புகளின் மீது விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்.

(2) அவ் விவாதத்தின் இறுதியில் பதிலளிக்க தொடர்புடைய அமைச்சருக்கு உரிமை உண்டு.

(3) '' இக் கொள்கைக் குறிப்பு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் '' என்று அமைச்சரால் முன்மொழியப்படும் தீர்மானத்தைத் திருத்தத்திற்கோ, வாக்கெடுப்பிற்கோ உட்படுத்தலாகாது.

154. (1) அரசியலமைப்பிற்குட்பட்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பற்றிய நடைமுறை, பொதுவாகத் தலைவர் தேவையெனக் கருதுகின்ற மாற்றங்களுடன் கூடிய ஏனைய சட்ட முன்வடிவுகள் பற்றிய நடைமுறை போன்றே இருத்தல் வேண்டும். நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு.

(2) தொகையை மாற்ற அல்லது அளிக்கப்பட்ட மானியத்தின் நோக்கத்தை மாற்ற, அல்லது மாநிலத் தொகுப்பு நிதியின்மீது சாற்றப்பட்ட செலவினங்களின் தொகையை மாற்றக் கூடிய வகையில் யாதொரு பரிந்துரையும் அத்தகைய சட்ட முன்வடிவின் பிரிவுகளுக்குக் கொண்டு வரப்படலாகாது.

155. (1) ஒரு நிதியாண்டிற்குள் எப்போதாகிலும் அரசியலமைப்பின் 205-வது பிரிவின்படி, துணை அல்லது கூடுதல் அல்லது அதிகச் செலவுக்கான அறிக்கை ஒன்றினை மேலவையில் அளிப்பதற்கான நாள் ஒன்றினை ஆளுநர் குறிப்பிடலாம். துணை அல்லது கூடுதல் அல்லது அதிக நிதி அறிக்கை.

(2) அவ்வாறு அளிக்கப்பட்ட நாளன்று அவையில் அதைப்பற்றிய விவாதம் எதுவும் இருத்தலாகாது.

(3) துணை அல்லது கூடுதல் அல்லது அதிகச் செலவுக்கான அறிக்கையின் மீதான விவாதத்திற்கு, அலுவல் ஆய்வுக்

குழுவுடன் கலந்தாலோசித்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களைத் தலைவர் ஒதுக்கலாம்.

(4) துணை அல்லது கூடுதல் அல்லது அதிகச் செலவுக்கான அறிக்கையின் மீது தீர்மானம் எதுவும் கொண்டுவரப் படலாகாது ; அது மேலவையின் வாக்கெடுப்பிற்கு வைக்கப் படலாகாது.

அத்தியாயம் 18.

அவையின் குழுக்கள்.

(1) உரிமைக் குழு.

குழு அமைப்பு. 156. (1) அவை முன்னவர், மேலவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற்கிணங்க, தலைவரால் வகுக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைப்படி, அவரால் குறிப்பிடப்படும் நாளில், தேர்ந்தெடுக்கப்படும் வேறு ஒன்பது உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய உரிமைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் நிதியாண்டின் இறுதிவரை பதவி வகிப்பர்.

எனினும், நடப்பு நிதியாண்டு முடிவுற்றாலும், புதியதாக ஒரு குழு அமைக்கப்படும் வரையில், அவர்கள் தொடர்ந்து பதவி வகிப்பர்.

(2-அ). நடப்பு நிதியாண்டு முடிவதற்குள், வரும் நிதி யாண்டிற்கான குழுவை அமைப்பதற்கான தேர்தல் நடைபெற வேண்டும்.

(3) தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள், கூடிய விரைவில், உட்பிரிவு (1)ல் கண்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேர்ந்தெடுக்கப் படுகிறாரோ அவரது எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிப்பார்.

(4) குழு உறுப்பினர்களில் ஒருவர் இக் குழுவின் தலைவராக மேலவைத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். கூட்டத்திற்கு அவர் வராதபோது, குழுவினால் குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

(5) குழுவின் கூட்டம் முறையாக இயங்குவதற்கு, குழுவின் தலைவர் அல்லது தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருக்க வேண்டும்.

157. உரிமை பற்றிய பிரச்சினையை எழுப்பும் முன்னறிவிப்பு, எந்நாளில் எழுப்பப்படுகிறதோ அந்த நாள் கூட்டம் தொடங்குவதற்குக் குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, அதுபற்றிய சுருக்கமான குறிப்புடன் (1) தலைவர், (2) அவை முன்னவர், (3) செயலாளர் ஆகியோரிடம் சேர்ப்பிக்கப்பட்டு, அதை எழுப்புவதற்கு தலைவரின் இசைவைப் பெறவேண்டும்: எழுப்பப்பட விருக்கும் பிரச்சினை பற்றி முன்னறிவிப்பு

எனினும், அவை நடந்து கொண்டிருக்கும் போது எழும் உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரை, விதிகளின்படி தேவைப்படும் முன்னறிவிப்பின்றி, தலைவர் தாம் தகுதியெனக் கருதும் வகையில் அப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

158. உறுப்பினர் எழுப்ப இருக்கும் பிரச்சினை அவையின் உரிமையைப் பற்றியதாக உள்ளது என்று தலைவர் கருதினால், அதை எழுப்புவதற்கு அவர் ஒப்புதல் அளிக்கலாம். பிரச்சினையை எழுப்ப தலைவரின் இசைவு.

159. உரிமை பற்றிய ஒரு பிரச்சினை, வினாக்களுக்குப் பின்னரும், அன்றைய அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பிற அலுவல்கள் தொடங்கப்படுவதற்கு முன்னரும், எழுப்பப்பட வேண்டும்: பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம்.

எனினும், அவை நடந்துகொண்டிருக்கும்போது, எழும் உரிமை பற்றிய பிரச்சினை மற்ற எல்லா அலுவல்களையும் விட முன்னிடம் பெறும்.

160. உரிமைப் பிரச்சினையை எழுப்பும் உரிமை பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டது— உரிமைப் பிரச்சினை பற்றிய வரையறைகள்.

(1) உரிமையை மீறியதாகக் கூறப்படும் செயல் மிக அண்மையில் நடந்ததாக இருக்க வேண்டும்.

(2) அவ்வாறு கூறப்படும் செயல் உரிமையை மீறுவதாக மேலெழுந்தவாரியாகக் காணப்பட வேண்டும்.

161. உறுப்பினர் ஒருவர் உரிமைப் பிரச்சினை ஒன்றை அவையில் எழுப்ப தலைவரால் அனுமதிக்கப்படுவாரேயானால், தலைவர், அப் பிரச்சினையை அவைக்குப் படித்துக் காட்டி, எழுப்பப்படும் பிரச்சினை மேலெழுந்தவாரியாக ஆயும்போது அவையுரிமையை மீறியுள்ளதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும். பிரச்சினை பற்றி தலைவர் முடிவு.

162. மேலெழுந்தவாரியாக ஆயும்போது அதில் உரிமைப் பிரச்சினை அடங்கியுள்ளது என்று தலைவர் முடிவு செய்வாரேயானால், உரிமை மீறப்படுகிறது எனக் கொண்டுவரப்படும் தீர்மானம்.

பிரச்சினை உரிமைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றோ, அது அவையினாலேயே நேர்முகமாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றோ ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எந்த உறுப்பினரையும் அவர் அனுமதிக்கலாம்.

குழு உறுப்பினர்களின் தகுதியின்மை.

162–அ. (1) உரிமை பற்றிய பிரச்சினையின் ஆய்வைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு அக் குழுவின் உறுப்பினர் எவருக்கேனும், தனித்தோ, நேரடியாகவோ அப்பிரச்சினையில் தொடர்பு இருப்பின், பிரச்சினை ஆய்வு செய்யப்படும் குழுக் கூட்டத்தில் அவர் இருத்தலாகாது.

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டவாறு குழு உறுப்பினரில் எவருக்கேனும் தனித்தோ, நேரடியாகவோ தொடர்பு உள்ளதா என்பது குறித்து குழுவின் தலைவர் முடிவெடுக்க வேண்டும் ; அது குழுவின் தலைவரைப் பற்றியதாகவே இருப்பின், அப் பிரச்சினை மேலவைத் தலைவரின் முடிவுக்கு அனுப்பப்பட வேண்டும் ; அவரது முடிவே இறுதியானதாகும்.

குழுவின் நடைமுறை.

163. பிரச்சினை ஒன்று உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டால், குழு, கூடியவரையில் மேலவை ஆய்வுக் குழுவிற்கென வகுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி செயல்பட்டு, அவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க வேண்டும்.

அறிக்கை அளிக்கப்பட்ட பின் நடைமுறை.

164. (1) உரிமைக் குழுவின் அறிக்கை, குழுவின் தலைவராலோ, அவர் இல்லாத போது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற குழு உறுப்பினர் ஒருவராலோ, மேலவைக்கு அளிக்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறு அறிக்கை அளிக்கப்பட்ட பின் கூடிய விரைவில், '' அவ்வறிக்கை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் '' என்ற தீர்மானம் அவை முன்னவராலோ, குழுத் தலைவராலோ, குழுவின் உறுப்பினர் ஒருவராலோ கொண்டுவரப்படலாம்.

(3) மேலே குறிப்பிட்ட அறிக்கை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற தீர்மானத்திற்கு திருத்த முன்னறிவிப்பை, பொருத்தமானது எனத் தலைவர் கருதும் வடிவத்தில் உறுப்பினர் எவரேனும் கொடுக்கலாம்:

எனினும், வரம்பு எதுவுமின்றியோ, ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பற்றியோ மறு ஆய்வு செய்யப்படுவதற்காக அப் பிரச்சினை குழுவிற்கு மறுபடி அனுப்பப்பட வேண்டுமென்ற ஒரு திருத்தமும் முன் மொழியப்படலாம்.

(4) அறிக்கை ஆய்விற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், குழுத் தலைவரோ, குழு உறுப்பினர் ஒரு

வரோ; வேறு எந்த உறுப்பினரோ அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளை மேலவை ஏற்றுக்கொள்கிறது அல்லது நிராகரிக்கிறது அல்லது திருத்தங்களோடு ஏற்றுக்கொள்கிறது என்று முன்மொழியலாம்.

164—அ. உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படாத உரிமைப் பிரச்சினை ஒன்றினை, தக்கதொரு தீர்மானத்தின் மேல், அவையே, தனது கருத்துப்படி, நேரடியாக, தகுதியெனக் கருதும் வகையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளலாம். உரிமைப் பிரச்சினையை அவை நேரடியாக ஆய்வு செய்தல்.

165. இவ் விதிகளில் வேறு எவ்விதமாயிருந்தாலும் கூட, உரிமைப் பிரச்சினை ஒன்றினை விசாரித்து, ஆய்ந்து, அறிக்கை அளிப்பதற்காக உரிமைக் குழுவிற்கு தலைவர் தாமாகவே அனுப்பலாம். பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு தலைவரே அனுப்புதல்.

(2) அலுவல் ஆய்வுக் குழு.

166. (1) அலுவல் ஆய்வுக் குழு என்ற குழு தலைவரால் அவ்வப்போது அமைக்கப்படும். அக்குழு, தலைவர் உட்பட ஒன்பதுக்கு மேற்படாத உறுப்பினர்கள் கொண்டதாக இருக்கவேண்டும். அக்குழுவிற்கு மேலவைத் தலைவர் தலைவராவார். குழுவின் அமைப்பு.

(2) உட்பிரிவு (1) ன்படி நியமிக்கப்பட்ட குழு ஓராண்டுக் காலத்திற்கோ, புதிதாக ஒரு குழு அமைக்கப்படும் வரையிலோ இயங்கும்.

(3) எக்காரணத்தினாலாவது குழுவின் ஒரு கூட்டத்திற்கு தலைவர் தலைமை வகிக்க இயலாவிடின், அவர் அக்கூட்டத்திற்கான தலைவரை நியமிக்க வேண்டும்; அவர் வராதிருப்பின், குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

(4) குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் தலைவரால் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகிறாரோ அவரது எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிப்பார்.

167. குழுவின் கூட்டம் முறையே இயங்குவதற்கு குறைந்தது மூவர் இருக்க வேண்டும். குறைவெண்.

168. (1) அவை முன்னவரைக் கலந்தாலோசித்து, தலைவரால் குறிக்கப்பட்ட அரசின் சட்ட முன்வடிவுகளின் விவாதத்திற்கு நேரம் ஒதுக்குவதும், ஒவ்வொரு கூட்டத்திற்கும் நேரத்தை ஒதுக்கிப் பரிந்துரை செய்வதும் இக்குழுவின் அலுவலாகும்: குழுவின் அலுவல்கள்.

(2) சட்டமுன்வடிவின் ஒவ்வொரு கட்டமும் எந்நேரத்திற்குள் முடிய வேண்டுமென்று அலுவல் அட்டவணையில் குறிக்கும் உரிமை இக்குழுவிற்கு உண்டு.

(3) மேலவைத் தலைவரால் அவ்வப்போது ஒதுக்கப்படும் அலுவல்களையும் இக்குழு கவனிக்கும்.

அவைக்கு அறிவித்தல். 169. சட்ட முன்வடிவு ஒன்றுக்கோ, பலவற்றுக்கோ விவாதத்திற்கென குழுவினால் நிர்ணயிக்கப்படும் கால அட்டவணை தலைவரால் அவைக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை. 170. அவ்வாறு அறிக்கை அவைக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், கூடியவிரைவில் தலைவரால் குறிப்பிடப்படும் குழு உறுப்பினர் ஒருவரால் " அலுவல் ஆய்வுக் குழுவினால் சட்ட முன்வடிவுகளின் விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட கால அட்டவணையை இவ்வவை ஏற்றுக் கொள்கிறது " என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டு, அது அவையினால் ஏற்கப்படுமேயானால், அது அவையின் ஆணையைப் போன்று செயலாக்கப்பட வேண்டும்.

குறித்த நேரத்தில் அலுவல்களை முடித்தல். 171. 170 வது விதியின்படி பிறப்பிக்கப்பட்ட அவையின் ஆணையில் குறித்த காலவரையறையில், ஒரு சட்ட முன்வடிவின் எந்தக் கட்டமாகிலும் முடிவுறாதிருப்பின், தலைவர் அச்சட்ட முன்வடிவின் அக்கட்டம் முடிவுறுவதற்கு வேண்டிய வினாக்களை அவையின் வாக்கெடுப்பிற்கு உடனடியாக வைத்து அக்கட்டத்தை முடிவுறச் செய்ய வேண்டும்.

அலுவல் வரிசையில் மாற்றம். 172. அவை முன்னவரின் வேண்டுதலின் பேரில், அவை அனுமதித்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவல் வரிசையில் எந்த மாற்றமும் செய்யப்படக்கூடாது.

(3) அவைக் குழு

குழுவின் அமைப்பும் அலுவலும். 173 (1). மேலவை உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகளை ஆய்ந்து ஆலோசனை கூறுவதற்காக அவைக் குழு ஒன்று மேலவைத் துணைத் தலைவரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்படும். மேலும் இக் குழுவிற்கு, ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற்கிணங்க, மேலவைத் தலைவரால்வகுக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைப்படி, அவரால் குறிப்பிடப்படும் நாளில், ஆறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேற்குறித்த உறுப்பினர்களைத்தவிர, தலைவர், தாம் கருதுகிறபடி

இரண்டு உறுப்பினர்களை நியமனம் செய்யலாம்.

(2) அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நிதியாண்டின் இறுதிவரை பதவி வகிப்பர் ; மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவோ, நியமிக்கப் படவோ அவர்கள் தகுதியுடையவராவர். நடப்பு நிதி யாண்டு முடிவதற்குள் வரும் நிதியாண்டிற்கான குழுவை அமைப்பதற்கான தேர்தலும், நியமனமும், நடைபெற வேண்டும்:

எனினும், நடப்பு நிதியாண்டு முடிவுற்றாலும், புதியதாக ஒரு குழு அமைக்கப்படும் வரையில், குழுவின் உறுப்பினர்கள் தொடர்ந்து பதவி வகிப்பர்.

(4) அரசு உறுதி மொழிக் குழு.

174. அவையில் அவ்வப்போது அமைச்சர்களால் அளிக்கப்படும் உறுதிமொழிகள், வாக்குறுதிகள், செயல் ஏற்புகள் முதலியவற்றை கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஆய்ந்து அவைக்கு அறிக்கை கொடுக்க, இவ்விதிகளுக்கு உட்பட்டு, அரசு உறுதிமொழிக் குழு ஒன்று அமைக்கப்படும் :— குழுவின் அலுவல்கள்.

(அ) அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன ?

(ஆ) நிறைவேற்றப்பட்ட உறுதிமொழிகள், நிறைவேற்றுவதற்குத் தேவையான குறுகியகால அளவிற்குள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா ?

175 (1). இக் குழுவிற்கு எழுவருக்கு மேற்படாத உறுப்பினர்கள் மேலவைத் தலைவரால் நியமிக்கப்படவேண்டும். குழுவின் அமைப்பு.

(2) இக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓராண்டு அல்லது புதிய குழு அமைக்கப்படும்வரையாகும்.

176. (1) குழுவின் தலைவர், மேலவைத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும். குழுவின் தலைவர்.

(2) எக் கூட்டத்திற்கேனும் குழுவின் தலைவர் வராதிருப்பின், குழுவின் அந்தக் கூட்டத்திற்குத் தலைவராகச் செயற்பட மற்றொரு உறுப்பினரை குழு தேர்ந்தெடுக்க வேண்டும்.

177. குழுவின் கூட்டம் முறையாக இயங்குவதற்கு, குழுவின் தலைவர் அல்லது கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது மூவர் இருக்கவேண்டும். குறைவெண்.

தலைவரின் கூடுதல் வாக்கு.

178. எப் பிரச்சினை மீதாகிலும் வாக்கெடுப்பில் வாக்குகள் சமமாக இருப்பின், குழுத் தலைவருக்கு இரண்டாவது அல்லது கூடுதல் வாக்கு அளிக்கும் உரிமை உண்டு.

குழுவின் அறிக்கை.

179. இக்குழு அவ்வப்போது அறிக்கை ஒன்றை அவைக்கு அளிக்க வேண்டும்.

அறிக்கை அளித்தல்.

180. குழுவின் அறிக்கை குழுவின் தலைவரால் அல்லது அவருடைய சார்பில் குழுவின் பிறிதோர் உறுப்பினரால் அவைக்கு அளிக்கப்பட வேண்டும்.

பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.

181. மேற்கூறியவற்றைத்தவிர மற்றப்படி மேலவையின் ஆய்வுக்குழு விதிகள் இக் குழுவிற்கும் பொருந்தும்."

(5) பொதுக் கணக்குக் குழு.

பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல்.

182. (1) பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற, ஐந்து அல்லது பேரவை விதிகளில் குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைப்படி மேலவை உறுப்பினர்களை ஒவ்வொரு நிதியாண்டிற்கும், அதற்கெனக் கொண்டு வரப்படும் தீர்மானத்தின்மீது மேலவை நியமிக்கலாம்.

(2) தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் கூடிய விரைவில், உட்பிரிவு (1)-ல் கண்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகிறுரோ அவரது எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிப்பார்.

(6) மதிப்பீட்டுக் குழு.

பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல்.

183 (1) பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற, ஐந்து அல்லது பேரவை விதிகளில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைப்படி, மேலவை உறுப்பினர்களை ஒவ்வொரு நிதியாண்டிற்கும், அதற்கெனக் கொண்டுவரப்படும் தீர்மானத்தின்மீது மேலவை நியமிக்கலாம்.

(2) தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் கூடிய விரைவில், உட்பிரிவு (1)-ல் கண்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகிறுரோ அவரது எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிப்பார்.

(7) துணைச் சட்ட ஆய்வுக் குழு

184 (1) பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற, ஐந்து அல்லது பேரவை விதிகளில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைப்படி மேலவை உறுப்பினர்களை ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அதற்கெனக் கொண்டுவரப்படும் தீர்மானத்தின்மீது மேலவை நியமிக்கலாம். பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக்குழுவில் பணியாற்ற உறுப்பினர்களை நியமித்தல்.

(2) தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் உட்பிரிவு (1)-ல் கண்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகிறாரோ அவரது எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிப்பார்.

அத்தியாயம் 19.

ஆளுநர்-மேலவை இடையே செய்தித் தொடர்பு

185 (1) உரையின் மூலமாகவோ,

(2) தலைவருக்கு எழுத்து மூலமாகவோ ஆளுநர் மேலவைக்குச் செய்தி அனுப்பலாம். ஆளுநரிடமிருந்து மேலவைக்கு வரும் செய்திகள்.

186. மேலவையில் அதற்கென்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறிய பின் தலைவர் எழுத்து மூலமாக அதை ஆளுநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலவையிலிருந்து ஆளுநருக்கு அனுப்பப்படும்செய்தி.

அத்தியாயம் 20.

மேலவைக்குக் கொடுக்கப்படும் மனுக்கள்

187. மேலவைக்குக் கொடுக்கப்படும் மனுக்கள்— வடிவமும் உட்பொருளும்.

(அ) அப்போது மேலவையின் உடனடி ஆய்வில் இருக்கும் பொருள் பற்றியதாக இருக்க வேண்டும்;

(ஆ) அவையின் உறுப்பினர்களுக்கு முகவரியிட்டதாக இருக்க வேண்டும்;

(இ) தேதியிடப்பட்டும் முறையிடுபவரின் கையெழுத்திடப்பட்டும் இருக்க வேண்டும்;

(ஈ) தன்னடக்கம் உள்ள மரியாதையான வாசகத்தோடு அமைய வேண்டும்;

(உ) அரசின் பொதுப் பணத்திலோ, அரசின் பொது வருமானத்தின்மீதோ சுமத்தப்படும் செலவை உண்டாக்கக் கூடியதாக இருக்கக் கூடாது.

மனுக்களை அளிக்கும் முறை.

188 (1) மேலவைக்கு எழுதப்படும் மனு, மேலவை உறுப்பினரைத் தவிர வேறு எவராலும் அளிக்கப்படக் கூடாது.

(2) மனு ஒன்றைக் கொடுக்க விரும்பும் உறுப்பினர் ஒருவர் அம்மனுவை முன்கூட்டியே தலைவருக்குக் காண்பித்து, அவரது இசைவைப் பெற வேண்டும். அவ்வாறு தலைவரின் இசைவைப் பெற்ற பின்னர், அவரால் நிர்ணயிக்கப்படும் நாள் ஒன்றில், வினா நேரத்திற்குப் பின்னரும், பிற அலுவல்கள் தொடங்குவதற்கு முன்னரும் அதை அவர் அளிக்கலாம்.

மனு கொடுக்கும் உறுப்பினரது கடமைகள்.

189. மேலவைக்கு மனு கொடுக்கும் ஒவ்வொரு உறுப்பினரும், மனு யாரிடமிருந்து வந்துள்ளது, அதில் கையெழுத்திட்டோரின் எண்ணிக்கை, அதில் கண்டுள்ள முக்கியமான சாட்டுரைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை வாசிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பின்பற்றப் பட வேண்டிய நடைமுறை.

